# நந்தி ரகசியம்






இந்திரா செளந்தர்ராஜன்


நந்தி
ரகசியம்





Pustaka
Digital Media

http://www.pustaka.co.in

# நந்தி ரகசியம்
# Nandhi Ragasiyam

Author:

**இந்திரா சௌந்தர்ராஜன்**

**Indira Soundarajan**

For more books

http://www.pustaka.co.in/home/author/indira-soundarajan-novels

**Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.**

**All other copyright © by Author.**

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

பொருளடக்கம்

அத்தியாயம் 1

அத்தியாயம் 2

அத்தியாயம் 3

அத்தியாயம் 4

அத்தியாயம் 5

அத்தியாயம் 6

அத்தியாயம் 7

அத்தியாயம் 8

அத்தியாயம் 9

அத்தியாயம் 10

அத்தியாயம் 11

அத்தியாயம் 12

அத்தியாயம் 13

# என்னுரை

இந்த புத்தகத் தொகுப்பில் நந்தி ரகசியம் எனும் பெயரில் ஒரு நாவலும் பொக்கிஷத்தின் சாவி என்கிற பெயரில் ஒரு நாவலும் இடம் பெற்றுள்ளது.

இதில் நந்தி ரகசியம் ஒரு பக்குவமான சமையல் போல வெகு நன்றாக அமைந்த ஒரு நாவலாகும். கிராமத்துக் களத்தில் காணப்படும் ஒரு அமானுஷ்யமான பக்திக் களம் தான் நந்தி ரகசியம்.

இதன் முகப்புச் செய்திகள் முக்காலும் சத்யமான உண்மைகள். பொக்கிஷத்தின் சாவி நாவல் சரித்திர பின்புலத்தில் எழுதப்பட்ட ஒரு மர்ம நாவல். இரண்டுமே விறுவிறுப்பானவை. வாசகர்களால் வெகுவாக வரவேற்கப் பட்டது.

பொதுவில் இந்த ரக நாவல்களை வேகமான வாசிப்பை உத்தேசித்தும், எளிமையான வாசக எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யவுமே நான் எழுதினேன்.

எழுத்து விஷயத்தில் சிலரிடம் ஒரு தீவிரம் இருக்கும். அவர்கள் இவ்வகை விறுவிறுப்பான படைப்புகளால் நேரம்தான் பாழாகிறது. இதனால் மனதுக்கு ஒரு மேம்பாடும் ஏற்படாது என்று பேசுபவர்கள், எனக்கு அவர்கள் கருத்தில் உடன்பாடில்லை. விறுவிறுப்பாக எழுத முயன்று அதில் தோற்றுப்போய் 'சீச்சீ இந்தப் பழம் புளிக்கும்' என்று கூறுவது போன்றதே இக்கருத்து.

இவர்கள் எப்படி மாத நாவலில் இலக்கியத்தையும் அதன் திட்பத்தையும் விமர்சிக்கிறார்களோ, அதே வேகத்தில் இவர்களை நாமும் விமர்சிக்கலாம் அதில் தவறில்லை.

பொதுவில் இருசாராருக்கும் வாசகன்தான் எஜமான். அவனது ஆதரவு உள்ள அளவிற்கு ஒரு எழுத்தாளன் பிரகாசிக்க முடியும். அந்த ஆதரவைக் குறிவைத்து எழுதப்பட்ட இந்த நாவல்களோடு அரிய செய்திகளும் சேர்ந்தே உள்ளன.

படித்துவிட்டுச் சொல்லுங்கள்.

நன்றி

அன்புடன்

இந்திரா சௌர்ந்தர்ராஜன்

# 1

கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம். இதற்கு ஒரு சரியான காரணம் உண்டு. கோயில் என்று ஒன்று இருக்க வேண்டுமானால் ஊரின் எட்டு திசையில் கோயிலானது பெரும்பாலும் ஊரின் கன்னி மூலையில் தான் அமைந்திருக்கும். அடுத்து, ஊரில் உள்ள எல்லாவித வீடுகள் மாளிகைகளைக் காட்டிலும் கோயிலானது அளவில் பெரிதாகவும், உயரமான கோபுரத்தோடும் அமைந்திருக்கும். இதனால் கன்னிமூலை வாஸ்து சாஸ்திரப்படி பாரமாகவும் உயரமாகவும் இயற்கையாகவே அமைந்துவிடும். இப்படி அமைந்து விட்டாலே மற்ற திசைகளுக்கு உரிய சக்தி தானாகவே வந்துவிடும்!

அரசூருக்குள் நுழைந்து கொண்டிருந்தது அந்த மினிபஸ். பஸ் கொள்ளாதபடிக்கு ஜனக்கூட்டம்! கூரையில் மட்டுமே ஒரு நாற்பது ஐம்பது பேர் உட்கார்ந்திருந்தார்கள். இதில் சிலர் கைகளில் கோழிகளும், ஆட்டுக்குட்டிகளும் கூட இருந்தன.

மினி பஸ்சும் ஊர் முகத்தில் இருந்த பருத்த புளியமரத்தை ஒட்டி ஒரு வித குலுக்கலோடு நின்றது. நின்ற மாத்திரத்தில் திபுதிபுவென்று ஒரு கூட்டமே இறங்கியது. அவர்களில் சிலருடைய கையில் வாழை இலையில் கட்டப்பட்ட பூமாலைகள் இருந்தன. இறங்கியவர்கள் சுற்றும்முற்றும் பார்த்தார்கள் அவர்கள் இறங்கிய இடத்துக்கு அருகில் ஒரு சிறு ஊரணி, அதில் அரசூரின் சின்னஞ்சிறுகள் ஓடிவந்து குதித்து ஆட்டம் போட்டுக் கொண்டிருந்தனர். அந்தக் கூட்டத்தில் வேலப்பனும் இருந்தான். முப்பது வயதைத் தொடப்போகிறான். அரசூர் மிராசுவான கோவிந்தராஜ உடையாரின் மூத்த தாரத்து மகன். அரை டிரவுசரும் பனியனுமாய் ஊரணியைத் துவம்சம் செய்து கொண்டிருந்தான். அவனைப் பார்த்தவர்கள் அயர்ந்து போய் தங்களுக்குள் பார்த்துக் கொண்டனர்.

ஒரு பெருமூச்சுடன் கூட்டமாய் நடக்கவும் தொடங்கினர். அரசூருக்குள் ஒரு ஏழெட்டு தெருதான் இருக்கும். அவ்வளவிலும் புங்கை மரங்கள்

தழைத்திருந்தன. வீட்டுக்கு வீடு அந்த மரம்தான் குடை போல விரிந்து கவிழ்ந்து கிடந்தது.

தெருவில் இறங்கி நடக்கும்போது தரையில் உருளும் அதன் நிழல் இதமாக இருந்தது. ஆனால் நடந்து செல்லும் அவர்களுக்குள் துக்கத்தின் தாக்கம். குறிப்பிட்ட ஒரு தெருவுக்குள் அவர்கள் கால்வைத்த போது தாரை தப்பட்டை சப்தம் காதில் கேட்டது.

கோவிந்தராஜ உடையார் வீட்டுமுன் ஒரு அவசரப் பந்தல் போடப்பட்டு, அதன் நிழலில்தான் தாரை ஒலித்துக் கொண்டிருந்தது.வப்பாளத்தானும், கொட்டு ஆட்டக்காரர்களும் வளைத்துக் கட்டி ஆடியபடி இருந்தனர்.

"ஆஹை... ஆஹை... ஆஹை..." — என்று துருத்திக் கொண்டநாக்கும், குதிப்போடு கூடிய சப்தமும் எல்லோரையுமே அவர்கள் மேலேயே பார்வையாக இருக்கும்படி பண்ணியிருந்தது. அதிலும் கொட்டு ஆட்டத்தில் பேர் போன பச்சையம்மாவும் அவளுக்கு இணையான பெரிய கருப்பனும் இடுப்புக்குக் கீழே உண்டியலைப் போல குலுக்கி ஆடியதில் காமரசம் பெருகி வழிந்து தெருவெங்கும் ஓடிக் கொண்டிருந்தது.

மினி பஸ்ஸில் வந்திறங்கியவர்களும் அங்கே வந்து ஆட்டத்தைப் பார்த்தபடியே கோவிந்தராஜ உடையார் வீட்டுக்குள் நுழைந்தனர்.

உள்ளே உடையார் சிவலோக பிராப்தி அடைந்திருந்தார். வழக்கமாய் அவர் அமரும் நாற்காலியில்தான் அவரை உட்கார வைத்து தாடையைத் துணியால் இழுத்துக் கட்டியிருந்தார்கள். நெற்றியிலும் ஒரு ரூபாய் நாணயப் போட்டு! கால்மாட்டில் சிந்தாமணி அழுது கலக்கிக் கொண்டிருந்தாள்.

"என்னப் பெத்த ராசா.... என் ஐய்யா என் தேவனே.... என் மம்மதா.... போய்ட்டியா. என்னைத் தனியா தவிக்க விட்டுட்டுப் போய்ட்டியா?" என்று அவளிடம் ஒரே பெனாத்தல்.

சிந்தாமணிக்கு ஐம்பது வயதாகிறது. ஆனால் முப்பத்தைந்து தான் மதிக்கலாம். எழவுக்கு வந்திருந்த அசலூர் பிரமுகர் ஒருவர் சிந்தாமணியை விழுங்குவது போல பார்த்துக் கொண்டிருந்தார்.

பக்கவாட்டில் திரண்ட மார்பும், மடிப்பு விழுந்த அவளது இடுப்பும் அவருக்குள் ஒரு பெரும் கிளர்ச்சியையே உருவாக்கிக் கொண்டிருந்தன. சிந்தாமணிக்கு இரண்டு பெண் பிள்ளைகள்.

ஒருத்தி ராஜாத்தி, அடுத்தவள் பூங்கொடி.இருவருக்குமே திருமணமாகிவிட்டது. மூத்தவள் ராஜாத்திக்கு மூன்று வயதில் ஒருமகன், இளையவள் பூங்கொடி இப்பொழுதுதான் கர்ப்பம் தரித்திருக்கிறாள்.இருவரும் அப்பன்சாவை எண்ணி ஒரு ஓரமாக தங்கள் புருஷன்மார் சகிதம் அழுது கொண்டிருந்தார்கள்.

அவர்களையும் ஒரு கூட்டம் பார்த்துக் கொண்டு தான் இருந்தது. அவர்கள் வரையில் அந்த இருவருமே கோவிந்தராஜ உடையாருக்குப் பிறக்காதவர்கள். கோவிந்தராஜ உடையார் தன் முதல் மனைவி திரௌபதி இருக்கும் போது சிந்தாமணியைத் தனியே சேர்த்துக் கொண்டவர். திரௌபதியின் மகன் தான் ஊரணிக்கரையில் ஆட்டம் போட்டுக் கொண்டிருக்கும் வேலப்பன். சிந்தாமணி வரவும் திரௌபதி இனி உன்னுடன் வாழ என்னால் முடியாது என்று ஒதுங்கிவிட்டாள். சிந்தாமணிக்கும் அது வசதியாகப் போய்விட்டது. யாருக்கோ பிறந்த தன் இரு மகள்களுடன் உடையார் வீட்டில் அவரது மனைவி என்கிற உறவையும் ஏற்படுத்திக் கொண்டுவிட்டாள்.

அப்படி சிந்தாமணி உடையாரிடம் வந்து ஒட்டிக் கொண்டு இன்றோடு இருபது வருஷம் ஓடியே போய்விட்டது. இத்தனை வருஷத்தில் பக்கத்துத் தெருவிலேயே தான் இருக்கிறாள் திரௌபதி. அவள் உடையாரை ஏறிட்டுத் கூட பார்த்ததில்லை. அவள் மகனையும் அப்படியே வளர்த்து விட்டாள். எல்லாமே சிந்தாமணிக்கு மிக சாதகமாகப் போய் விட்டது.

இழவுக்கு வந்திருப்பவர்கள் அவ்வளவையும் எண்ணிப் பார்க்கிறார்கள். இதுநாள் வரை சேர்ந்து வாழவில்லை என்பதால், திரௌபதி உடையார் மனைவி இல்லை என்றாகிவிடுமா?

இந்தக் காலத்துப் பெண்ணாக இருந்தால் கோர்ட்டில் போட்டு விவாகரத்து வாங்கிக் கொண்டு தான் மறுவேலை பார்ப்பாள். ஆனால் திரௌபதிக்கு அதெல்லாம் கொஞ்சம் கூட தெரியவில்லை. கணவனே இல்லை என்றான பிறகு அவன் சொத்து வந்து எதற்கு என்று அவள் ஒரு வைராக்கியத்துடன் வாழ்ந்து வருவதற்காகத்தான் எல்லோருமே நினைத்தார்கள்.

சரி.... உடையார் போய்விட்டார்? திரௌபதி என்ன செய்யப் போகிறாள்? அவர் கட்டிய தாலியை அவள் இன்னமும் கழற்றி எறியவில்லை. அது அவள் கழுத்திலேயே தான் இருக்கிறது. மகன் வேலப்பன் பெயர்முன்கூட முதல் எழுத்தான 'கோ' என்கிற இன்ஷியலைத்தான் போடுகிறாள். அதை எல்லாம் ஓரம் சாரமாகப் பார்த்து வைத்திருந்தவர்கள் நிச்சயம் உடையார் சாவுக்கு அவள் வருவாள் என்று தான் நம்பினார்கள்.

ஒரே மகன் வேலப்பன் இருக்கும்போது யாரோ வந்து கொள்ளி போடுவது நன்றாக இருக்காது என்றும் கருதினார்கள். அவர்கள் நினைத்தபடிதான் நடக்கும்போலத் தெரிந்தது.

"எலேய்.... கட்டுனவளுக்கு சேதி சொல்லி விட்டீர்களாடா..?" என்று ஒரு ஊர்ப்பெருசு தாட்டியமாகவே கேள்வியைத் தொடங்கியது.

"அட என்ன பெருசு நீ.... கொட்டுச் சத்தம் ஊருக்கே கேக்கும்போது திரௌபதிக்கு மட்டும் கேக்காதாக்கும்?" என்று கூட்டத்தில் ஒருவர் திருப்பியும் கேட்டார்.

"அடபோடா அமாவாசைல பொறந்தவனே.... இந்த மாதிரி விசயம். கொட்டு சப்தம் காதுல விழுவறதுக்கும், முறையா ஒருத்தன் போய் சொல்லிட்டு வர்றதுக்கும் வித்யாசம் இருக்குல்ல...."

"என்னான்னு போய் சொல்ல.... திரௌபதி உன் புருசன் செத்துட்டான்னா. அவன் செத்துதான் இருவது வருஷம் ஆச்சேன்னு அவ திருப்பிச் சொன்னா?"

"அப்புறம் எதுக்கு அவன் கட்டுன தாலியோட இருக்கே அதைக் கழட்டி எறின்னு நீயும் திருப்பிகேளு...."

"மொத்தத்துல ஒரு வில்லங்கத்தை வீடுதேடிப்போய் விலைக்கு வாங்கச் சொல்றே...."

"அடப் போடா அரை மூளைக்காரா.... தேடி வந்து இங்க இருக்கற வில்லங்கத்தை இனியாச்சும் துரத்திட்டு உடையார் ஆஸ்தி பாஸ்தியைக் கட்டிக் காக்க சொல்றேண்டா நான்."

பெருசு சொன்னது சிந்தாமணியின் அழுகையை அப்படியே நிறுத்தியது. தன் கலைந்த தலையை இழுத்துக்கட்டி முடிந்து கொண்டவள் எழுந்து பெரிசு அருகே வந்தாள்.

"ஏ கெழடு.... உன் மனசுல நீ என்னான்னு நினைச்சுக்கிட்டிருக்கே?' என்று ஆக்ரோஷமாகவே ஆரம்பித்தாள். பெருசு அதற்கெல்லாம் அசரவில்லை.

"ஆத்தாடி.... அள்ளி முடிஞ்சால்லாம் நான் பயந்துட மாட்டேன். நான் நாயத்தைப் பேசறேன். திரௌபதி ஊரறிய தாலிகட்டிகிட்டு முறையா வாழவந்தவ. உன்னை மாதிரி மயக்கி வளைச்சவ இல்ல. அத நீ மறந்துடாதே...." என்றார்.

"அப்ப ஏன்யா அம்போன்று விட்டுட்டு ஒதுங்கி ஓடிப்போனா..... இழுத்துகிட்டு கிடந்த இந்த மனுசனுக்கு பீ மூத்திரம் அள்ளுணவ நான். உன் முறைக்காரி அப்ப எங்க போயிருந்தா..?"

சாவு வீட்டில் எல்லோரும் எதிர்பார்த்த அந்தச் சர்ச்சை ஆரம்பித்துவிட்டது. நல்ல வேளையாக வக்கீலின் ஃபியட் கார் வீட்டு முன் வந்து நிற்க தற்காலிகமாக எல்லோர் கவனமும் அவர் பக்கம் திரும்பியது.

வக்கீல் வாதிராஜ் ஒரு ஹை கோர்ட் வக்கீல். பரம்பரை பரம்பரையாக கொள்ளு தாத்தா பிறகு தாத்தா அதன் பின் அப்பா இப்போது வாதிராஜ் என்று அது ஒரு வக்கீல் பாரம்பரியம்.

பார்க்கவும் கம்பீரமான தோற்றம்.

வாதிராஜ் காரைவிட்டு இறங்கி வரும் தோரணையே அசத்தியது. அவர் கையில் ஒரு பிரீஃப்கேஸ்.

வாதிராஜும் நேராக கோவிந்தராஜ உடையார் உடம்புக்கு ஒரு மாலையைப் போட்டு விட்டு மௌனமாக அவர் உடல்முன் சில நொடிகள் நின்றார். பிறகு திரும்பினவர் எதிரில் ஒரு பெப்ஸி பாட்டில் உடைத்து நீட்டப்பட்டது. நீட்டியவள் சிந்தாமணியின் மூத்த மகளான ராஜாத்தி!

"அட எதுக்கும்மா இதெல்லாம். விடும்மா"

"இல்ல சார்.... குடிங்க நல்ல நேரத்துல வந்திருக்கீங்..."

"சாவு வீட்டுல ஏதும்மா நல்ல நேரமும் கெட்ட நேரமும்?"

"இப்பல்லாம் சாவு வீட்டுல தான் சார் நல்ல நேரம்னா என்ன கெட்ட நேரம்னா என்னன்கறது ரொம்ப பேருக்கு தெரியுது."

"புரியற மாதிரி சொல்லும்மா...."

"அப்பாவோட அவ்வளவு சொத்தும் எங்களுக்குத் தானே சார்?"

அவர்கள் எங்கு வருகிறார்கள் என்பது எல்லோருக்கும் புரிந்தது. வாதிராஜும் புரிந்ததுபோல அவளைப் பார்த்தவர் பிரீஃப் கேஸை எடுத்து உயில் காகிதங்களைத் தன் வலக்கரத்தால் தூக்கிப் பிடித்துக் காட்டினார்.

கூட்டமே ஒரே பார்வையாக அதைத்தான் பார்த்தது.

"இதோ கோவிந்தராஜ உடையாரோட உயில். அவர் போன மாசமே என்கிட்ட இதை ரெடி பண்ணச் சொல்லிட்டார்."

"என்ன சார் சொல்றீங்க?"

"உடையாருக்கு தான் ரொம்ப நாள் இருக்க மாட்டோம்னு தெரிஞ்சு போச்சு. அதான் என் மூலமா தன் சொத்து பத்தை எல்லாம் உயிலா எழுதி வெச்சிட்டார்."

"ஐயா.... அவ்வளவு சொத்தும் யாருக்கு....? அதை முதல்ல சொல்லுங்க."

பெருசு பாய்ண்ட்டை பிடித்தது. சிந்தாமணிக்கும் பக்பக்கென்று நெஞ்சை அடைத்துக் கொண்டது. வக்கீலும் வாசற்புறம் சென்று பந்தலுக்குக் கீழ் ஒரு சேரில் அமர்ந்து சொத்தைப் பற்றின விவரங்களைச் சொல்ல ஆரம்பித்தார்.

"இதனால் அரசூர் வாழ் குடி மக்கள் அவ்வளவு பேருக்கும் நாச்சியப்ப உடையார் புத்திரனான கோவிந்தராஜ உடையார் சுயநினைவுடனும், ஏக சிந்தனையுடனும் எழுதிக் கொடுக்கும் உயில் பத்திர விபரங்கள்....

எனது பூர்வீக சொத்தான மலையடிவார பொட்டல் பூமியான மூணரை ஏக்கர் நிலம் நீங்கலாக உள்ள எனது அவ்வளவு சொத்துக்களும் அதாவது நஞ்சையில் நாற்பது ஏக்கர், புஞ்சையில் இருபத்தி ஏழு ஏக்கர், இது போக எனது தென்னந்தோப்பு, ரைஸ்மில், ஊருணி நீர்பாத்தியதை உரிமை, மற்றும் எங்கள் குலதெய்வம் கோயிலுக்காய் எங்களுக்கான முதல் மரியாதை என்று சர்வமும் என்னை அண்டி வந்தாலும் என்னை விட்டுப் பிரியாது எனது மரண பரியந்தமும் கூடவே இருந்த சிந்தாமணிக்கும் அவள் பிள்ளைகளுக்குமே சேரும். இதில் மலையடிவாரப் பொட்டல் என் பரம்பரை சொத்து. என் தாத்தாவினுடையது. என்னுடையதானது. இனி அதை வேண்டுமானால் என்னை விட்டு நீங்கிய முதல் மனைவியும் அவளுக்குப் பிறந்த எனது மகனுமான வேலப்பனுக்கு அது போய் சேரட்டும். இது விஷயத்தில் நான் தெளிவாகவும். திடமாகவும் எழுதியுள்ள இந்த உயிலை என் உறவினர்களோ உற்றார்களோ விமர்சனம் செய்தால், அதைப் பற்றி எனக்கு யாதொரு கவலையுமில்லை. என் மரணத்திற்குப் பின் இந்த விவரங்களை அனைவரும் அறிய வேண்டியது அவசியம் என்றும் கூறிக் கொள்கிறேன்.....

இப்படிக்கு

கோவிந்தராஜ்

உடையார்

வக்கீல் உயில் விபரத்தைக் கூறிமுடிக்கவும் கூட்டத்திடம் ஒரே ஸ்தம்பிப்பு. அந்த ஸ்தம்பிப்பை அதிகரிக்கச் செய்கிற மாதிரி திரௌபதியைச் சிலர் தாங்கிப் பிடித்து அழைத்து வந்தபடி இருந்தனர். சிந்தாமணி அவள் வருவதையும் பார்த்தாள். வக்கீலையும் பார்த்தாள். வக்கீல் அவளுக்கு மட்டும் புரிகிற மாதிரி ஒரு மாதிரியாகச் சிரித்தார். அவளுக்கும் புரிந்து விட்டது.

# 2

ஒரு ஊரின் கன்னிமூலையில் கோயில் அமைவதால் மட்டும் அந்த ஊருக்கு சிறப்புகள் வந்துவிடாது. அந்த கோயிலில் ஆறுகால பூஜைகள் நடைபெற வேண்டும். ஊர்முழுக்க கேட்கும்படி மணிசப்தம் ஒலிக்க வேண்டும். அந்த கோயிலுக்கு என்று மரத்தால் ஆன தேர் ஒன்றும் கட்டாயம் இருக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக கோயிலுக்கு ஈசான்ய பாகத்தில் திருக்குளம் அமைந்திருந்தால் அந்த ஆலயம் காலத்தால் நாளுக்கு நாள் அருள் அலைகள் பெருகி சிறப்பு மிகுந்த ஆலயமாகத் திகழும். அதுமாத்திரமல்ல, அந்தக் கோயிலின் கோபுர கலசத்தில் தான் எல்லாவித சிறப்புகளும் ஒளிந்துள்ளன. அதன் வழியாகத்தான் ஊரில் அமைதியும் செல்வமும் பெருக்கெடுக்கச் செய்யும் சக்தி மிகுந்த அலைகள் பரவுகின்றன!

இருபது வருடங்கள் கழித்து இறந்து விட்ட கணவன் முகத்தைப் பார்க்க வந்த திரௌபதி ஏனோ நிமிர்ந்து கூட பார்க்கவில்லை. குனிந்த தலையோடு கோவிந்தராஜ உடையார் கால் மாட்டில் அமர்ந்திருந்தாள். சிந்தாமணி எழுந்து உள்ளே போய்விட்டாள். அவளது பெண்கள் கூட உள்ளே போய்விட்டனர்.

உள்ளிருந்து, "எல்லா காரியத்தையும் அவளும் அவ மகனுமே செய்யட்டும். நாங்க யாருக்கும் குறுக்க நிக்க பிரியப்படலை." என்று வேறு சொல்லிவிட்டாள்.

சிந்தாமணி வரையில் அவ்வளவு சொத்தும் அவளுக்கே என்று வந்துவிட்டது. ஒன்றுக்கும் உதவாத காட்டு பூமி மூணரை ஏக்கரை யாருக்காவது இலவசமாகக் கொடுத்தாலும் வேண்டாம் என்பார்கள். அதில் அவ்வளவு முட்செடிகள். அதை வெட்டி சீர்படுத்தவே மாதக் கணக்காகும். எனவே அது மட்டும் வேலப்பனுக்குப் போனதில் அவளிடம் துளியும் வருத்தமில்லை. எனவே எழுந்து வந்து சமையல் கட்டில் மணக்க மணக்க காபிபோட்டு ஆழ்ந்த ருசியோடு பருகவும் ஆரம்பித்தாள். அவள் மகள்களும் வந்து சூழ்ந்து கொண்டனர்.

"அம்மா அவ வந்துட்டாளே, உயில் செல்லாதுன்னு கோர்ட்டுக்குப் போவாளோ…"

"கோர்ட்டுக்காவது குளத்துக்காவது அதான் என் ராசா தெளிவா எழுதிப்புட்டாரே...."

"எப்பம்மா அப்பா இப்படி எழுதினாரு."

"இவ ஒருத்திடி.... அவர் எங்கடி எழுதினாரு வக்கீலை வெச்சு நான்தான் எழுதி வாங்கினேன். தூங்கிகிட்டு இருந்த ஆள்கிட்ட இருந்து ரேகையை உருட்டி வாங்கினதும் வக்கீல்தான்."

"அடேங்கப்பா.... பெரிய வேலையெல்லாம் பார்த்திருக்கிறே...."

"இல்லாட்டி இந்த ஊர்ல பொழைக்க முடியுமா? அவர் உறவுக்காரங்க டின்னு கட்டிப்புடுவாங்க. இப்பவே என்ன கேள்வி கேட்டுச்சு அந்தக் கிழடு.... பார்த்தில்ல..... எனக்கு நெஞ்சை அடைச்சிச்சு. இப்பதான் கொஞ்சம் நிம்மதியா இருக்கு" என்றபடி காபியை நன்கு ஆட்டி ஆட்டி சூடுதணியச் செய்து விழுங்கினாள். அப்படியே எட்டி எட்டி ஹாலில் கிடக்கும் உடையார் பிணத்தையும், திரௌபதியையும் ஒரு பார்வை பார்த்துக் கொண்டாள்.

ஊருணிக்கரையில் ஆடிக்கொண்டிருந்த வேலப்பனையும் சிலர் அழைத்து வந்திருந்தனர். வேலப்பனுக்கு வயதான அளவுக்கு மூளை வளர்ச்சியில்லை. வந்தவன் உடையார் பிணத்தை ஒரு வேடிக்கை பொருள் போலத்தான் பார்த்தான். தலைகுனிந்த நிலையில் அமர்ந்திருக்கும் அவன் தாயிடம் சென்று, "யாரும்மா இது? நெத்தியில் காசு வச்சுக்கிட்டு உக்காந்துருக்காரு..?" என்றும் கேட்டான். கூட்டத்தினர் அவன் செய்கையைப் பார்த்துப் பரிதாப்பட்டனர்.

"ஹீம்.... என்னா சொத்து சுகம் இருந்து என்ன பிரயோஜனம் கோவிந்தனுக்கு இப்படி ஒரு பிள்ளை.... பிள்ளைக்கே அப்பனைத் தெரியல..." என்றும் முணுமுணுத்தனர்.

அதன்பின் அவனைப் பதவிசாக அடக்கி நாவிதனிடம் சென்று அமரவைத்து தலைமுடியைச் சிரைத்து மொட்டையடித்தனர். மொட்டையடித்துக் கொள்ள அவன் முரண்டு பிடித்தபோது ஏழெட்டு பேர் அமுக்கிப் பிடித்து அவனுக்கு மொட்டை யடிப்பதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது. அதன்பின் புதுவேட்டியை இடுப்பில் சுற்றிவிட்டு, நெற்றியில் பட்டையடித்து கையில் தீச்சட்டியையும் கொடுத்து கோவிந்தராஜ உடையாரைத் தூக்கிக் கொண்டு மயானக் கரைக்குக் கிளம்புவதற்குள் எல்லோருக்கும் போதும் போதுமென்றாகிவிட்டது.

தெருமுனை வரை குனிந்த தலை நிமிராது வந்த திரௌபதி, பிணம் தன்னைவிட்டு நீங்கும்போது மட்டும் நிமிர்ந்து ஒரு பார்வை பார்த்தாள். அந்தநொடி அவள் விழிகளில் சில சொட்டு கண்ணீர். ஊரில் இருப்பவர்களும் அதைக் கவனித்தனர்.

"இப்படி ஒரு புருஷனுக்காக அழுவுறாளே திரௌபதி.... இவள் பொண்ணு. அந்த ஒண்டவந்த பிடாரி அம்புட்டு சொத்தையும்ல அள்ளிகிட்டா.... இப்படி அந்த மனுஷன் செத்துப்போவான்" என்று அவள் காதுபட சிலர் பேசிக் கொண்டபோதிலும் திரௌபதி அதை எல்லாம் பொருட்படுத்தவில்லை.

# 3

அந்த காலத்தில் அரசர்கள் தான் கிராமங்களை வடிவமைத்தார்கள். அப்படி வடிவமைக்கும் போது ஆறு பாயும் இடமாகப் பார்த்து கிராமங்களை நிறுவினார்கள். கிருஷ்ணா, ராமா என்று இறை நினைப்போடு இருப்பவர்கள் அமைதியாக வாழும் இடம் என்கிற பொருளில் வந்ததுதான் கிராமம் என்று கூறுவார்கள். அப்படி வடிவமைக்கும் போது வடக்குப் பக்கம் ஆறு ஓடும்படி பார்த்துக் கொண்டு ஆற்றுக்குத் தென்பக்கத்தில் ஊரை வடிவமைப்பார்கள் பெரும்பாலும் செவ்வகமாகவே வடிவமைப்பார்கள். இப்படி அமைக்கும் போது தென்புறத்தில் மலையோ, காடோ இருந்தால் அந்த ஊரை மிக விசேஷமாகக் கருதுவார்கள். பெரும்பாலும் அந்த ஊரில் எல்லோருமே வளமோடுதான் இருப்பார்கள். அப்படி வடிவமைக்கப்படும் ஊரின் சிறப்பையும் எதாவது ஒரு விதத்தில் குறித்து வைப்பார்கள்.

எழுதிவைப்பது ஒரு விதம்.... கோயிலுக்குள் சங்கேத பாஷையில் சிற்பங்கள் மூலமாக செதுக்கி வைப்பது இன்னொரு விதம்!

குறிப்பாக ஒரு ஊரின் கோயில் கோபுரம் அந்த ஊரைப் பற்றிய நன்மை தீமைகளைச் சொல்லும் விதமாக இருக்கும். இதைப் பார்த்து அறிய நமக்குப் பட்டறிவு வேண்டும்!

கோவிந்தராஜ உடையார் வரையில் எல்லா காரியங்களும் முடிந்து விட்டது. இழவுக்காக அவர் வீட்டுக்கு வந்திருந்த திரௌபதி தாலியைத் தான் வாழும் வீட்டிலேயே கழற்றி ஒரு பால் டம்ளரில் போட்டுவிட்டாள். அவளாகவே வெள்ளை உடைக்கும் மாறிக்கொண்டு யாரையும் எந்தச் கேள்வியும் கேட்க விடவில்லை. வேலப்பனும் தாயின் உருமாற்றத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டு, "ஆத்தா நீ இப்பதான் அழகா இருக்குறே" என்றான். திரௌபதி தலையில் அடித்துக் கொண்டபோது ஊர் கர்ணம் பசுபதியா பிள்ளையுடன் வக்கீல் வாதிராஜின் தலை அவள் வீட்டுமுன் தெரிந்தது.

திரௌபதி அவர்களை உள்ளே வரச்சொல்லவில்லை. அவளாக எழுந்து வெளியே சென்று இருவரையும் தீர்மானமாகப் பார்த்தாள்.

"வணக்கம்மா" என்றார் வக்கீல் வாதிராஜ். அவர் கையில் நிலப்பத்திரம்!

"திரௌபதை.... வக்கீல் உன்னைப் பாத்துப் பேசணும்னாரு. என்னையும் கூப்பிட்டாரு. உன் புருசன் சொத்துல உங்க பங்கா அந்தக் காட்டுகிட்ட இருக்குற பொட்டல் நிலத்துக்கான பத்திரத்தை உன்கிட்ட தரத்தான் வந்துருக்காரு.." என்று கர்ணம் தான் வந்ததற்கான காரணத்தைக் கூறினார்.

திரௌபதி சிரித்தாள்.

"என்ன திரௌபதி சிரிக்கிறே?"

"இல்ல.... இப்ப அதை எல்லாம் யார்கேட்டா?"

"அதுசரி.... உன் புருசன் உயில் எழுதி வெச்சுட்டுல்ல செத்துருக்காரு."

"ஏதோ எங்க நினைப்பு கடைசி காலத்துலயாவது அவருக்குள்ள இருந்துருக்குதே. அந்த மட்டுல சந்தோசம். இந்த நிலத்தையும் அந்த ஒண்ட வந்த பிடாரிகிட்டியே கொடுத்துடுங்க. எங்களுக்கு எதுவும் வேண்டாம்."

"அப்படி எல்லாம் என்னால கொடுக்க முடியாதும்மா.நீங்க வேணும்னா உங்களுக்கு இதை வெச்சுக்க பிரியமில்லாட்டி அவங்க பேருக்கு எழுதிக் கொடுக்கலாம். அப்படியும் நீங்க கொடுக்க முடியாது. உங்க மகன்தான் கொடுக்கலாம்."

"வக்கீலய்யா.... நீங்க சட்டம் பேசறீங்க. நான் தர்மத்துல நின்னு யோசிக்கிறேன். உங்க மனசாட்சில கையவெச்சு சொல்லுங்க பார்ப்போம். என் வீட்டுக்காரர் இப்படியா எங்களுக்கு உயில் எழுதியிருக்காரு?"

திரௌபதி கேட்ட விதமே வாதிராஜை என்னவோ செய்தது?

"ஏம்மா.... அவர் சொல்லி எழுதுன உயில் இது. நீங்க இப்படிக் கேட்டா எப்படி?"

"அவர் சொல்லின்னா அவர் வாயால சொல்லிதானே?"

"ஆமாம்மா.... உயில்லையே சுயநினைவோட எழுதிக் கொடுத்ததுன்னு இருக்குதே...."

"சுயநினைவோட சொல்ல முடிஞ்சவரால கையெழுத்து மட்டும் போட முடியலையாக்கும்?"

திரௌபதி அப்படி ஒரு கேள்வி கேட்பாள் என்று வாதிராஜ் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை.

"நீங்க என்னம்மா சொல்றீங்க?"

"உயில்ல ரேகை உருட்டுதானே இருக்கு?"

"அ…ஆமா!"

"என் வீட்டுக்காரருக்கு நல்லா எழுதப் படிக்கத் தெரியும் போது அவர் எதுக்கு ரேகை உருட்டணும்?"

திரௌபதியின் கேள்வி கர்ணம் பசுபதியா பிள்ளையைக்கூட மிளகாயைக் கடித்த மாதிரி உதறவிட்டது. இருந்தும் வாதிராஜ் அழகாகச் சமாளித்தார்.

"அம்மா.... அவர் படுத்த படுக்கையா இருந்தப்ப கை கால் இழுத்துகிட்ட விபரம் உங்களுக்குத் தெரியாதா?"

"அப்ப அவர் கை கால் விளங்காம கிடந்தார்னு சொல்றீங்க. அப்படித்தானே?"

"பின்னே... வேணும்னா மெடிக்கல் ரிப்போர்ட்டை வாங்கிப்பாருங்க."

வக்கீலின் வேகமான பதில் திரௌபதியைத் திரும்பவும் சிரிக்கவிட்டது.

கர்ணம் பசுபதியாபிள்ளையும் வியந்துபோய் கவனித்தார்.

"சரிங்க வக்கீலய்யா.... பத்திரத்தை அப்படி வெச்சுட்டு போங்க."

திரௌபதி அருகில் உள்ள ஆட்டுக் கல்லைக் காட்டினாள்.

"பரம்பரை சொத்தும்மா.... ஆட்டுக்கல்லு மேல வைச்சுட்டுப் போகச் சொல்றீங்களே...."

"உங்களுக்குத்தான் ஆட்டுக்கல்லு, என் வரைல அது சிவலிங்கம்."

திரௌபதி சொன்னது வாதிராஜ் நெஞ்சை குப்பென்று அடைத்தது. அந்த நொடி அந்த ஆட்டுக்கல்லும் அதனுள் அடங்கிக் கிடந்த குளவிக்கல்லும் ஆவுடையும் லிங்கமும் கூடிக் கிடக்கும் ஒரு லிங்க சொரூபமாகத்தான் தெரிந்தது.

கர்ணம் பசுபதியாபிள்ளையும் திரௌபதி ஏதோ ஒரு உள்ளர்த்தத்துடன் பேசுவதாகத் தான் நினைத்துக் கொண்டார். வாதிராஜ் அவள் சொன்னது போலவே ஆட்டுக்கல் மேல் வைத்துவிட்டு மெல்லிய நடுக்கமுடன் அங்கிருந்து புறப்பட்டார்.

"ஆத்தா திரௌபதி.... அது உன் பூர்வீக சொத்து. கட்டாந்தரைதான். இருந்தாலும் உன் புருசனோட பாட்டன் முப்பாட்டன் காலத்துல இருந்தே அது உங்க இடமாத்தான் இருந்து வருது. இந்த மாதிரி இடத்தை மஞ்சக்காணின்னு சொல்லுவாங்க. இதை அலட்சியப்படுத்தாம பத்திரத்தை பத்திரமா எடுத்து வெச்சுக்கம்மா...." என்று பசுபதியாபிள்ளையும் அவளிடம் சொன்னபடியே கிளம்பினார். திரௌபதி நெடுநேரம் அந்தப் பத்திரத்தையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு பின் அரை மனதாக அதைக் கையில் எடுத்தாள். அந்த நொடி 'மா....' என்று அவள் வீட்டுக் காளை கொல்லைப்புரத்தில் இருந்து கத்தியது.

அவள் வரையில் அது ஒரு நல்ல சகுனமாகத் தோன்றியது. பத்திரத்தை நெருங்கி கையில் எடுத்துக் கொண்டாள். அவளது செய்கையை எதிர்வீட்டு

வேலுமணி நாயக்கர் பார்த்துக் கொண்டுதான் இருந்தார்.

துண்டை உதறிக் கொண்டு அவளை நோக்கி வந்தவர்.

"என்ன திரௌபதி.... அந்த உருப்படாத நிலத்துப் பத்திரமா?" என்றுதான் ஆரம்பித்தார்.

"என்னண்ணே.... வாயப்புடுங்க வந்திருக்கீங்களா?"

"அட நீ ஒண்ணும்மா.... உன் வாயைப் பிடுங்கி எனக்குத்தான் என்ன ஆகப்போகுது. நேத்துவரை உன்னை நான் ஒரு மானஸ்தியா நினைச்சிருந்தேன்.ஆனா இன்னிக்கு உன்னை நான் ஒரு ஒண்ணாம் நம்பர் இளிச்சவாச்சியா தான் பாக்கறேன்."

"ஏண்ணே அப்படி....?"

"பின்ன என்னம்மா. கூட இருந்த கூத்தியாளுக்குப் போக வேண்டிய இடத்தை உனக்குக் கொடுத்துட்டு நல்ல சொத்து அம்புட்டையும் உன் புருசன் அவளுக்கு எழுதிக் கொடுத்துருக்கான். இருபது வருசமா உனக்கு துரோகத்தைச் செஞ்சவன், செத்தபிறகு உன் எதிர்காலத்துக்கும் துரோகம் பண்ணிட்டு செத்துருக்கான். நீ அதை எல்லாம் நினைச்சு பார்க்காம அந்த நிலத்தைப் போய் வாங்கிக்கிட்டியே...."

"நீங்க தப்பா யோசிக்கிறீங்கண்ணே...." திரௌபதி அவருக்கு சற்று அதிர்ச்சியளித்தாள்.

"நான் தப்பா யோசிக்கிறேனா?"

"ஆமாண்ணே.... இவ்வளவு மோசமான நிலையிலையும் இந்த இடம் மட்டும் அந்தக் கூட்டத்துகிட்ட மாட்டலை, தப்பிச்சு எனக்கு வந்து சேர்ந்துருக்கு. என் முன்னோர் சொத்து.ஏதோ இந்த மட்டுல காப்பாத்த முடிஞ்சதாத்தான் நான் நினைக்கறேன்."

"அடேங்கப்பா.... இப்படி ஒரு நினைப்பா உனக்கு? இது ஒரு இடம்.... இதை நீ காப்பாத்திட்டியாக்கும்? நான் தெரியாம தான் கேக்கறேன். இந்த இடம் கால காசுக்குப் பெறாதுங்கறது உனக்குத் தெரியுமா?"

"அட என்னண்ணே நீங்க.... நான் விக்கறதா இருந்தா தானேண்ணே அதைப் பத்தி சிந்திக்கணும்"

"குறைஞ்சபட்சம் அந்த இடத்துக்குள்ள நீ நுழைஞ்சாவது பார்த்திருக்கியா?

"அது ஒரு பெரிய விசயமா?"

"பெரிய விசயம்தான். கரு நாகங்களுக்கு மட்டும் அங்க ஒரு கணக்கே இல்லை. வேலிக்கருவேலைகுள்ள அந்த நிலம் மூடிக்கிடக்கு உள்ள கொலையே நடந்தாலும் கேக்க ஆள் இல்ல. எத்தினி திருட்டுப் பசங்க அந்தக் கருவேல காட்டுக்குள்ள பூந்து ஒளிஞ்சிகிட்டு திரியறாங்க தெரியுமா? அதுல பல பேரை பாம்பு கடிச்சி அப்படியே செத்துப் போயிட்டாங்க. அவங்க உடம்பைக் கூட இழுத்துப் போட்டு புதைக்க யாரும் போகலை. நான் ஒரு நாள் சும்மா எட்டி பார்ப்போமேன்னு உள்ள கொஞ்சதூரம் போய் பார்த்தேன். நூறடி என்னால போக முடியலை. அங்கங்க மண்டை ஓடுங்க, எலும்புங்க...."

வேலுமணி நாயக்கர் பேசப்பேச திரௌபதிக்கே கூட சற்று அச்சமாகத்தான் இருந்தது.

"என்னா முழிக்கிறே.... அந்த சிந்தாமணி ஒண்ணும் லேசுப்பட்டவ இல்ல. நீ அந்த இடத்துக்குப் போனா உசுரோட திரும்ப மாட்டேன்னு தெரிஞ்சே உனக்கு அந்த இடத்தை போகட்டும்னு விட்டுக் கொடுத்துருக்கா!"

"அண்னே."

"அட என்னம்மா. உன்னை நான் இளிச்சவாச்சின்னு சொன்னதுல என்னதப்பு இருக்குது?"

திரௌபதி மௌனமாக நின்றாள். அவளுக்கு என்ன பதில் சொல்வது என்றே தெரியவில்லை. அப்போது பார்த்து வேலப்பனும் துள்ளிக் குதித்துக் கொண்டு ஓடிவந்தான்.

"ஆத்தா ரொம்ப பசிக்குது. சோறு ஆக்கிட்டியா?" என்று கேட்டுக் கொண்டே அவளது குடிசை வீட்டுக்குள் நுழைந்தான்.

"நீ ரொம்ப பாவம் திரௌபதி.... உனக்கு புருசன்தான் சரியில்லேன்னா பையனும் இப்படிகிறுக்குப் பயலா இருக்கான். கிடைச்ச இடமும் உருப்படாத இடம்... ஹூம் எல்லாம் உன் தலையெழுத்து...."

என்று தலையிலடித்துக் கொண்டே கிளம்பிப் போனார்.

திரௌபதிக்கும் அவர் சொல்வதில் என்ன தப்பு இருக்கிறது என்ற தோன்றியது. கண்களிலும் நீர் திரண்டு விட்டது. சோர்வாக உள்ளே சென்றவள் வேலப்பன் தானாக சோற்றை அள்ளிப்போட்டு உருட்டி உருட்டி விழுங்குவதைப் பார்த்து அப்படியே கண்ணீர் விட்டாள். அவனும் நிமிர்ந்து பார்த்தான்.

"ஆத்தா நீ திங்கலியா?" என்றும் கேட்டான்

"நீ நல்லா சாப்பிடுப்பா.... நான் இன்னிக்கு விரதம்." என்றாள்.

"அட ஆமாம்.... இன்னிக்கு திங்கட்கிழமை. நீ பச்சைத் தண்ணிகூட குடிக்க மாட்டேல்ல." என்று கேட்ட வேலப்பன் குண்டானில் மிச்சமிருந்த சோற்றை அள்ளி கவிழ்த்துக் கொண்டான். அப்படியே உருட்டிப் பிசைந்து வாயில் துருத்திக் கொண்டவனாக, "ஏ ஆத்தா.... நீ ஏன் திங்கட்கிழமை மட்டும் எதுவும் தின்ன மாட்டேங்கறே? என்றும் கேட்டான்

"விரதம்பா...."

"அப்படின்னா."

"சாமிக்கு வேண்டிக்கிட்டு நான் விரதம் இருக்கேன்."

"அப்ப நீ சாப்புட்டா சாமி கோவிச்சுக்குமா?"

"சாமி எதுக்காகவும் யாருக்காவும் கோவிக்காது. கோவிச்சா அது சாமி கிடையாது. இது உன் அப்பன் பாட்டன் காலத்து வழக்கம். உங்க பாட்டிதான் சோமவார விரதம் இரு திரௌபதி அது உனக்கு நல்லதுன்னு சொன்னிச்சு. நானும் உங்க பாட்டி சொன்ன நாள்ள இருந்து இருந்துகிட்டு வரேன்."

"பாட்டி சொன்னிச்சின்னு இருக்கியாக்கும்.... அப்ப சரி! நீ இப்படியே இரு. இன்னிக்கு உனக்கும் சேர்த்து நானே திங்கறேன்...." வேலப்பன் விபரம் புரியாமல் அவளிடம் பேசியபடியே ஒரு கட்டு கட்டினான். அவளிடமோ அவன் பேச்சுக்கும் சேர்த்து கண்ணீர் பீறிட ஆரம்பித்தது.

# 4

பொதுவில் ஊரின் கன்னிமூலையில் கோயிலைக் கட்டினால் அக்னி பாகத்தில் மயானம் வரும்படி பார்த்துக் கொண்டார்கள். அதே போல ஈசான்யத்தில் ஆறும் குளமும் அமையும்படியும் பார்த்துக் கொண்டனர். அது வழியாகவே ஊருக்குள் வந்து செல்லும் பாதையையும் வடிவமைத்துக் கொண்டனர். வாயு மூலையில் பெரிய தோட்டம் மற்றும் மைதானம் அமைத்து அங்கே உடற்பயிற்சிகள் செய்ய வழிவகை செய்தனர்.

ஊரின் நட்ட நடுவில் ஒரு பெரிய கல் மண்டபம் எழுப்பி அங்கிருந்து நான்குபுறமும் நான்கு திசைநோக்கி செல்ல தெருக்களை உருவாக்கினார்கள். கல் மண்டபத்தைச் சுற்றி வேலி போட்டு அதன் மையமான பிரம்ம பாகத்தில் எவர்காலும் படாதபடி பார்த்துக் கொண்டனர். இப்படி மிகச் சரியாகத் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட எந்த ஒரு ஊரும் காலத்தால் வளராமல் போனதே இல்லை.

இப்படிப்பட்ட ஊர்களில் வாழ்பவர்கள் ஒற்றுமையுடனும் நோய் நொடி இன்றியும் வாழ்ந்தனர். இந்த ஊரின் தேவையான ஆக்க சக்தியை கன்னிமூலைக் கோயில் கோபுர கலசம் தவறாமல் வழங்கிக் கொண்டிருந்தது. இருந்தும் காலத்தால் சில கோயில்கள் பாழ்பட்டுப் போயின! அதாவது திட்டமிட்டு அந்த கோயில்களைச் சிலர் நாசம் செய்தனர். அப்படி அவர்கள் செய்ததன் பின்னால் மிகப்பெரிய அளவில் அவர்களின் சுயநலம் ஒளிந்திருந்தது!

அது ஒரு பழங்கால நூலகம்!

நூறு வருஷங்களாக ஒரு நாள் கூட பூட்டப்படாமல் அது இயங்கி வருகிறது என்பது அதற்குள்ள பெருமைகளில் ஒன்று. அந்த நூலகத்திற்குள் மகாத்மா காந்தியின் காலடிபட்டிருக்கிறது. மகாகவி பாரதி அந்த நூலகத்தில் பழியாய் கிடந்து புத்தகங்களைப் படித்திருக்கிறார். கல்கத்தாவின் ரவீந்திரநாத் தாகூருக்குக் கூட சில சரித்திர குறிப்புகள் தேவைப்பட்டபோது அந்த நூலகம்தான் உதவி செய்ததாகச் சொல்வார்கள்.

புவனகிரி வாணிமகால் என்றால் புத்தகப் பிரியர்களுக்கு அவ்வளவு பரிச்சயம். போஜராஜன் காலத்து ஏடுகள் கூட அங்கு இருப்பது குறிப்பிடப்படவேண்டிய விஷயம்.

அப்படி ஒரு நூலகத்துக்கு பரமேஸ்வர தீட்சதரும் அடிக்கடி வந்து செல்லுவார்.

தீட்சதர் ஒரு உபன்யாசப்புலி. தேவார திருவாசகத்தைக் கரைத்துக் குடித்தவர். வேதங்களிலும் நல்ல ஞானம் கொண்டவர். தீட்சதர் நூலகத்துக்குள் நுழையும் போதே பரிமளவாசம் குப்பென்று வீசும்.

அன்றும் வீசியது.... குண்டஞ்சி வேஷ்டி, அதைப் பஞ்சக்கச்சமாய் கட்டிக் கொண்டு மேலே மார்புக்கு ஒருசால்வையைப் போர்த்திக் கொண்டு தீட்சதர் வரவும் லைப்ரரியின் லேடியான கௌரி மனோகரி என்பவள் முகம் மலர்ந்து போய் "நமஸ்காரம் சார்' என்றாள்.

"என்னம்மா நன்னாருக்கியா?"

"நல்லாருக்கேன் சார்...."

"நான் போனதடவை வந்தப்ப கேட்ட புஸ்தகம் கிடைச்சுதா?"

"ரொம்பக் கஷ்டப்பட்டுத் தேடிக் கண்டுபிடிச்சு வெச்சிருக்கேன் சார்" கௌரிமனோகரி பதிலோடு சீட்டைவிட்டு எழுந்து சென்று ஒரு பீரோவைத் திறந்து அதில் இருந்து ஒரு பழுப்பேறிய புத்தகம் ஒன்றை அவருக்கென எடுத்து நீட்டினாள்.

அவரும் உற்சாகமாய் அதை வாங்கிக் கொண்டு போய் அமர்ந்தார். அவர் அமர்ந்திருந்த இடத்திற்கு எதிர் சாரியில் ஒரு இளைஞன் நிறைய புத்தகங்களை விரித்துப் போட்டுக் கொண்டு ஒரு நோட்டில் குறிப்பெடுத்துக் கொண்டிருந்தான். அவ்வளவு புத்தகங்களும் ஆலயம் தொடர்பான புத்தகங்களாகவே இருந்தது. தீட்சதரும் கவனித்தார். அவனும் ஒரு கட்டத்தில் தீட்சதரைப் பார்த்துக் கைகூப்பி வணங்கினான்.

அவனிடம் நல்ல தேஜஸ்!

இந்தக் காலத்தில் யார் விபூதிப் பட்டையெல்லாம் போட்டுக்கொள்கிறார்கள்? அவன் போட்டிருந்தான். அடக்கமாக வேட்டி சட்டை என்று பதவிசாகவும் தெரிந்தான். ஒருகட்டத்தில் எழுந்து தீட்சதர் அருகே வந்தவன், "சார்.... நான் உங்களோட கொஞ்சம் பேசணும்" என்றான்.

தீட்சதர் உடனே தான் விரித்திருந்த அந்தப் பழைய புத்தகத்தை மூடிவைத்துவிட்டு எழுந்தார்.

இருவரும் அந்த லைப்ரரிக்கு வெளியே உள்ள தூங்கு மூஞ்சி மர நிழலடிக்குச் சென்றனர்.

"சொல்லுப்பா.... என்கிட்ட நீ என்ன பேசணும்?"

"சார் என் பேர் மோகன். நான் ஒரு எம்ஃபில் ஸ்டூடண்ட். 'சைவத்திருமுறையில் பரிகாரங்கள்' என்கிற தலைப்புல எம்ஃபில் பண்ணப் போறேன்."

"அடடே. உன் டாபிக்கே வித்யாசமா இருக்கே? ஆமா உன்னோட கைட் இதுக்கு ஒத்துண்டாரா?"

"அவர் சொல்லித்தான் சார் இதுல இறங்கியிருக்கேன். பொதுவா சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள்னு தான் எல்லோரும் பண்ணுவாங்க. நான் வேறுபட விரும்பறேன்."

"ரொம்ப சந்தோஷம். சரி.... அதுக்கு நான் என்ன செய்யணும்?"

"நீங்க சைவ சித்தாந்தத்துல பெரிய புலி...."

"அப்படி எல்லாம் கிடையாது. ஏதோ கொஞ்சம் தேவாரமும் திருவாசகமும் தெரியும்."

"இப்படி சொல்றது உங்க தன்னடக்கத்தைக் காட்டுது. என் வரைல நீங்க ஒரு கடல். எனக்கு இப்ப சில சந்தேகங்கள். நீங்கதான் வழிகாட்டணும்."

"கேளு. தெரிஞ்சதைச் சொல்றேன்."

"சார் பரிகாரம்னா உண்மையாக என்ன சார் அர்த்தம்?"

"பரிகாரம் கிடையாது. பரி ஆரம்கறது தான் என் வரைல சரி. பரின்னா குதிரை. ஆரம்னா வட்டம். ஒரு குதிரை வட்டத்துல ஓட ஆரம்பிச்சா என்னாகும்?"

"ஓடிக்கிட்டே இருக்கும்.... ஏன்னா வட்டத்துக்கு ஆரம்பமும் கிடையாது. முடிவும் கிடையாதே...."

"சரியா சொன்னே.... பரிகாரமும் அப்படித்தான். அதுக்கு ஒரு முடிவு கிடையாது. அடுத்து செய்ததையே திரும்பித் திரும்பி செய்யணும். உதாரணமா பெத்த தாய்க்கு சோறு போடத் தவறிட்ட ஒரு பிள்ளை, அதுக்கு பரிகாரமா இன்னொரு தாய்க்கு காலம் பூரா சோறுபோட முடிவெடுத்தா அது ஒரு பரிகாரம்."

"ஆனா சில ஜோதிடர்கள் சில பரிகாரங்களை ஒருதடவை செய்தாலே போதும்னு சொல்றாங்களே."

"ஒரு தடவையாவது செய்யணும்கற அர்த்தத்துல சொல்லியிருப்பாங்க. பல தடவை செய்ய பொருளாதாரம், காலச் சூழ்நிலைன்னு பல விஷயங்கள் அனுமதிக்கணுமே."

"அப்ப பரிகாரம்கறது நாம் தொடர்ந்து செய்யணுமா?"

"நான் அப்படித்தான் நினைக்கறேன்...."

"சிலர் இந்த பரிகாரங்கள்ளாம் அர்த்தமில்லாத செயல். விதியை மாத்த முடியவே முடியாது. நடக்கறது நடந்தே தீரும்னு சொல்றாங்களே."

"எப்பவும் ஒரு விஷயத்துக்குப் பலவித கருத்துக்கள் உண்டு. யார் எங்க இருந்து எப்படிப் பார்க்கறாங்களோ, அதைப் பொறுத்துதான் அந்த விஷயம் தெரியும்."

"உங்க முடிவான கருத்து என்ன சார்..?"

"வாழ்க்கைல தவறு செய்யறதுங்கறதும் ஒரு சகஜமான விஷயம். அந்தத் தவறு எப்படிப்பட்டதுங்கறதைப் பொறுத்து பரிகாரங்கள் உருவாகுது. உதாரணமா நான் உங்க காலை தெரிஞ்சோ தெரியாமலோ மிதிச்சுட்றேன். உடனே சாரின்னு சொல்லிட்டா அது ஒரு பரிகாரம். நீங்களும் அந்த சாரியை ஒத்துகிட்டு மனசு சமாதானமடைஞ்சுட்டா அது முழுமையான பலன்தரும். உங்கமனசு அதனால சமாதானம் அடையலேன்னா நான் காலை மிதிச்ச செயல் அப்படியே ஒரு வினையா தொங்கிட்டே இருக்கும். ஒருபடி மேல போய் பதிலுக்கு என் காலை நீங்க மிதிச்சுருங்கன்னும் நான் சொல்லலாம். இல்ல உங்க கால்லையும் விழலாம். இதெல்லாமே பரிகாரச் செயல்கள்.

உங்ககாலை மிதிக்கறதுக்குப் பதிலா ஒரு வாளால உங்க காலை நான் வெட்டிட்றேன்னு வையுங்க...."

"ஐய்யய்யோ."

"ஒரு பேச்சுக்குச் சொன்னேன் அம்பி...."

'சரி சரி.... சொல்லுங்க...."

"அப்படி வெட்டி உன்னை நான் நொண்டியாக்கிட்டு இதே சாரிங்கற பரிகாரத்தை நான் செய்தா நீ ஒத்துக்குவியா?"

"அப்ப தப்போட அளவைப் பொறுத்துதான் பரிகாரமா?"

"அப்படியும் சொல்லலாம்.... முன்ன நீ சொன்னியே ஒரு தடவை செய்தா போதாதான்னு... இந்த மாதிரி தப்புக்கு ஒரு சாரி எப்படி பரிகாரம் ஆக முடியும். வெட்டிட்ட பாவத்துக்கு காலத்துக்கும் உனக்கு நான் காலா நின்னா அது கூட ஓரளவுதான் பரிகாரம் ஆகும். இல்லையா?"

"நிச்சயமா சார்."

"இப்ப உனக்கு விளங்கியிருக்குமே.... எது எது பரிகாரம்னு!"

"விளங்கிடுச்சு சார்.... அதே சமயம் உங்க விளக்கத்தைக் கேட்டபிறகு என் மனசு கொஞ்சம் பாரமாவும் ஆயிடிச்சு."

"எதனால அப்படி?"

"நான் பிஎச்டி பண்றதுக்காகத் தான் இந்த விஷயத்தைப் புரிஞ்சுக்க நினைச்சேன். அதே சமயம் எனக்குன்னும் ஒரு வாழ்க்கை இருக்கு... அதுலயும் தப்பும் தவறும் இருக்கத் தானே செய்யும்?"

"அதுல என்ன சந்தேகம்?"

"எந்த பரிகாரம் என் அக்காக்களுக்கு ஒருநல்ல வாழ்க்கை அமைச்சுத் தரும்னு இப்பயோசிச்சு பார்க்கறேன்...."

மோகன் என்னும் அந்த இளைஞன் பேச்சுப் போக்கில் அவன் சுயசரிதைகளைச் சென்று தொடவும் தீட்சதர் அவனை சற்று ஆழமாக நோக்கினார்.

"எனக்கு மூணு அக்கா சார்.... அதுல ஒரு அக்காவுக்குக் கல்யாணம் ஆகியும் பிரயோஜனமில்லை. என் அக்கா புருஷன் ஒரு குடிகாரன். தினம் அடி உதைதான். மீதி உள்ள இரண்டு அக்காக்களுக்கு நான் இனிதான் கல்யாணம் பண்ணணும். இதுல ஒரு அக்காவுக்குக் கடுமையான செவ்வாய்தோஷம். இன்னொரு அக்காவுக்கோ மூல நட்சத்திரம். என் நிலையைக் கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க."

அவன் சற்று விளக்கமாகவும் பிரச்சினைகளைக் கூறினான். தீட்சதர் முகம் லேசாக இருளத் தொடங்கியது.

"சார்."

"என்னப்பா?"

"நான் சப்ஜெக்ட்டுக்கு வெளியே போய் பர்சனலா தப்பா ஏதாவது பேசிட்டேனா?"

"இல்லப்பா. உன் நிலையை நினைச்சேன். எந்தப் பரிகாரம் உன் அக்காக்களை கரை சேர்க்கும்னு யோசிக்க ஆரம்பிச்சிட்டேன்."

"ரொம்ப சந்தோஷம் சார். நீங்க எதைச் செய்யச் சொன்னாலும் நான் செய்யறேன் சார்." எனக்கு என் அக்காக்கள் வாழ்க்கை நல்லவிதமானால் அதுவே போதும் சார்."

"நீ சொன்னதை எல்லாம் வெச்சு பார்க்கும்போது, எனக்கு ஒரு விஷயம் தெளிவா புரியுது. எப்ப மூணு சகோதரிகளுக்குப் பிறகு நாலாவதா நீ பிறந்திருக்கியோ அப்பவே உன் ஜாகதம் எப்படின்னு எனக்குத் தெரிஞ்சு போச்சு. சுபகடன் உன்மேல இருக்கு. அதை அடைக்கத்தான் நீ ஜென்மம் எடுத்துருக்கே. எப்ப அவர்களுக்குத் தம்பியா நீ பிறந்தியோ அப்பவே அவங்களுக்கு விடியல்னு ஒண்ணு இருந்தாகணும். இல்லேன்னா நீ பிறந்திருக்க தேவையே இல்லை. இதெல்லாத்தையும் விட ரொம்ப முக்கியமான பாய்ண்ட்டுக்கே இனிதான் நான் வரப்போறேன். நீ எம்ஃபில் பண்ண எவ்வளவோ சப்ஜெக்ட் இருக்கும் போது நீ ஏன் சைவத்திருமுறையில் பரிகாரங்கள்னு சப்ஜெக்ட் எடுக்கணும். அதுக்கு குறிப்பு எடுக்க இந்த லைப்ரரிக்கு ஏன் வரணும். என்னையும் ஏன் பார்க்கணும்? என்கிட்ட ஏன் உன் குடும்ப சிக்கல்களைச் சொல்லணும்?

தீட்சதர் கேட்டுவிட்டு சற்று இடைவெளி விட்டார். அவனுக்கும் அவர் முக்கியமாய் ஏதோ ஒன்று கூறப்போகிறார் என்பது நன்றாகப் புரிந்தது.

"உன்பேர் என்னன்னு சொன்னே?

"மோகன்...."

'நல்ல பேர். உன்கிட்ட நான் சில கேள்விகள் கேட்கலாமா?"

"என்ன சார் இது கேள்வி. தாராளமா கேளுங்க...."

"உனக்கு அப்பா இருக்காரா?"

"இல்லை சார்.... நான் பிறந்து இரண்டு மூணு வருஷத்துலையே அவர் போய்ட்டார்."

"நினைச்சேன்... உன் தாத்தாக்கள் பற்றி உனக்கு எதாவது தெரியுமா?"

"ஓரளவு தெரியும் சார்'

"அந்த ஓரளவு என்னான்னு சொல்லேன்."

"தாத்தாக்கள் பற்றித் தெரிஞ்சு என்ன சார் பண்ணப்போறோம்."

"இது என்னப்பா கேள்வி. நீ வேற உன் தாத்தா வேற கிடையாது. அவரோட நல்லது கெட்டதுக்குப் பதில் சொல்லப் போறது நீ தான்பா'

"புது கருத்தா இருக்கே சார்."

"முதல் முதலா கேள்விப்பட்றே இல்லையா. அப்படித்தான் நினைப்பே. போகட்டும் உன் தாத்தாக்கள் பத்தி சொல்...."

"என் தாத்தாவோட பேர் முருகேசன் சார். அவர் ஒரு போஸ்ட் மாஸ்டராக இருந்தவர். அவருக்கு சுத்தமாக கடவுள் நம்பிக்கை கிடையாது."

"அடடே.... முக்கியமான விஷயத்தை எடுத்த எடுப்பிலேயே சொல்லிட்டே.... உம் மேற்கொண்டு சொல்லு:"

"அவர் வரைல புத்திதான் எல்லாம். அவர் வரைல கடவுள்ங்கறவர் ஒரு கற்பனை."

"அப்படியெல்லாம் நினைக்கணும்னு இருந்தா நினைச்சுத்தானே தீரணும்.உம், மேற்கொண்டு சொல்"

"எங்க பூர்வீகம் ஒரு கிராமம் சார். அந்தக் கிராமத்துல ஒரு சிவன் கோயில் இருந்தது. அது இடிஞ்சு சிதைஞ்சு இருந்தது. அதே சமயம் பள்ளிக்கூடம் கட்ட என் தாத்தா ஆசைப்பட்டப் போது இடம் கிடைக்கல. அதனால் துணிச்சலா சிவன் கோயில் உள்ளேயே பள்ளிக்கூடம் நடத்தினார். இடிஞ்சு கிடந்த சன்னதியைச் சுத்தமா, இடிச்சு சிவலிங்கத்தைத் தூக்கி பக்கத்துல இருந்த குளத்துக்குள்ள போட்டுட்டார்...."

"அப்படியா சங்கதி.... இதுக்கு ஆன்மிகவாதிகள் யாரும் எதிர்ப்பு காட்டலையா?"

"எதிர்ப்பு இருந்தது. ஆனா தாத்தா அவங்களை எல்லாம் சமாளிச்சிட்டுதா கேள்விப்பட்டேன்."

"மொத்தத்துல ஒரு கோயிலை இடிச்சு பள்ளிக்கூடம் நடத்தியிருக்கார்."

"சார்.... இது ஒரு பெரிய பாவமா?"

"திருடி தானம் பண்ற மாதிரி தான். இது ஒருவகை நாட்டாமை குணம்."

"என்ன சார் சொல்றீங்க?"

"கல்விங்கறது அறிவு சார்ந்தது. அறிவுன்னா வெளிச்சம்னும் ஒரு பொருள். நியாயம் தர்மம்னும் கல்வியோட அடுத்தடுத்த பக்கங்களைக் குறிப்பிடலாம். ஆனா இவ்வளவையும் ஒரு தப்பான தளத்துல உன் தாத்தா செய்திருக்கார்."

"கோயிலை இடிச்சது தப்புதான்.... ஆனா பள்ளிக்கூடம் நடத்தி ஒரு நல்ல காரியம் பண்ணி இருக்காரே?"

"அதுசரி.... ஒரு வயல்ல தப்பான விதைகள் ஒரு பக்கம் போட்டே.... விதை நெல்லையும் ஒரு பக்கம் போட்டே.... ரெண்டும் தானே வளரும்?"

"ஓ நீங்க அப்படி வர்றீங்களா?"

"அப்படித்தான் வந்தாகணும். அவர் செய்த நல்ல காரியம் உன்னை நிறைய படிக்க வெச்சு ஆராய்ச்சி செய்து பட்டம் வாங்கற அளவுக்குப் பண்ணியிருக்கு. சிவத்தைத் தூக்கி குளத்துல வீசின பாவம் உன் சகோதரிகள் வரைல தப்பான தோஷங்களா தங்கி அவங்களுக்கான குடும்ப வாழ்க்கையைக் கேள்விக் குறியாக்கியிருக்கு."

"இதுக்கு என்ன சார் பரிகாரம்?"

"ரொம்ப சிம்பிள். இந்த நாட்டுல இடிஞ்சு கிடக்கற சிவாலயங்களுக்கா பஞ்சம்."

"ஓ அப்படி ஒண்ணைத் தேடிப்போய் அதைச் சரி செய்யச் சொல்றீங்களா?"

"கரெக்ட். அந்தக் கணக்கை உன் கணக்கு நேர் செய்யட்டும்."

"என்னால உடலுழைப்பை வேணும்னா தர முடியும். பணம் காசுக்கு வழியில்லை சார்."

"இதோ பார்.... நான் இப்ப சொல்றத நல்லா கேட்டுக்கோ. நீ சொன்ன உடலுழைப்பும் ஒரு செல்வம்தான். மனசார திடமா நீ அந்த உழைப்பைத் தர சித்தமானா இன்னிக்கே இப்பவே ஒரு சிவாலயத்துக்குப் போ. சன்னதி முன்னால நின்னு பிரார்த்தனை செய்துக்கோ. உருக்கமா மனசுக்குள்ள அழுது அந்த சிவன் கிட்டையே தப்புக்கு பிராயச்சித்தம் செய்ய விரும்பறேன்னு சொல்லி வழி கேள். உனக்கு ஒரு நல்ல வழியை அவன் காட்டியே தீருவான்."

"நிஜமாவா சார்."

"காலம் காலமா நடக்கற சத்தியம்ப்பா இது. நம்ம மனோ சக்திக்கு ஏற்பத்தான் அவன் அருள் நமக்கு வழி காட்டறதும் காட்டாததும் இருக்கு."

"ரொம்ப சந்தோஷம் சார். நான் இப்பவே போறேன்."

'உனக்கு இனி ஏற்படப் போற அனுபவங்களே உன் சப்ஜெக்ட்டுக்கான விஜயமாகவும் இருக்கும்...."

"இருக்கட்டும் சார். ஏதோ உங்களைச் சந்திச்சதுல எனக்கு இப்படி ஒரு பாதை தெரிஞ்சதுல ரொம்பவே மகிழ்ச்சி சார்."

மோகன் கைகளை உயர்த்திக் கும்பிட்டான். தீட்சதரும் அவன் தலையைத் தன் வலது கரத்தால் வருடித்தந்து ஆசீர்வாதம் செய்தார்!

# 5

அந்த நாளில் கோயில்கள் மன்னர்களின் நேரடி ஆளுமையில் இருந்தன. கோயில் காரியங்கள் எந்தவித பொருளாதார இடர்பாடும் இன்றி நடைபெற வயல் நிலங்கள், தோப்புகள், மற்றும் ஊருக்குள் பல வீடுகளைக் கோயில் சொத்தாக எழுதிவைத்தனர்.

கோயில் அதிகாரி அந்தச் சொத்துக்களைப் பராமரித்து வரும்படி செய்து கோயிலில் பூஜைகள் முறையாக நடந்து வரும்படி செய்தார். இதுபோக பல செல்வந்தர்கள் தங்கள் சொத்துக்களை, தங்கள் இறப்புக்குப் பிறகு கோயில்களுக்குப் போய்ச் சேரும்படி செய்தனர். ஒரு கட்டத்தில் கோயிலுக்கான சொத்துதான் ஒரு ஊரிலேயே அதிகம் எனும் நிலை இருந்தது.

இறை நம்பிக்கை இல்லாத சிலர் இந்தச் சூழலில் உள்நுழைந்து கோயில் சொத்துக்களை அபகரிக்க முயன்றனர். ஒரு கல் சிலைக்கு எதற்கு காசும் பணமும் என்று கேட்டவர்கள், சாதுர்யமாகப் பல நிலங்களை அபகரித்துக் கொண்டனர்.

இன்னும் சிலர் தான் வாழ வேறு வழி தெரியவில்லை. எனவே கடவுள் தன்னை மன்னித்து விடுவார் என்று எண்ணி தங்களுக்குள் சமாதானம் செய்து கொண்டனர். அப்படியே கோயில் சொத்து பற்றிய விபரங்களை மாற்றி எழுதி தங்கள் சொத்தாக்கிக் கொண்டனர்.

இந்த விஷயம் வெளியே தெரிய வரவும் பலர் வருந்தினர். சிலரோ கடவுளுக்கே தனது சொத்தைப் பாதுகாத்துக் கொள்ளத் தெரியவில்லை என்று கேலி பேசினர். தன் சொத்தையும் நகை நட்டுக்களையும் பாதுகாத்துக் கொள்ளத் தெரியாத கடவுளா நம்மைப் பாதுகாக்கப் போகிறார் என்று பகுத்தறிவுக் கேள்வியும் கேட்டனர்.!

உடையார் வீட்டுமுன் வக்கீல் வாதிராஜின் கார் நின்று கொண்டிருந்தது. இப்பொழுதுதெல்லாம் வாதிராஜ் அடிக்கடி வருகிறார். சிந்தாமணியும் அவரை

சிரித்துச் சிரித்து தான் வரவேற்றாள். அவளிடம் உடையார் மரணத்தின் துக்கமோ வருத்தமோ துளியும் இருப்பதாகத் தெரியவில்லை. தெருவும் பார்க்கத்தான் செய்கிறது.

வாதிராஜ் அன்று தான் மட்டும் வந்திருக்கவில்லை. அவர் கூடவே ஒரு நகரத்துக்காரரும் வந்திருந்தார். உள்ளே ஒரு பெரிய வியாபாரம் நடந்து கொண்டிருந்தது.

"இதோ பாருங்கம்மா இந்த வீட்டோட சேர்த்து உடையார் சொத்து அவ்வளவையும் ஒரு செக்குல என்னால செட்டில் பண்ணி எடுத்துக்க முடியும். ஆனா அதுக்காக நீங்க ஒரேடியா ஒரு கோடி கொண்டான்னா என்னால முடியாது...." என்று அவர் சொல்ல சிந்தாமணியும் "அவ்வளவும் நல்லா விளையற நிலங்கள். நீர்ப்பாசன உரிமை வேற. யோசிச்சுப் பாருங்க...." என்று தன்பங்குக்குக் கூறினாள். வாதிராஜும் அவரை ஒப்புக் கொள்ள வைப்பதிலேயே குறியாக இருந்தார். நெடுநேரம் பேச்சுக்குப் பிறகு எண்பது லட்ச ரூபாய் என்று முடிவாகிற்று.ஒரே செக்!

வாதிராஜ் அடுத்த நொடியே தன் தோல் பையில் தான் தயாராகக் கொண்டு வந்திருந்த பத்திரம் ஒன்றில் சிந்தாமணி பேருக்கு உடையார் எழுதிக் கொடுத்ததாகச் சொல்லப்பட்ட அவ்வளவு சொத்தும் அவருக்குச் சொந்தம் என்று எழுதி சிந்தாமணியிடம் கையெழுத்தும் வாங்கிக் கொண்டார்.

அவரும் செக்கை நீட்டினார்!

சிந்தாமணி அதை வாங்கி கண்ணில் ஒற்றிக் கொண்டாள். அருகில் துவார பாலகர்கள் போல அவளது இருமகள்களான ராஜாத்தியும் பூங்கொடியும் அவர்களை ஒட்டி அவர்களது கணவன்மார்கள்! வாதிராஜ் அவரிடம், "சார் இனி இந்த குடும்பத்து சொத்து அவ்வளவும் உங்க சொத்து, ரிஜிஸ்தர் ஆபீஸ்ல இரண்டு நாள்ல பத்திரம் ரெடியாயிடும். அங்க சிந்தாமணி வந்து கையெழுத்துப் போட்டுக் கொடுத்துடுவா.

இனி உங்க பாடு" என்று அந்த நபரைப் பார்த்துச் சொன்ன வாதிராஜ் சிந்தாமணியைப் பார்த்து, "என்ன சிந்தாமணி.... இனி நீ இந்த ஊர்ல இருக்கப் போறதில்லையா?" என்று கேட்க, அவளும் "எனக்கென்ன தலையெழுத்து....' என்று கையை ஆட்டிக் கொண்டு வாயைத் திறந்தாள்.

"அப்ப எங்க போகப் போறே?"

"மெட்ராஸ் பக்கமா போய் ஒரு அடுக்குமாடி வீடு ஒண்ணை வாங்கிப் போட வேண்டியதுதான்."

"சபாஷ், வயசு மட்டும் இருந்தா அங்க யாரையாவது பணக்காரனை வளைக்கலாம். ஆனா அதுதான் இப்ப உன்னை விட்டுப் போயிடிச்சே...."

வாதிராஜ் சிந்தாமணியை லேசாக வாரினார். சிந்தாமணிக்கே அது சற்று ஊசிக்குத்தாகத்தான் குத்தியது. பதிலுக்கு முறைத்தாள்.

"என்ன கோவிக்கறே. சும்மா பேச்சுக்குச் சொன்னேன்." என்ற வாதிராஜ் அவருடன் அந்த வீட்டை விட்டுக் கிளம்பவும் தயாரானார். அந்த மனிதரிடம் ஒருவித அலட்சியம் தெரிந்தது. வீட்டுக்குள்ளேயே கறுப்பு நிறத்தில் ஒரு ஃபாரின் சிகரெட்டை எடுத்து அவர் பற்ற வைத்துக் கொண்ட விதம் எல்லாமே சிந்தாமணியைச் சற்று யோசிக்க வைத்தது.

"சிந்தாமணி ஒரு பத்து நாள் கழிச்சு மெட்ராஸ் பக்கம் போ. இன்னிக்கு சனிக்கிழமை. திங்கட்கிழமை ரிஜிஸ்தர் ஆபீசுக்கு வந்து பத்திரப் பதிவை முடிச்சு கொடுத்துடு. அப்புறமா செக்கை பேங்குல போடு....

காரில் ஏறி அமரும்போது வாதிராஜ் தெருவே கேட்கும் படியாகச் சொன்னது. மேலும் அவளைச் கீறியது. அந்த கார் கிளம்பி விட்டது! சிந்தாமணி தன் கைவசம் உள்ள செக்கைப் பார்த்தாள். மகள்கள் இருவரும் கூட எட்டிப் பார்த்தனர்.

'அடியேய்.... எண்பதுக்குப் பக்கத்துல எத்தினி சைபர் இருக்குது பார்...."

"அஞ்சு சைபர் சரியாத்தான் ஆத்தா இருக்கு கீழக்கூட சீல்வெச்சு கையெழுத்து போட்டுருக்காரு பார்."

"எப்படியோம்மா.... இம்புட்டு சொத்தையும் காசாக்கிபுட்டே. இந்த ஊர்ல இனி நாம குப்பை கொட்ட முடியாது. இப்பவே ஊர்க்காரங்க நம்மை பாக்கற பார்வை துளியும் சரியில்லை."

"எல்லாம் அந்த மகராசி பண்ற கூத்துத்தான். வேற என்ன?"

"அதுசரி ஆத்தா.... எனக்குத் தெரிஞ்சு பெரியவரு நீ சொத்தை எழுதி வைக்க சொன்னப்பல்லாம் இப்ப என்ன அவசரம்னு தானே கேட்டாரு? அப்படி இருக்க எப்படி ஆத்தா இவ்வளவு தெளிவா எழுதி வச்சாரு...."

இளையவள் பூங்கொடி உடையார் செத்து எல்லா காரியமும் முடிந்துவிட்ட நிலையில் கேட்ட கேள்வி சிந்தாமணிக்கே சிரிப்பைத் தந்தது.

'நீ எல்லாம் என் மகதானான்னு சந்தேகமா இருக்குடி, ஏண்டி இந்தக் கேள்வியை நீ வக்கீல் உயிலை வாசிச்ச அன்னிக்கே கேட்டுருக்கணும்டி போகட்டும். இன்னிக்காச்சும் கேட்டியே.... சந்தோசம்...."

"அது இல்ல அத்த.... நான்தான் என் பொண்டாட்டிகிட்ட நீ எதுவும் வாய திறக்கக் கூடாதுன்னு சொல்லி வெச்சிருந்தேன். நீங்க வக்கீலைக் கைக்குள்ள போட்டுகிட்டு உயிலை எழுதி வாங்கினதும். பெரியவருக்கு போதைல விஷம் கொடுத்ததும் எனக்கு நல்லாவே தெரியும்....." பூங்கொடியின் புருஷன் சின்னராசு என்பவன் அவர்களுக்கிடையே வாயைத் திறக்கவும். சிந்தாமணியே சற்று ஆடித்தான் போனாள்.

"அடப்பாவி மனுசா. நான் என் நிழலுக்குக்கூட தெரியாமல்ல அதை எல்லாம் செஞ்சேன். நீ எப்படிய்யா மோப்பம் பிடிச்சே?"

"நான் கண்ணை மூடிக்கிட்டே பாக்கறவன் அத்தை. இல்லாட்டி அப்பன் யாருன்னே தெளிவா தெரியாத பூங்கொடியை, என் பொண்டாட்டியா கட்டிகிட்டு இருப்பேனா?"

சின்னராசு அடுத்த குண்டு வெடித்தான். சிந்தாமணிக்குள் கிடுகிடுத்தது.

"அத்தையம்மாள்.... வக்கீலுக்குத் தனியா ஒரு ரெண்டு பர்சண்ட்டுன்னு லட்சத்தி அறுபதனாயிரம் ரூபாயைக் காசா கொடுத்ததும் எங்களுக்குத் தெரியும். ஒரு படிமேல் போய் வக்கீல்கிட்ட அவசியப்பட்டா நீங்க என்னைக் கூட எடுத்துக்குங்கன்னு சொன்னதும் எனக்குத் தெரியும்...." என்றான் மூத்தவன் ராசாத்தியின் புருஷன் முத்தையன், சிந்தாமணி அவர்கள் இருவரையும் முதல் தடவையாக கலக்கத்துடன் பார்த்தாள்.

பெண்டாட்டி பேச்சைக் கேட்கும் பெட்டையாகத் தான் மாப்பிள்ளைகள் இருக்க வேண்டும் என்று விரும்பித் தான் இருவரையும் தேர்வு செய்திருந்தாள். அவர்களும் அவள் முன், இது நாள்வரையில் அப்படித்தான் நடந்து கொண்டு வந்தனர். இன்று இவர்களிடமும் விசுவரூபம். சிந்தாமணியிடம் வியர்க்க ஆரம்பித்தது.

"என்ன அத்தையம்மா.... நாங்க பேசறத கேக்கவும் மாங்கா மடையனுங்க மாதிரி இருந்தவங்க, இந்தப் போடு போடறாங்களேன்னு தோணுதாக்கும் நாங்களும் உங்களமாதிரி பொறுமையா காத்துகிட்டு இருந்தவங்கதான்...."

"சரிங்கடா.... இப்ப என்ன பண்ணணும்கறிங்க?"

"எம்பதை மூணு கூறா பிரிச்சிடுங்க...."

"என்னது?"

"பங்கு போடச் சொல்றோம்."

"பங்கா.... எல்லாரும் ஒண்ணா இருக்கும்போது எதுக்குடா பங்கு."

"இனிமேட்டு இருந்தாதானே?"

"அப்படின்னா?"

"புருசன் மாதிரி இருந்தவனையே விஷம் வெச்சு கொன்னு சொத்தையெல்லாம் பொய்யா எழுதி வாங்கிகிட்ட புண்ணியவதி நீங்க. எங்களைக் கொல்ல உங்களுக்கு எவ்வளவு நேரம் ஆகும்?"

"அட கெரகம் பிடிச்சவங்களா.... நீங்க என் மகளோட புருஷனுங்கடா.... என்னோட இரண்டு கண்ணு மாதிரி."

"அப்ப ரெர்ம்ப சந்தோசம். இப்ப அந்த கண்ணுங்க கேக்குது, பாகத்தைப் பிரிச்சு கொடுத்துடுங்க...."

"கொடுத்துட்டு நான் எங்க போக?"

"எங்கையும் போக வேண்டாம். எங்க கூட இருக்கலாம். என் வீட்ல ஒருமாசம் அவன் வீட்ல ஒரு மாசம் மாறி மாறி.... இஷ்டமில்லாட்டி தனியா இருந்துக்குங்க...."

மாப்பிள்ளைகள் இருவருமே போடுபோடு என்று போட்டனர். சிந்தாமணிக்குக் கிடுகிடுவென்று எல்லாம் நடுங்கியது.

தன்னை ஒரு வல்லாள கண்டியாக எண்ணியிருந்தவளுக்கு தான் ஒன்றுமில்லை என்று தோன்றியது. மகள்களை மிரள மிரள பார்த்தாள். அவர்கள் இருவரும் புருஷன்மார்களுக்கு எதிராக ஒரு வார்த்தை பேசவில்லை. அதுதான் அவளை ரொம்பவே பாதித்தது.

"ஏங்கடி.... இவனுங்க இந்தப் பேச்சு பேசறாங்க பாத்துகிட்டு நிக்கறிங்களே.... என் மனசு இப்ப என்ன பாடுபடுது தெரியுமா?" என்று கொஞ்சம் போல விசும்பிப் பார்த்தாள்.

ஊஹூம்..... அவர்களிடம் சலனமேயில்லை.

# 6

ஊரையும், ஊருக்குள் கோயிலையும் திட்டமிட்டு வடிவமைப்பவர்கள் காலம் செல்லச் செல்ல சரித்திர பதிவுகளையும் மேற்கொள்வார்கள். கோயில் மதிலின் உட்புறச் சுவர்கள் இதற்குத்தான் பயன்பட்டிருக்கின்றன. இன்றும் திருப்பதி போன்ற பல ஆலயங்களில் சுவர் முழுக்க கல்வெட்டுச் செய்திகளைப் பார்க்கலாம்.

அதில் அந்த ஊரில் நடைபெற்ற முக்கியமான சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கும். அந்தச் செய்திகளை வாசிப்பது ஒருகலை. இதுபோக குறியீடுகளால் சில செய்திகள் இருக்கும்.

உதாரணமாக ஊர் நுழைவாயில்களில் காவல் தெய்வங்களுக்குக் கோயில் இருக்கும். பக்கத்திலேயே சுமை தாங்கிக் கற்கள் நடப்பட்டிருக்கும். அதேபோல ஊரில் சில இடங்களில் கல்லால் செதுக்கப்பட்ட திரிசூலங்கள் பதிக்கப் பட்டிருக்கும். சம்மந்தமே இல்லாமல் நான்கு தெருக்கள் கூடும் மையத்தில் பிள்ளையார் சிலை வைக்கப்பட்டிருக்கம்.

பிள்ளையார் எந்தத் தெருவைப் பார்த்தபடி அமர்ந்திருக்கிறாரோ அந்தத் தெருவில் ஒரு காலத்தில் நோயாளிகள் நிரம்ப வாழ்ந்திருந்தார்கள் என்பது உட்பொருள்.

சில ஊர்களில் கோயில்களில் புதையல் ரகசியங்கள் கூட சங்கேத பாஷையில் கூறப்பட்டிருக்கும்!

பாண்டி விளையாடிக் கொண்டிருந்தான் வேலப்பன். அவன் விளையாடிக் கொண்டிருந்த இடத்துக்கே வந்த திரௌபதி, "வேலப்பா.... அம்மா கூட வர்றியா?' என்று கேட்டாள்.

"எங்க ஆத்தா?"

"வா கண்ணு சொல்றேன்' என்று அவனை அழைத்துக் கொண்டு முனீஸ்வரன் கோயிலுக்குத் தான் முதலில் சென்றாள்.

அரை பனைமர உயரத்துக்கு முனிஸ்வரன் சிலை இருக்க, அதன் முன்னாலே பூசாரி வெள்ளைக்கண்ணு. பெரிய தாம்பளத் தட்டு நிறைய மொரமொரப்பாக விபூதி. திரௌபதி மகனோடு வருவதைப் பார்த்த பூசாரி முகத்தில் வெயில் பட்டு கறுத்தது போல ஒரு வாட்டம்.

"வா தாயி...."

"நல்லா இருக்கீங்களா பூசாரி"

"எனக்கென்ன ஆத்தா குறை.... நான் நல்லாத்தான் இருக்கேன். உன்னை நினைச்சாத்தான்...."

"நானும் நல்லாத்தான் பூசாரி இருக்கேன்...."

"எங்க தாயி.... அம்புட்டு சொத்தையும் அந்த சிந்தாமணி மயக்கி எழுதி வாங்கிட்டா. உன் வீம்பும் விரோதமும் உன்னை ஒண்ணுமில்லாமல்ல பண்ணிடிச்சு...."

"போதும் பூசாரி எதுக்கு பழைய குப்பையைக் கிளறிகிட்டு. நான்நானா இருக்கேன். எது நடந்தாலும் அது அந்தசாமி செயல் நீங்க துண்ணாரு கொடுங்க."

அவரும் அதன் பிறகு வாயடிக்காமல் முனிக்கு கற்பூரம் காட்டிவிட்டு திருநீற்றைத் தந்தார். அவளும் வாங்கி பூசிக்கொண்டாள். வேலப்பனுக்கும் பூசிவிட்டாள். பூசாரி வேலப்பனைப் பரிதாபமாகப் பார்த்தார்.

"பூசாரி நான் இப்ப முனிகிட்ட ஒரு விசயத்தை வேண்டிக்கப் போறேன். முனிதான் எனக்கு எல்லா காரியத்தை நல்லவிதமாக நடத்திக் கொடுக்கணும்."

"தாராளமாக வேண்டிக்க ஆத்தா.... நம்ம முனி எப்பவும் யாரையும் கைவிட்ட தேயில்லையே...."

அவள் உடனே கண்களை மூடி பிரார்த்தனை செய்து கொண்டாள்.

வேலப்பன் அங்குக் கிடந்த எலுமிச்சம்பழங்களை எடுத்து பந்து போல தூக்கித் தூக்கி போட்டு பிடிக்க ஆரம்பித்தான்.

பூசாரிக்குள் அவள் என்ன் வேண்டிக்கொள்கிறாள் என்கிற அரிப்பு.

"கேக்கறேன்னு தப்பா எடுத்துக்காதே. அப்படி என்னத்த நீ வேண்டிக்கிட்டே...." கேட்டார்.

"வேண்டிக்கிட்டதை வெளிய சொல்லக் கூடாதுன்னு சொல்லுவாங்க. நடந்து முடியட்டும் சொல்றேன். வேலப்பா.... வாடா போகலாம்...."

மகனைக் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு நடந்தாள். அவள் போகும் திசையைப் பார்க்கும்போது அவள் காட்டுப்பக்கமாகப் போகிறாள் என்பதை அனுமானிக்க முடிந்தது.

வேலப்பனும் கேட்டான்.

"எங்க ஆத்தா போறோம்?

"நம்ம நிலத்துக்குப்பா."

"நம்ம நிலம்னா.... அது எங்க இருக்குது?"

"வா காட்றேன்."

"அங்க போய் என்ன பண்ணப்போறோம்."

"முதல்ல காலை வைப்போம்.... பிறகு சொல்றேன்...."

திரௌபதியிடம் ஒரு தீர்மானம் தெரிந்தது.

அரசூருக்குள் சாலைகளில் சென்றபடி இருந்தவர்களும் அவர்கள் இருவரையும் ஆச்சரியமாகப் பார்த்தனர்.

விறுவிறுவென்று நடந்ததில் காடு வந்துவிட்டது? அதன் கீழ் ஒரு உருப்படாத கூட்டம் சீட்டாடிக் கொண்டிருந்தது. சிலர் ஆடுபுலி ஆடிக் கொண்டிருந்தனர். வேலப்பன் அவர்களுடன் சேர்ந்து ஆட அவர்களை நோக்கி ஓடினான்.

"நில்லுடா. எங்க போறே?" என்று தடுத்தவள் தரதரவென்று இழுத்துக் கொண்டு அவளது இடம் இருக்கும் திசை நோக்கி ஒரு ஒற்றையடிப்பாதை வழியாக நடக்கத் தொடங்கினாள்.

திரௌபதிக்கு நன்கு பரிச்சயமான கிழம் ஒன்று கவலையுடன் பார்த்துவிட்டுக் கத்தியது.

"ஏ புள்ள திரௌபதி. எங்கபுள்ள போறே?"

"எங்க இடத்துக்கு மாமோய்...."

"அட கூறு கெட்டவளே.... இப்பதான் ஒருத்தனை அங்க பாம்பு கடிச்சிச்சு. இப்படியா கைய வீசிகிட்டு போவே..?"

"எனக்கு எதுவும் ஆவாது மாமா.... உள்ள எப்படி இருக்குன்னு பார்த்தா தானே என்ன பண்ணணும்னு முடிவு எடுக்க முடியும்."

பேசிக்கொண்டே விறுவிறுவென்று நடந்தாள். வேலப்பன் கயிற்று மாடு போல அவள் பின்னே இழுபட்டது போல சென்று கொண்டிருந்தான்.

அந்த சிவாலயத்தில் அவ்வளவாய் கூட்டமில்லை. சிறிய சன்னதி உள்ளே ஒரே ஒரு தீபச் சுடரின் ஒளியில் லிங்க சொரூபம் மென்மையாகத் தெரிந்து கொண்டிருந்தது. அந்த சொரூபத்தின் மேல் ஆழ்ந்த கவனத்தில் இருந்தான் மோகன். அவனுக்குள் அதைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டு படு தீர்க்கமாக

அந்த லிங்க சொரூபத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். மனம் முழுக்க "ஒரு நல்ல வழியை நீயே காட்டு" என்னும் பிரார்த்தனை.

துளிகூட சந்தேகமே இல்லாத, ஆழமான பற்றுதலுடன் கூடிய பிரார்த்தனை. கடவுளை அரைகுறை நம்பிக்கையோடு பார்த்து புரிந்தும் புரியாமலும் வெந்தும் வேகாமலும் பக்தி செலுத்துபவர்களுக்கு நடுவில் முழுமையான பக்தியைச் செலுத்திட ஒரு அசாத்திய சாதகம் வேண்டும். சுற்றிலும் தெளிவு வேண்டும். இந்தப் புத்திக்கு இந்த உலகம் கண்ணில் தென்படுவதை மட்டுமே நம்பச் சொல்லிக் கொடுத்திருக்கிறது. போட்டிக்கு விஞ்ஞானம் வேறு வந்து பக்தியை ஒரு பைத்தியக்கார உணர்ச்சியாகவே காட்டிக் கொண்டிருக்கிறது. மோகனைப் போல பிரச்சினைகள் உள்ளவர்களால் மட்டுமே பக்தியை நோக்கி வேகமாகச் செல்ல முடிகிறது. அதிலும் அவனது மூன்று அக்காக்களுமே லட்சுமி, சரஸ்வதி, பார்வதி கணக்காக இருப்பவர்கள். அவர்களை நல்லபடி கரையேற்றுவதை ஒரு சீனப்பெருஞ்சுவர் கட்டுவது போன்ற சாதனையாகத் தான் அவன் மனதும் எண்ணியது. எனவேதான் தீட்சதர் சொல்லவும் கப்பென்று பிடித்துக் கொண்டு விட்டான்.

மிக மிக உருக்கமாக நின்றவன் சில திரைப்படக் காட்சிகளையும் அவ்வேளையில் எண்ணிப் பார்த்தான். பல பக்திப் படங்களில் இது போன்ற தருணங்களில திடுமென்று சன்னதிக்குள் இருந்து அந்த பரமன் ஒரு சாதாரண மனித வடிவில் வெளிப்பட்டிருக்கிறான். பக்தர்களுக்கு வேண்டியதைத் தந்துவிட்டுப் போயும் இருக்கிறான்.

பாண பத்திரருக்காக மதுரை வீதிகளில் விறகு சுமந்திருக்கிறான். புட்டு விற்ற கிழவிக்காக பிரம்படி பட்டிருக்கிறான். மாணிக்கவாசகருக்காக நரியைப் பரியாக்கியிருக்கிறான்.

மோகனுக்குள் அவன் படித்த கதைகள் எல்லாம் நினைவில் வந்தன. அந்தக் கதைகளில் எல்லாம் வெளிப்பட்ட கடவுளான அந்த ஈசனை நிஜத்தில் இன்றும் அதுபோல வந்து அருளிவிட்டுச் சென்றால் எப்படி இருக்கும் என்று அவனுக்குள் ஒரு கேள்வி. மனசு பெரிய அளவில் ஏங்கிற்று.

அதுவரை சன்னதியிலும் பெரிதாக கூட்டமில்லை. திடீரென்று திபுதிபுவென்று ஒரு கும்பல். அதுவரை எங்கோ போயிருந்த குருக்களும் வேகமாக வந்து சேர்ந்தார்.

எல்லோருக்கும் கற்பூர ஆரத்தி காட்டி விபூதி தந்தார்.

வந்தவர்களில் ஒருவர் பேச ஆரம்பித்தார்.

"சாமி.... அடுத்தவாரம் சிவராத்திரி வருது.... இந்தத் தடவை கோயில்ல அன்னதானம் உண்டுங்களா?"

"பேஷா.... போன வருஷம் அஞ்சாயிரம் பேர் சாப்ட்டா. இந்த வருஷம் பத்தாயிரம் பேருக்காவது சாப்பாடு போடணும்னு பிளான்."

"என் பங்குக்கு நான் ஒருமூடை அரிசியை உபயமா தந்துட்றேன் சாமி."

"ரொம்ப சந்தோஷம். எல்லாரும் அரிசி பருப்பாவே தராங்க. யாராவது விறகு வாங்கித் தந்தா தேவலாம்."

"அப்படிங்களா.... எவ்வளவு விறகு சாமி தேவைப்படும்?"

"எப்படியும் ஒரு லாரி விறகு தேவைப்படும். புளியங்கட்டை, வேலிக்கருவேலை, சவுக்குன்னு எது கிடைச்சாலும் சரி..."

இந்த ஊர்ல இல்ல. ஆனா பதினைஞ்சு மைல் தள்ளி அரசூர்ல கரட்டுகிட்ட ஒரு அஞ்சாறு ஏக்கருக்கு வேலிக் கருவலை மரம்தான். நான் அந்த ஊருக்கு ஒரு விஷயமா போயிருந்தப்ப பார்த்தேன். காடா மண்டிக்கிடக்கு.... அங்க போய் வெட்டி லாரில போட்டுகிட்டு வரலாம். ஆனா மரம் வெட்ட ஆட்கள் வரணுமே."

"என்ன சாமி.... சாமி காரியத்துக்குத் தானா வரமாட்டாங்க. நான் எங்க தெருப்பசங்க ஒரு பத்து பேரைக் கூட்டிக்கிட்டு வரேன். எப்ப போய் வெட்டிகிட்டு வரலாம்."

'இது என்ன கேள்வி. எப்ப வேணா போய் வெட்டி எடுத்துண்டு வாங்கோ. கோயில் மடப்பள்ளியை ஒட்டி காலி இடம் இருக்கு. அங்க விறகை அடுக்கி வைக்கலாம். எல்லாம் உங்க சௌகர்யம்தான்."

குருக்களின் பதிலும், வந்தவர் ஆர்வமும் மோகனையும் யோசிக்க வைத்தது. திருப்பணி செய்யத்தான் இறைவனிடம் வாய்ப்பு கேட்டான். அது விறகு வெட்டும் ஒரு வேலையாக அவன் முன் பேசப்பட்டுக் கொண்டிருக்கிறது.

"ஐயா.... உங்க கூட நானும் வரேன். என்னால முடிஞ்ச அளவு மரங்களை வெட்டிதரேன். நீங்க சொன்ன மாதிரி பத்துபேர் களத்துல இறங்கினா, ஒரு நாள்ள ஒரு லாரி விறகைத் தேத்திடலாம்." என்றான்.

"அப்புறம் என்ன?" என்று குருக்களும் ஆமோதித்தார்.

அடுத்து பேசிக் கொண்டே பிரகாரத்தை வலம் வரத் தொடங்கினர்.

அந்த சிறிய சன்னதிக்கு வெளியே வரவும் பெரிய நந்தி சிலை. முன்விழுந்து வணங்கி எழுந்தான் மோகன். திரும்பி நந்தியையும் ஒரு பார்வை பார்த்தான்.

அவன் அப்படிப் பார்த்தநொடியில் அந்தக் கல் நந்தியின் கண்ணிரண்டும் கூட உயிருள்ள மாட்டின் கண் போலவே மாறி அவனையே பார்த்துக் கொண்டிருந்தது.

மோகனுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

அந்த நந்தி சிலையை உற்றுப் பார்த்தான். அது கல் சிலையாகத்தான் காட்சி தந்தது. அவனுக்கு தான் பார்த்ததாக எண்ணியது நிஜத்தில் இல்லை பிரமை என்று தோன்றியது. இருந்தும் அந்த கரிய விழிகளுடன் அதன் உற்று நோக்கிய பார்வை மோகனை இதயத்தின் ஆழம் வரை ஊடுருவித் துளைத்து விட்டது.

திரும்பித் திரும்பி பார்த்துக் கோயிலை வலம்வரத் தொடங்கினான். கோயில் மதில்மேல் கூட நான்கு திசைகளின் சந்திப்பில் நந்திகள் சிலை

கண்ணில்பட்டன. அவைகளும் உயிர்பெற்று அவனை நோக்குவது போலவே அவன் உள்ளுணர்வு கருதியது. கூடவே கல்லூரி வரை போய் படித்த படிப்பு அதை பிரமை என்று மொழி பெயர்க்கவும் தவறவில்லை.

அப்போதுதான் அந்தக் காட்சியையும் அவன் கண்டான். கோயிலின் மதிலின் உட்புறச்சுவர்களில் ஏராளமான கல்வெட்டுக் குறிப்புகள்.... அவைகளை ஒரு மாணவ கூட்டம் குறிப்பெடுத்துக் கொண்டிருந்தது.

ஒரு பிளாஸ்டிக் டப்பாவில் சுண்ணாம்புக் கலவை இருந்தது. அதை கல்வெட்டில் அடித்து விட்டு மேலெழுந்த வாரியாக உடனேயே அடித்த சுண்ணாம்பைத் துடைக்கவும் செதுக்கப்பட்ட எழுத்துக்கள் பளிச்சென்று தெரிந்தன. அவ்வளவும் அந்தக்கால எழுத்துக்கள்.

கல்வெட்டு பாஷை என்றே ஒன்று உள்ளது. தொல்பொருள் இலாகாவில் பணியில் சேர அந்த பாஷை ஒரு அடிப்படைத்தகுதி. அந்த வித பாஷை தெரிந்தவர்களும் மிக மிக குறைவு. அவர்களில் ஒருவர் அங்கே இருந்து அந்த சுவர் எழுத்துக்களைப் படித்துச்சொல்லிக் கொண்டிருந்தார்.

"ஸ்வஸ்திஸ்ரீ வராக வருஷம் மாசி மாசமதனில் சான்று. பரமேஸ்வர திவ்ய சிவராத்திரியில் இல்லம் பலத்தை 108 முறை வலம் வருவோர் தீராத கருமமும் தீரும்.... உபயபாண்டிநாட்டு ராஜபிரதிநிதி சத்தியசேனன் பெருநோய் சொஸ்தமாகும் பொருட்டு ஒரு மண்டல காலம் விரதமிருந்து ஏழுகிரகங்கள் ஒரு புள்ளியில் குருபார்வை படும் காலத்தே அமிர்த நாழிகையில் இவ்வாலய சிவாபிஷேகம் சித்தித்ததால் இதை அறிந்து நாமஸ்மரணையோடு வலம் வருவார். பிணி தீர்ந்தேகும்.

இந்திரன் முதலான தேவர்கள் பிரதட்சணித்த அம்பலமிதும் அசாதாரணமானதாம். இவ்வம்பலத்து மண் எடுத்து எட்டு திக்கில் தொட்டுக் கட்டிய சிவாலயங்களில் நந்தீசர் புறத்தில் இருக்கும் ஆலயத்தில் நந்தியோர் வரப்ரசாதியானவராம்.

அவ்விடைமுன் நெய்ச்சுடர் காட்டி அங்கமது பிரதட்சணிக்க அள்ளக் குறையாத சொர்ணம் கிட்டும் எள்ளெண்ணெய் விளக்கெரிக்க எதிரிகள் மாய்ந்து போவார். வில்வத்தால் மாலையிட்டு விடையின் காதில் ஓதுவது நடந்தேறும்.

அவர் படிக்கப் படிக்க அதை வேகமாகக் குறிப்பெடுத்துக் கொண்டார்கள். அவர்களிடம் பெரிதாக ஒரு அரிய செய்தியை அறிந்து கொண்ட மகிழ்ச்சி இல்லை. ஆனால் மோகனுக்கு அவ்வளவும் மாபெரும் ரகசியங்களாகவே பட்டது.

கல்வெட்டு எழுத்துக்களைப் படிப்பவரிடம் மோகன் தன் சந்தேகத்தைக் கேள்வியாகவே கேட்கத்தொடங்கினான்.

"சார் என்ன சார் இது.... நீங்க சொல்ற ஒவ்வொரு விஷயமும் எவ்வளவு அதிசயமான ரகசியமான விஷயங்கள், ஆனா உங்ககிட்ட எந்தவித எக்ஸைட்மெண்ட்டும் இல்லையே...."

"நீங்க யார் சார்?"

"என்பேர் மோகன்.... நான் ஒரு எம்ஃபில் ஸ்டூடண்ட் இந்த கோயிலுக்கு சாமிகும்பிட வந்தேன்."

"மிஸ்டர் மோகன்.... நாங்க ஆர்கியாலஜி ரிசர்ச் பண்றவங்க, கோயில் கோயிலா போய் கல்வெட்டுக்கள் இருந்தா அவைகளைப் படிச்சு செய்திகளைக் குறிப்பெடுக்கறது எங்க பணி.

இந்த மாதிரி நம்பிக்கை சார்ந்த செய்திகளை நாங்க எப்பவும் பெருசா எடுத்துக்கறதில்ல. ஏன்னா பெரும்பாலும் கோயில்களை ராஜாக்களும், அதற்கு அடுத்து பிரபுக்கள், ஜமீன்தார்கள் இவங்கதான் கட்டியிருக்காங்க. அந்த வர்க்கத்தைச் சேர்ந்தவர்களுக்குப் பணம் காசு பொருட்டே இல்லை. இவங்களுக்கெல்லாம் எப்பவும் அந்தஸ்த்து தான் குறி. அதனால இவங்க

கட்டின கோயிலைப் பத்தி எல்லாரும் பெருசா நினைக்கணும்கறதுக்காக இந்த மாதிரி கல்வெட்டுக் குறிப்புகளை எழுதி வைக்கறது ரொம்பவே சகஜம்."

அவர் சாதாரணமாக ஒரு பாட்டுக்குப் பொருள் சொல்வது போல சொன்னது மோகனை மிகவே ஏமாற்றமடைய வைத்தது. அது அவன் முகம் போகும் போக்கில் நன்றாகவே தெரிந்தது. அவரும் அதைப் பார்த்தார்.

"என்ன சார்.... உங்க நம்பிக்கையை நான் கெடுக்கற மாதிரி பேசிட்டேனா?"

"அதெல்லாம் இல்லை.... நீங்க உங்க மனசுல பட்டதைப் பேசினீங்க. ஆனா இந்தக் கல்வெட்டு குறிப்புகளெல்லாம் உண்மையா இருந்தா எவ்வளவு நல்லா இருக்குமுன்னு நினைச்சி பார்த்தேன்."

"அவ்வளவுதான்.... அப்புறம் இந்த கோயில்ல எள் போட்டு எடுக்க முடியாது. அப்படி ஒரு கூட்டம் கூடிடும். பொருளாதார சிக்கல், மழைபெய்யாத குறைபாடு, தீவிரவாதபயம்னு எதைப் பத்தியும் யாரும் கவலைப்படமாட்டாங்க. எல்லா நாட்டு பிரதம மந்திரிகளும், ஜனாதிபதிகளும் இந்தக் கோயில்ல தான் இருப்பாங்க."

அவர் வேடிக்கையாகச் சொல்லிவிட்டுச் சிரித்தார். அதிலும் உண்மை இருப்பது போலத்தான் தோன்றியது. அப்பொழுது சன்னதியில் சிவராத்திரி அன்னதானத்துக்கு விறகு உடைப்பது பற்றி பேசியவர் அங்கு வந்தார்.

"தம்பி உங்களை எங்கெல்லாம் தேடறது?"

"என்ன விசயம் சார்."

"நீங்க விறகு வெட்ட பக்கத்து அரசூருக்கு வர்றீங்க தானே?"

"நிச்சயமா சார்."

"இப்ப வரமுடியுமா?"

"இப்பவேவா."

"நாம பேசிகிட்ட நேரம் ஒரு லாரிக்காரர் கோயிலுக்கு புது லாரியோட பூஜை போட வந்திருக்காரு. முதல்லோடை சாமிக்கு ஃப்ரியாவே அடிச்சுத் தந்துட்றேன்னு சொல்றார்....."

"அப்படியா?"

"ஆமா.... நாங்க நாலைஞ்சுபேர் தயாரா இருக்கோம். நீங்களும் வந்தீங்கன்னா வேலை வேகமா முடியும். உங்களுக்கு ஏதாவது வேலை இருந்தா பரவால்ல...."

"இல்லயில்ல.... நானும் வரேன். என்ற மோகன் தன் செல்போனை எடுத்து யாரிடமோ பேசினான். தான் வருவதற்குத் தாமதமாகும் என்றானா? இல்லை என்ன சொன்னானோ தெரியாது.... அவருடன் கிளம்பி விட்டான்.

# 7

பரந்த இந்தப் பூமியில் மண்மீது எவ்வளவோ இடங்கள்.... நாடுகள்.... ஊர்கள்.! ஆனாலும் காஷ்மீரில் மட்டும்தான் குங்குமப்பூ விளைகிறது. மற்ற பனி படர்ந்த நாடுகளான அண்டார்ட்டிகா, அலாஸ்காவில் கூட குங்குமப்பூ கிடையாது. அதேபோல எவ்வளவோ ஆறுகள் இந்த மண் மீது ஓடினாலும் ஒரு கங்கை நீரினுள் காணப்படும் ஜீவ அணுக்கள் வேறு எதனிலும் இல்லை.

இந்த உலகிலேயே மூவாயிரம் நீள அகலத்துக்குள் எல்லாவிதமான நில அமைப்புகளோடும்,நீர்வளத்தோடும் உள்ள ஒரே நாடு நமது பாரதம்தான்.

தேன் உள்ள மலர்களிடம் தான் தேனீக்கள் இருக்க முடியும். அதுபோல இப்படி ஒரு அமைப்புள்ள மண்ணில்தான் அருளாளர்களும் பெருகிக் கிடந்தனர். இவர்கள் பிரபஞ்ச ரகசியங்களை அறிந்து கொண்டு அவைகளை பின்வரும் சந்ததியினருக்குக் கூறிவிட்டுச் சென்றுள்ளனர். அப்படி அவர்கள் கூறியவை எவ்வளவோ. அவைகளில் காலநேரம் தொடர்பான ரகசியங்களும் மனித சக்திக்கு மேலான ரகசியங்களும் எவ்வளவோ உள்ளன!

திரௌபதிக்கு தலையைச் சுற்றியது. நூறு அடிதூரம் கூட அவளால் அவளது நிலப்பகுதிக்குள் செல்ல முடியவில்லை. அந்த அளவுக்கு முட்செடிகள். குறுக்கே மறித்துக் கொண்டு நின்றன.

காலில் செருப்பில்லாமல் வந்தது பெரிய தவறு போல உணர்ந்தாள். வேலப்பன் முரட்டுத்தனமாக முட்செடிகளை ஒரு பெரிய கோலால் தட்டி உடைத்துக் கொண்டு நின்றான்.

அங்கங்கே கண்ணில் பட்ட மண்டை ஓடுகள், எலும்புகள் அவனுக்கு ஆச்சரியமளித்தது. ஒரு மண்டை ஓட்டை கையில் எடுத்தான். தன் முகத்துக்கு நேரே பிடித்தவனாக "ஆத்தா என் மூஞ்சி இப்ப மாறிப் போச்சு பார்" என்றான்.

திரௌபதி அதைப் பார்த்துப் பதறிவிட்டாள்.

"டேய் அதை முதல்ல தூக்கி போட்றா..." என்று கத்தினாள். அவனும் அதை ஒரு பந்து போல நினைத்துக் கொண்டு தன் காலால் ஒரே உதை உதைத்தான். அது தூரப்போய் விழுந்தது.

"சரி நீ கிளம்பு.... இனி நீயும் நானும் இதுக்குள்ள போய் பாக்கறது நடக்காத காரியம். ஒரு நாப்பது ஐம்பது பேரோட அரிவாளும் கையுமா வந்தாதான் இந்த இடத்தை ஒரு ஒழுங்கு படுத்தமுடியும்...." என்ற திரௌபதி அதற்குத் தோதாகத் திரும்பி நடக்கப் போனாள்.

வேலப்பனோ, "அட இரு ஆத்தா..." என்று முரண்டு பிடித்தபோது திரௌபதி கண்ணில் அந்த அதிசயக்காட்சி பட்டது. ஒரு இரண்டு தலை நாகம் ஒன்று அவளுக்கு சில அடி தூரத்தில் படம் விரித்தபடி…

திரௌபதி சிலிர்த்துவிட்டாள்.

கதைகளில் மட்டும் அவள் கேள்விப்பட்ட விஷயம்.

அந்த இருதலை நாகம் மரபணுக் கோளாறால் ஒட்டிப் பிறக்கும் பிள்ளைகள் போல கூட பிறந்திருக்கலாம். ஆனால் அதன் தோற்றம் அவளை மிரட்டியது. வேலப்பனும் அதைப் பார்த்தான். அடுத்த நொடி கப்சிப் என்று வாயைப் பொத்திக் கொண்டு நின்றான்.

அது படம் விரித்த நிலையில் மெல்லத் தழைந்து அவளுக்கு எதிர்த்திசையில் சரசரவென்று நெளிய ஆரம்பித்தது.

"ஆத்தாடி ரெட்டை தலை நாகம்" என்றாள் அவளும் ஓங்கலாக. அந்த நொடி அது நெளிவதை நிறுத்திவிட்டு நிமிர்ந்து திரும்பிப் பார்த்தது.

"ஆத்தா பாக்குது அது...."

"ஆமாண்டா...."

அவள் ஆமோதிக்க அது சரசரவென்று மீண்டும் நெளிந்தபடி சென்றது. அது செல்லும் வழித்தடத்தில் ஒரு நபர் தாராளமாக நடக்கலாம் என்கின்ற அளவில் முட்கள் வெட்டப்பட்டது போல வழித்தடம் கண்ணில் பட்டது.

திரும்பவும் அது ஒரு இடத்தில் நின்று திரும்பிப் பார்த்தது. அவளுக்கு மெல்ல விளங்க ஆரம்பித்தது.

"வேலப்பா, அந்தப் பாம்பு நம்மை எங்கியோ கூப்பிடுதுடா...?"

"அப்ப பின்னால போய் பார்ப்போமா?"

"உனக்குப் பயமா இல்லையே...."

"எனக்கு என்ன பயம். தப்பு பண்ணவனை தான் பாம்பு கொத்தும்னு நீ சொல்லியிருக்கே. எனக்குத்தான் தப்பே பண்ணத் தெரியாதே."

படுவெள்ளந்தியாக வேலப்பன் பேசியது அவள் கண்களில் கண்ணிரை வரவழைத்துவிட்டது.நின்று ஒரு நீண்ட பெரு மூச்சு விட்டு அந்த நாகம் சென்ற வழித்தடத்தில் முடிந்த மட்டும் வேகமாக நடக்கத் தொடங்கினாள். நாகம் ஐநூறு அறுநூறு மீட்டர் சென்றிருக்கும். முள்கூட்டம் நடுவே பெரிய கட்டிடம் ஒன்று கண்ணில் பட்டது.

"ஆத்தா என்ன ஆத்தா அது.... நம்ம முள்ளுக் காட்டுக்குள்ள ஏதோ ஊரு"

"அதாண்டா எனக்கும் தெரியல..." என்று பதிலுக்கு அவள் சொல்ல அந்த இரட்டை தலை நாகம் அதன் பின் எங்கு போயிற்று என்றே தெரியவில்ல.

இருவரும் அந்தக் கட்டிடத்தைச் சமீபித்த பிறகுதான் தெரிந்தது. அது ஒரு சிறிய கோயிலின் இடிந்த சுவர்பகுதி என்று. அதற்கு அப்பால் நான்கு கல்தூண்கள் துளிகூட சாயாதபடி நின்றிருக்க, கல்தூண்கள் மேல் கூரையை மட்டும் பார்க்க முடியவில்லை.

அந்தக்கல் மண்டபத்துக்கு அப்பால் இடிந்த சிறிய கோபுரத்துடன் கூடிய ஒரு கருவறை. கருவறை நடுவில் சிவலிங்கம் ஒன்று!

அந்த சிவலிங்கம் மேல் அந்த இரட்டைத் தலை நாகம் ஏறி அமர்ந்து படம் விரித்திருந்தது. அதைப் பார்த்த திரௌபதி ஒரு வினாடி காலை நட்டுவாக்கிளி கவ்வினது போலத்தான் உணர்ந்தாள்.

"ஆத்தா"

"வேலப்பா....நம்ம காட்டுக்குள்ள கோயிலுடா...."

"அது லிங்கம் தானே?"

"ஆமாம். நான் கண்ணாலம் கட்டிகிட்டு வந்த புதுசுல உன் தாத்தா சிவன் கோயிலுக்குப் போய்வரேன்னு சொல்லிவிட்டு போய்ட்டு வருவார். அது இந்தக் கோயில் தான்னு எனக்கே தெரியலை பார்?"

"ஊருல கூட யாருக்கும் தெரியலியே ஆத்தா...."

"எல்லாம் தலை எழுத்து.... ஆயி அப்பனையே மறக்கற காலம். அதான் கும்புட்டுகிட்டு வந்த சாமியைக் கூட மறந்துட்டாங்க போல...."

திரௌபதி பேச்சோடு பேச்சாக உள் நுழைந்தாள். ஒரு பக்கத்தில் பாதி உடைந்த முருகன் சிலை.தலைகுப்புற புதைந்த நிலையில் பிள்ளையார். கை உடைந்த காலபைரவர் சிலை.... ஆனால் துளியும் பழுதின்றி நந்தி சிலை மட்டும் ஒரு மேடை மேல் அமர்ந்திருக்க, அந்த நந்தி சிலை மேல் ஒரு பன்னீர் மரம் வளர்ந்து பூக்களை அர்ச்சிப்பது போல சொரிய விட்டிருந்தது.

அது மட்டுமல்ல.... அந்தப் பீடத்தை அழகாகச் சுற்றி வரலாம் என்கிற மாதிரி வட்டமாக தடம். அந்தத் தடத்தில் தினமும் பலரும் நடந்திருப்பது போல ஒரு புல் பூண்டு கூட இல்லை.

மிகமிக ஆச்சரியப்படும் விதத்தில் நந்தி முன் சில அகல் விளக்குகள். ஒரு அகலில் பாதி நெய் உறைந்த நிலையில் வெள்ளையாக கண்ணில் பட்டது.

"ஆத்தா யாரோ வந்து விளக்கு போட்டு சாமியைக் கும்புட்டுருக்காங்க போல தெரியுது" என்று வேலப்பனும் எடுத்துக் கொடுத்தான்.

"ஆமாண்டா.... உள்ள சாமிகிட்ட கூட விளக்குங்க இல்லை. ஆனா நந்தியாண்ட விளக்குங்க. ஒரே ஆச்சரியமா இருக்குது எனக்கு."

அவள் கூறிட அருகில் ஒரு தீப்பெட்டி கிடந்தது. அதைத் திறந்து பார்த்த வேலப்பன் குச்சிகளை எடுத்து உரசினான். முதல் குச்சியே பற்றி எரிந்தது. அதைக் கொண்டு பாதி எரிந்து அடங்கியிருந்த நெய் விளக்கு அகலை ஏற்றினான். அது திரும்ப எரிய ஆரம்பித்தது.

"ஆத்தா நானும் இப்ப விளக்கு போட்டுட்டேன். நானும் இப்ப விளக்கு போட்டுட்டேன்." என்று படபடவென்று கைகளைத் தட்டிக் கொண்டான். அப்படியே மியூசிக்கல் சேரில் நாற்காலியைச் சுற்றிவருவது போல அந்த நந்தியை விளையாட்டாய் சுற்றித் ஓடத் தொடங்கினான்.

திரௌபதியோ அந்த நந்தியையும், உள்ளிருக்கும் சிவலிங்கத்தையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுக்குள் இனம் புரியாத உணர்ச்சிகள்.

இவ்வளவு நாட்களாய் இப்படி ஒரு கோயில் இருப்பது தெரியாமலே இருந்து விட்டது போல அவளிடம் ஒரு வருத்த உணர்ச்சி.

வேலப்பனோ விளையாட்டாகவே நந்தியைச் சுற்றிக் கொண்டிருந்தான்.இப்பொழுது சும்மா சுற்றாமல் "நந்தி சாமிக்கு அரோகரா.... சிவன்சாமிக்கு அரோகரா" என்று அவனிடம் முணுமுணுப்பு வேறு....

எல்லாமே மன வளர்ச்சியில்லாத ஒரு குழந்தைத் தனமாகவே இருந்தது. திரௌபதி அவன் சுற்றட்டும் என்று விட்டுவிட்டு மெல்ல கோயிலைச் சுற்றி வர ஆரம்பித்தாள்.

ஒரு இடத்தில் வேலிக் கருவேலமரம் ஒன்றன் மேல் காவித்துணி காயவைக்கப் போட்டது போல கிடந்தது. அந்த கருவேலமரத்துக்கு பக்கத்தில் நிறைய சாம்பல் துகள்கள். திரௌபதிக்கு ஒன்று மட்டும் நன்றாகப் புரிந்தது. இங்கே யாரோ அடிக்கடி வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள் என்பது தான் அது. மெல்ல நடந்து திரும்பி வந்தாள்.

சிறிய கோயில்தான்! மொத்தமாய் ஆயிரம் சதுரஅடிக்குள் அடக்கிவிடலாம். ஆனால் கோயிலைச் சுற்றி எல்லாவிதமான மரங்களும் கண்ணில் பட்டன. குறிப்பாக வில்வமரம் விண்முட்டுமளவு வளர்ந்திருக்க, அதில் பந்துப் பந்தாய் காய்கள்.

ஆச்சரியமாக இருந்தது.

காட்டைச் சீர்படுத்தி இந்தக் கோயிலையும் சீர்திருத்தி தினமும் ஆறுகால பூஜை செய்ய வழிவகை செய்ய வேண்டும் என்றெல்லாம் அப்போதே முடிவெடுத்து விட்டாள். அப்படியே மெல்ல நடந்து நந்தியிடம் வந்த போது வேலப்பன் சுற்றி வருவதை நிறுத்திவிட்டு விரைப்பாக நின்று கை கூப்பி வணங்கியபடி இருந்தான்.

அவன் அவ்வளவு பவ்யமாகநின்று சாமிகும்பிட்டு அவள் பார்த்ததேயில்லை. அவனும் மெல்ல கண் திறந்தான்.

திரௌபதியைப் புதிதாகப் பார்ப்பது போல பார்த்தான். பைத்தியக்காரத்தனமாகப் பார்க்கும் அந்தக் கோணப் பார்வையும், உடம்பு நெளிசல்களும் அவனை விட்டு எங்கோ போய் விட்டிருந்தது.

"வேலப்பா?

"அம்மா."

"அம்மாவா?

"என்னம்மா இது கேள்வி.... நீ அம்மாதானே?

"நான் உன் அம்மா தாண்டா.... ஆனா நீ என்னிக்குடா என்னை இப்படி கூப்பிட்டிருக்கே. ஆத்தான்னு தானேடா கண்ணு கூப்பிடுவே...."

"அப்படியா?"

"என்னடா.... ஒண்ணும் தெரியாதவன் போல பேசறே."

"தெரியல அம்மா.... எனக்கு இப்ப எல்லாமே புதுசா இருக்கு. இந்த இடம். நீ.... இந்த கோயில்..... நான்..... எல்லாமே புத்தம் புதுசா தெரியுது...."

அவன் பேசப் பேச திரௌபதிக்குள் இனம்புரியா ஒருவித சிலிர்ப்பு.

"வேலப்பா."

"அம்மா."

"நீ இப்படி தெளிவா பேசறத கேக்கும் போது எனக்கு எப்படி இருக்குது தெரியுமா?"

"அப்படின்னா நான் தெளிவில்லாம இருந்திருக்கேனாம்மா."

"அதை நான் சொல்லணுமாக்கும்.... எப்படிடா நடந்துச்சு இந்த அதிசயம். கழுத்து புருஷனும் சரியில்ல. வயிதது புருஷனும் சரியில்லைன்னு நான் நொறுங்கிப் போயிருந்தேன். ஆனா இப்ப உன்னை நான் பார்க்கறச்சே எனக்கு ஒரு புது நம்பிக்கை உருவாகியிருக்குடா"

"போதும்மா.... பழைய குப்பையைக் கிளற வேணாம்.இந்த கோயிலைப் பார்த்தியா… எவ்வளவு பாழ்பட்டுக் கிடக்குது.இதை முதல்ல சீர் பண்ணுவோம்"

"கட்டாயம். இந்தக் கோயிலை நான் பார்த்ததைப் பெரும் புண்ணியமா நினைக்கறேன். இது சாதாரண கோயில் இல்லை. எனக்கு வழிகாட்டுன இரட்டை தலை நாகமும் சாதாரண பாம்பு இல்லை. இந்த நந்தியை நீ சுத்திதான் புத்தி தெளிஞ்சிருக்கே. இங்கே சொல்ல முடியாத அளவு ஒரு சக்தி ஒளிஞ்சிருக்குடா"

திரௌபதி உணர்ச்சி மிகுதியோடு கண் கலங்கவும் செய்தாள்.

"ஆமாம்மா.... இப்பவே ஊருக்குள்ள போய் ஒரு அஞ்சாறு பேர் கூட வந்து இந்தக் கோயிலைச் சுத்தி உள்ள வேலிக் கருவலை மரங்களை எல்லாம் வெட்றேன். புறப்படும்மா"

திரௌபதியுடன் படுவேகமாகக் கிளம்பினான் வேலப்பன். அதே வழித்தடம்.... பார்த்துப் பார்த்து நடந்து வெளியே வந்து அரசூரின் வயல் வரப்பைத் தொட்டபோது எதிரில் புழுதி பறக்க வந்துநின்றது அந்த லாரி!

அதிலிருந்து மோகன் உள்ளிட்ட எல்லோரும் திபுதிபுவென்று இறங்கினார்கள். அவர்களைப் பார்க்கவும் வேலப்பனும் திரௌபதியும் தேங்கி நின்றார்கள். அவர்கள் இருவரையும் பார்த்தபடியேதான் வந்தனர். கைகளில் கடப்பாறை மண்வெட்டி!

திரௌபதிக்குக் கொஞ்சம் சுருக்கென்றது.

அவர்கள் திரௌபதியையும், வேலப்பனையும் தாண்டி கருவேலங்காட்டுக்குள் செல்லப் பார்த்தனர். வேலப்பன் தடுத்தான்.

"ஏய்.... நில்லுங்கப்பா.... நீங்கள்ளாம் யாரு.... இங்க எங்க போறீங்க?"

"நாங்க இந்த இடத்துக்குச் சொந்தக்காரங்க."

"சொந்தக்காரங்களா. இது புறம்போக்குன்னுல்ல சொன்னாங்க...."

"சொன்னவங்கள போய் கூட்டிக்கிட்டுவா. அப்ப தெரியும் நான் யார்னு."

"அப்படின்னா…?"

"இது எங்க இடம்னு சொல்றேன்ல...."

வேலப்பனின் தாட்டியம் மோகனையும் மற்றவர்களையும் திருதிருவென்று விழிக்கச் செய்தது.

"ஆமா இது என்ன கடப்பாரை, மம்முட்டி, புறம்போக்கு இடமாவே இருக்கட்டும். இங்கு எதைக் கொண்டுகிட்டு போக வந்தீங்க...."திரௌபதி வாஞ்சையாகக் கேட்டது மோகனோடு வந்தவர்களில் ஒருவரின் மனதைத் தொட்டது.

"அம்மா.... நாங்க பக்கத்து ஊர் சிவன் கோயில்ல வர்ற சிவராத்திரிக்கு அன்னதானம் செய்யப்போறோம். ஒரு பத்தாயிரம் பேருக்காவது அன்னதானம் செய்யறதா உத்தேசம். அவ்வளவு பேருக்கும் சமைக்க விறகு வேணும்தானே?"

"ஓ அதுக்காக இந்த வேலிக்கருவலை மரங்களை வெட்ட வந்தீங்களா?"

"சரியாச் சொன்னீங்க. இது உங்க நிலமாவே இருக்கட்டும். கோயில் காரியத்துக்கு மரம் வெட்ட விரும்பறோம். அதுவும் முள் மரத்தை.... அனுமதி தருவீங்களா?"

அவரும் திரௌபதியைப் போலவே வாஞ்சையாக திரும்பிக் கேட்டார். திரௌபதிக்கு ஒருபக்கம் சிலிர்ப்பாகக் கூட இருந்தது.

இப்பொழுதுதான் காட்டைச் சீர்திருத்த வேண்டும். அதற்கு ஆட்களோடு வரவேண்டும் என்று நினைத்திருந்தாள். ஆனால் அவளுக்கு முயற்சி எடுக்கக்கூட அவசியமற்ற நிலையில் எதிரிலேயே பத்துப் பதினைந்து பேர்.

அந்த நொடியில் அவளுக்கு ஒன்று மட்டும் நன்றாகப் புரிந்தது. உள்ளிருக்கும் சிவன் கோயிலில் தான் செய்த தரிசனமும், வேலப்பன் செய்த தரிசனமும் மிக மிக சக்தி வாய்ந்தவர்களாக தங்களை மாற்றத் தொடங்கி விட்டதாகவே தோன்றியது.

"வேலப்பா....நீயும் இவங்க கூடப் போ. ஐயா இந்த மொத்த காட்டையும் வெட்டி மரங்களைக் கொண்டு போங்கோ. இந்த காட்டுக்குள்ளேயும் ஒரு சிவன் கோயில் இருக்கு. அந்த கோயிலைச் சுத்தியும் நல்லாவே சுத்தம் பண்ணுங்க.எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை" என்றாள்.

அவர்கள் அவ்வளவு பேர் முகத்திலும் எல்லையில்லாத மகிழ்ச்சி. வேலப்பனும் அவர்களோடு சேர்ந்து கொண்டான்.

# 8

இந்த மண்ணில் அறிவுக்கு எட்டாத எவ்வளவோ அதிசயங்கள் இன்றும் இருக்கத்தான் செய்கின்றன! கற்பகமரம் இந்திரலோகத்தில் உள்ளதாக புராணங்கள் கூறுகின்றன. ஆனால் பூமியிலும் அது இருக்கிறது. அதைக் கண்டறியும் சக்தி தான் மனிதர்களிடம் இல்லை என்கின்றனர். விக்கிரமாதித்தனின் ரத்னசிம்மாசனம் அவன் காலத்திற்கு பிறகு ஒரு இடத்தில் புதைந்து கிடந்தது. அந்த இடத்திற்குமேல் யார் சென்றாலும் புத்தியில் ஒரு பெரிய அளவிலான மாற்றம் ஏற்பட்டு அவர்கள் மிக மிக நல்லவர்களாக மாறி நல்லதையே சிந்தித்தனர். அது அந்த சிம்மாசனத்தின் சக்தி. அதனால் தான் அதில் அமர்ந்து ஆட்சி செய்த விக்கிரமாதித்தன் தன் தலையையே குறி வைத்து வந்த முனிவன் ஞானசிவனுக்கு உதவி செய்ய முன் வந்தான். இவைகளை அறிவால் விளங்கிக் கொள்ள முயன்றால் குழப்பமே மிஞ்சும்!

ரிஜிஸ்டர் ஆபீசில் சரியான கூட்டம். வெளிப்படையாகவே லஞ்சம் அங்குத் தலைவிரித்தாடிக் கொண்டிருந்தது. சட்டைப் பாக்கெட்டில் பச்சை நோட்டு தெரிந்தால் தான் கேட்ட கேள்விக்குப் பதில் கூறினார்கள். விதவிதமான மனிதர்கள் குறுக்கும் நெடுக்கும் நடந்தபடி இருந்தனர்.

இந்தப் பூமி இறைவனின் சொத்து. இதில் சில காலம் வசித்துவிட்டுப் போகவுள்ள மனிதர்கள் பூமியைத் தங்கள் சொத்து என்றும், அதை வசப்படுத்தவும் அங்கே ஒரு பெரிய நாடகமே போட்டுக் கொண்டிருந்தனர்.

சிந்தாமணியும் மூத்தவளான ராஜாத்தியும் மட்டும் அங்கு வந்திருந்தனர். வக்கீல் வாதிராஜ் அவர்களுக்கு முன்பே அங்கு அந்தப் பணக்காரருடன் வந்து காத்திருந்தார். அவர்வரையில் அநாவசிய காத்திருத்தல்களே இல்லை. எவனோ ஒருவன் வந்து நேராக ரிஜிஸ்டரார் முன் கூட்டிச் சென்று அவரை நிறுத்த ரிஜிஸ்ட்ராரும் எழுந்து சென்று வணக்கம் கூறினார். அடுத்து மளமளவென்று பத்திரங்களில் கையெழுத்துப் போடுவது ரேகை உருட்டுவது என்கிற சடங்குகள் ஆரம்பமாகிவிட்டது.

சிந்தாமணி நீட்டிய தாள்களில் எல்லாம் கையெழுத்துப் போட்டாள். புரோக்கரைப் போன்ற ஒருவன் ஒவ்வொரு கையெழுத்தின் போதும் அவளிடம் அசடு வழிய சிரித்தான். அப்படியே "எண்பது லட்சத்துக்கு சொத்து எழுதி வாங்கிட்டதா வக்கீல் சொன்னாரு. நீங்க கெட்டிக்காரங்க. இந்த ஆபீஸ் மதிப்புப்படி பார்த்தா அம்பது லட்சம் கூட தேறாது...." என்று அவள் காதில் தேனை ஊற்றினான்.

அவளுக்கும் சிலீர் என்றிருந்தது!

ரிஜிஸ்தர் ஆபீசைவிட்டு வெளியே வந்தவள் வக்கீலைத் தேடினாள். ஆனால் வாதிராஜையும் சரி, அந்த பெரிய மனிதனையும் சரி பார்க்க முடியவில்லை.

"இந்த வக்கீலைப் பார்த்தியா.... விட்டேன் சவாரின்னு ஓடியே போய்ட்டானே. போவும்போது ஒரு வார்த்தை சொல்லிட்டு போகலாம்ல" என்று வாய்விட்டு வருத்தப்படவும் செய்தாள்.

அப்படியே ஒரு ஆட்டோ பிடித்து அவள் புதிதாக கணக்குத் துவங்கியுள்ள பேங்குக்கு விடச் சொன்னாள். கூடவே வந்த படி இருக்கும் மூத்தவள் ராஜாத்தியின் துணிப்பையில் எண்பது லட்ச ரூபாய்க்கான செக் பத்திரமாகவே இருந்தது. அந்த செக்குடன் நேராக பேங்க் அக்கவுண்ட்டண்ட் முன் போய் நின்றாள்.

"வாங்கம்மா சிந்தாமணியம்மா.... என்ன சொத்து பத்தை எல்லாம் வித்து பணம் வாங்கிட்டீங்களா?"

"பொறவு. எண்பது லட்சத்துக்கு ஒரே செக்கால்ல எழுதிக் கொடுத்துட்டான். இப்பதான் பத்திரப் பதிவு ஆபீசுக்குப்போய் கையெழுத்து போட்டு சப்ஜாடா எல்லா சொத்தையும் தலைமுழுகிட்டு வரேன்."

அவள் சொல்லச்சொல்ல அக்கவுண்டன்ட் முகத்தில் ஒரு வித அதிர்ச்சி பரவியது.

"ஏன் சார்.... உங்க முகம் ஒரு மாதிரி போவுது?"

"பின்ன.... செக்க வாங்கின நீங்க, இங்க அக்கவுண்ட்ல பணம் இருக்கான்னு பார்த்து, பணத்தை வாங்கிட்ட பிறகு கையெழுத்துப் போட்டுருக்கலாமேம்மா...."

அக்கவுண்டண்ட் சொல்லி முடிக்கும் முன்பே சிந்தாமணிக்கு மயக்கமே வந்துவிட்டது.

# 9

விக்கிரமாதித்தன் சிம்மாசனம் போலவே மண்ணில் எவ்வளவோ மர்மங்கள்.இமயமலையில் ஒரு இடத்தில் ஒரு மூலிகை மரம் இருக்கிறது. அதன் அடியில் அமர்ந்து ஒரு சில மணி நேரங்கள் தியானம் செய்தால்கூட போதும். அதன் பின் எந்தக் காலத்திலும் ஒருவருக்கு எந்தவிதமான வியாதியும் வராது என்பது நம்பிக்கை.

சில கிராமங்களில் கூட பல அதிசயமான விஷயங்கள் நிறையவே உள்ளன. குறிப்பாக வன்னிமரமும் அதன் கீழ் உள்ள பிள்ளையாரும் மிக விசேஷமானவர்கள். வன்னிமரப் பிள்ளையாரை வலம் வந்து வணங்கும்போது நினைத்தது நிறைவேறும். அது மட்டுமல்ல வன்னிமரம் உள்ள நிலமானது காலகாலத்துக்கும் எந்த சிக்கல்களுக்கும் உள்ளாகாது. இதனால் பலர் தங்கள் வீடுகளின் கொல்லையில் வன்னியை வளர்க்க பெரிதும் விரும்புவர்.

மளமளவென்று மரங்களை வெட்டிச் சாய்க்க ஆரம்பித்து விட்டனர் அவர்கள். மோகனும் வேலப்பனும் மட்டும் உள்ளிருக்கும் கோயிலைச் சுற்றியே வெட்டிக் கொண்டிருந்தனர். நடுநடுவே மோகன் கோயிலையும் லிங்கத்தையும் பார்த்துப் பார்த்து பரவசப்பட்டுக் கொண்டிருந்தான். அப்படியே நந்தி சிலையைப் பார்க்கும் போது அந்த நந்தி கண்விழித்து அவனைப் பார்ப்பது அங்கும் நிகழ்ந்தது. முதலில் சற்றுப் பயந்தாலும் பிறகு அருகில் சென்று சிலையை வருடிக் கொடுத்து உற்றெல்லாம் பார்த்தான். அப்போது அருகில் வந்த வேலப்பனும் "இது சாதாரண நந்தியில்லை.... கிறுக்கனா இருந்த என்னைத் தெளிய வெச்சு முழு மனுஷனாக்குன நந்தி" என்றான்.

"என்னங்க சொல்றீங்க?"

"ஆமாங்க நானே இந்த இடத்துக்கு இன்னிக்குத்தான் வந்தேன். இந்த ஊரில் முக்காலே மூணுவீசம் எங்க சொத்துதான். ஆனா இப்ப மிஞ்சியிருக்கிறது இந்த கருவேலங்காடு மட்டும் தான். இதையாவது சீர்படுத்தி ஏதாவது

விவசாயம் பண்ணுவோம்னு எங்கம்மா என்னைக் கூட்டிகிட்டு இங்க வந்தாங்க. ஒரு இரட்டைத் தலை நாகம் வழிகாட்டுச்சுன்னா பார்த்துக்குங்களேன்...."

வேலப்பன் விவரிக்க விவரிக்க மோகனுக்கு அந்த சிவாலயத்து உள்புறச் சுவற்றில் கல்வெட்டு ஆய்வாளர் படித்துச் சொன்ன செய்திதான் உடனே ஞாபகத்துக்கு வந்தது.

'ஒரு ஆச்சரியம் பாருங்க. விளையாட்டா இந்த நந்தியைச் சுத்திச் சுத்தி வந்தேன். ஒரு நூறு தடவை சுத்தியிருப்பேன் என் பைத்தியக்காரபுத்தி என்னை விட்டுப் போயிடிச்சு. அதை விட ஆச்சர்யம். இந்தக் காட்டைச் சீர்திருத்தம் பண்ணனும். ஒரு பத்துபேர் தேவை. அவங்களோட வருவோம்னு தான் இங்க இருந்து கிளம்பி வந்தோம். ஒரு ஆச்சரியம் பாருங்க, நீங்க அம்புட்டு பேரும் என்னமோ சொல்லி வச்சது மாதிரி வந்து நிக்கறீங்க."

வேலப்பன் சொல்லச் சொல்ல மோகனுக்குப் புரிந்து விட்டது. கல்வெட்டு ஆய்வாளர் குறிப்பிட்ட பரிகாரக் கோயில்களில் இதுவும் ஒன்று. இங்கே ஒரு விசேஷ சக்தி வெளியே தெரியாத நிலையில் ஏதோ ஒரு வகையில் குடி கொண்டிருக்கிறது என்பது வரை யூகித்தவன், அப்போதே நந்தியை வலம்வரத் தொடங்கிவிட்டான்.

"என்னங்க நீங்களும் சுத்த ஆரம்பிச்சிட்டீங்க?"

"நீங்க இவ்வளவு சொல்லும்போது சந்தேகப்பட்டா எப்படீங்க, எனக்கும் வாழ்க்கைல எவ்வளவோ சிக்கல்கள். அதுக்கெல்லாம் விடை சாமிகிட்டதான் இருக்கறதா நான் நம்பறேன். என் அக்கா ஒருத்தி கல்யாணமாகியும் வாழா வெட்டியா எங்க வீட்டோட இருக்கா.... அவளை வாழவைக்க எந்த விஞ்ஞானியாலும் முடியாதுங்கறதுதான் கொடுமை. இந்த மாதிரி சிக்கல்களுக்கு மட்டும் சைன்ஸ்ல தப்பா கூட ஒரு பதில் இல்லை. அதான் நான் சாமிகிட்ட வந்துட்டேன். உங்கள போலவே நானும் சாமிய சுத்தறேன். என் அக்காவுக்கு ஒரு விமோசனம் பொறக்குதான்னு பாக்கறேன்...." என்று பேசிக் கொண்டே நந்தியை வலம் வர ஆரம்பித்தான்.

"அதுவும் சரிதான்....காசா பணமா? சாமிகிட்டநாம கேக்கப் போறோம். அது நமக்கு கேட்டதைக் கொடுக்கப் போவுது. உங்களோட சேர்ந்து நானும் சாமிகிட்ட கேட்டுக்கறேன். ஒரு மேனாமினுக்கி எங்கப்பாவை ஏமாத்தி எல்லா சொத்தையும் எழுதி வாங்கிட்டா. இந்த சாமி அவளை எங்கம்மா காலடில விழுந்து கதற வைக்கணும். அப்படி வந்துட்டா நான் ஒருத்தனே என் சொந்த செலவுல இந்த சிவன் கோயிலைப் பெருசா எடுத்துக் கட்டி சதா சர்வ காலமும் இங்கையே கிடப்பேன். இது சத்தியம்" என்று நந்தியின் விடைத்த காதுகளில் விழும்படி சொல்லிவிட்டு மோகனோடு சேர்ந்து சுற்ற ஆரம்பித்தான். இதைத் தொலைவில் மரம்வெட்டிக் கொண்டிருந்த சிலர் ஆச்சரியத்தோடு பார்த்தனர். அவர்களில் ஒருவர், இவர்கள் இருவரையும் நெருங்கி வந்தார்.

"என்ன மியூசிகல் சேர் மாதிரி ஓட்டம். நந்தி என்ன உங்களுக்கு நாற்காலி மாதிரியா?' என்று கேலியாகக் கேட்டார்.

"இல்ல சார்.... சும்மா ஒரு பிரார்த்தனை"

"பிரார்த்தனையைக் கோயிலுக்குள்ள சுவாமிகிட்ட போய் சொல்லுப்பா."

"அங்கேயும் சொல்லியாச்சு. இங்க நந்திகேஸ்வரர் கிட்டயும் சொல்லிட்டா வேகமா நடக்கும்னு ஒரு நம்பிக்கை."

"நந்தி ஒரு வாகனம்ப்பா.... விட்டா நந்திக்கும் ஒரு கோயில்கட்டி கூத்தடிப்பீங்க போல இருக்கே...."

அவரிடம் இடக்குப் பேச்சும் வெளிப்பட்டது.

"சார் தயவு செய்து கொஞ்சம் தள்ளிப் போய்ப் பேசுங்க. இங்க சாமிகிட்ட வேண்டாம்" என்றான் மோகன்.

"ஏன்.நந்தி காதுல விழுந்து எழுந்து வந்து என்னைமுட்டி கீழே தள்ளிடுவாரா?"

"அது எனக்குத் தெரியாது. ஆனா உங்க ஆசை அதுன்னா அதுக்கு நான் ஒண்ணும் பண்ண முடியாது"

"அப்படியா.... அப்ப அதையும் தான் பாக்கறேனே. எப்படி நந்தி வந்து முட்றதுன்னு...." என்று கேலியாகச் சொல்லிக் கொண்டே அவர் நகர்ந்தார்.

அவர்கள் இருவரிடமும் மெய் மறந்த பிரதட்சணம். சிறிது நேரத்தில் 'ஆ' என்ற ஒரு சப்தம். இருவரும் பிரதட்சணம் முடிந்த நிலையில் சப்தம் வந்த திக்கு நோக்கி ஓடினர். சற்று முன் வாயடித்தவர் கீழே விழுந்து கிடக்க அவர் எதிரில் ஒரு காளை மாடு அவரை முட்டுவதற்குத் தயாராக.... மோகன் அதைப் பார்த்துப் பதறிட, வேலப்பன்போய் அதை இழுத்துப் பிடித்தான்.

"சார் எங்க ஊர் பண்ணையார் வீட்டு மாடு தான். ஆனாலும், நீங்க சாமிகிட்ட சொன்ன மாதிரியே நடந்துடுச்சு பாத்தீங்களா?" என்றான்.

அப்போதுதான் மோகனுக்குள் ஒரு மின்னல்.

அப்படியே அங்கிருந்து திரும்பிப் பார்த்தான்.

அங்கே இருப்பது ஒரு கல் நந்தி சிலையாக அவன் வரையில் அது தெரியவில்லை. நந்திகேஸ்வரரே நின்று கொண்டு அவனைப் பார்த்துச் சிரிப்பது போல இருந்தது.

"ஈஸ்வரா' என்று புளகாங்கிதத்தோடு முணுமுணுத்துக் கொண்டே புறப்பட்டான்.

# 10

திட்டமிட்டு இயற்கை சக்திகளை மக்கள் பெற வேண்டும் என்கிற நோக்கோடு வடிவமைக்கப்பட்ட பல ஊர்கள் காலத்தால் சிதைந்து உருத்தெரியாமல் போனது தான் பெரிய கொடுமை. ஒவ்வொரு ஊருக்கும் ஸ்தல விருட்சம் போல ஊர்மரம் என்று ஒன்று இருந்தது. அது நன்கு வேர் விட்டு தழைத்து வளர்ந்து பச்சைப் பசேல் என்று இருந்தவரை அந்த ஊரில் ஒரு குறையும் இல்லை.

பேராசை பிடித்த மனிதன் மரம் உள்ள இடத்தில் வீடு கட்டவும் சாலை போடவும் அதை வெட்டிய பிறகுதான் ஊரும் மாற ஆரம்பித்தது. இப்போதும் ஊர்மரம் எது என்று கண்டுபிடித்து அதை நட்டு வளர்த்தால் ஒவ்வொரு ஊரும் வளர்பெற்றே தீரும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கை சார்ந்த ஒரு விஷயமாகும்!

வீட்டுக்குள் நுழைந்த மோகனுக்கு ஆச்சரியம் காத்திருந்தது. அவன் சகோதரியின் மைத்துனன் ஹாலில் அமர்ந்து காபி குடித்துக் கொண்டிருந்தான். மோகன் வரவும் இணக்கமாகச் சிரித்தான்.

மோகனின் அக்கா அவனை என்றுமில்லாதபடி ஒருவித மலர்ச்சியோடு பார்த்தாள். அப்படியே தனியே அவனை அழைத்துக் கொண்டு ஒரு அறைக்குள் நுழைந்தாள். கதவைத் தாழிட்டுக் கொண்டு அவனிடம் பேச ஆரம்பித்தாள்.

"மோகா.... அவர் நிலை இப்ப ரொம்ப மோசமா இருக்காம். என் மாமனார் அவரோட ஊதாரித்தனம் ஒழுக்கக்கேடு எல்லாத்தையும் பார்த்துட்டு சொத்தை என்பேருக்கு எழுதி வெச்சுட்டாராம். அவ்வளவும் அவர்கள் சுயமா சம்பாதிச்ச சொத்து. அதனால் என் கணவராலயும் எதுவும் கேட்க முடியலை. அதுல என் கூட நல்லபடி வாழறதா இருந்தா சொத்தை அனுபவிக்கலாம் இல்லேன்னா விவாகரத்து பண்ணிடச் சொல்லியும் எழுதிட்டாராம். கோயிலுக்குப் போய்ட்டு வந்தவர், ஒரு மணி நேரத்துல வக்கீலை வரவழைச்சு இவ்வளவு

காரியத்தையும் செய்திருக்கார்னா பாத்துக்கேயேன். என் மச்சினன் இந்த விஷயத்தை எல்லாம் சொல்லத்தான் வந்திருக்கான். எப்ப சொத்து இல்லைன்னு ஆச்சோ, அப்பவே அவரும் மனம் மாறி நான் இனி சாவித்திரி கூட சந்தோஷமா குடும்பம் நடத்தறேன்னு சொல்லிட்டாராம்."

அவன் சகோதரி சாவித்திரி சொல்லச்சொல்ல மோகனுக்குப் புல்லரித்தது. மனசுக்குள் நந்தீஸ்வரர்தான் திண்ணென்று நிமிர்ந்தார். கண்ணிரண்டும் மளமளவென்று குளமாகிவிட்டது.

"நீ ஏண்டா அழறே. பணத்துக்காக புத்திமாறுற மனுஷன், ஒரு மனுஷனா இவரை நம்பலாமான்னு தானே?"

"இல்லக்கா.... இனி உனக்கு நல்ல காலம் தான் மாப்ளை இனி நல்லவிதமா கட்டாயம் மாறிடுவார்."

"மோகா.... நீயா இப்படிசொல்றே?"

"நானேதான்கா.... நானேதான். உனக்கு விடிஞ்சாச்சு. என் பிரார்த்தனையும் பலிச்சாச்சுக்கா"

"பிரார்த்தனையா?"

"ஆமாம்.... அரசூர்ங்கற ஊர்ல ஒரு குட்டி சிவாலயம். அங்க நந்தி சிலை. அது நந்தி சிலை இல்ல. கேக்கறவங்களுக்கு கேக்கறது தர கற்பக விருட்சம் அது. அதுவும் கேட்ட உடனேயே கொடுத்துடறார். இப்பதான் அங்க பிரார்த்தனை பண்ணிண்டு வந்தேன். உள்ள நுழையறேன் உனக்கு விடியப்போற விஷயம் காதுல விழுது."

"நான், நீ இதுக்கு சம்மதிக்க மாட்டேன்னு நினைச்சேன். ஏன்னா சொத்துக்காக என்மேல பிரியம் காட்றேன்னு சொல்றவரை எதை வெச்சு நாமளும் நம்ப முடியும் நீயே சொல்லு பார்க்கலாம்."

"ஒரு கோணத்துல அது உண்மைதான். ஆனா இந்த மாற்றம் சொத்தால மட்டுமில்ல. இதுக்குப் பின்னால சாமியும் இருக்காருக்கா" என்றவன், அந்த நொடியே இவ்வளவுக்கும் பாதை போட்டுத் தந்த தீட்சதரைத்தான் நினைத்தான். அவரைப் போய் பார்த்து கல்வெட்டு செய்திப்படி ஒவ்வொரு விஷயமும் அப்படியப்படி நடப்பதை அவரிடம் கூறி அந்த நந்தீஸ்வரர் புகழை உலகுக்கே தெரிவித்துவிட வேண்டும் என்பது போல துடிக்கத் தொடங்கிவிட்டான்.

அரசூரில் கோவிந்தராஜ உடையாரின் வீட்டுமுன் ஒரே ரணகளம். சிந்தாமணியின் மாப்பிள்ளைகள் இருவரும் அரிவாளும் கையுமாக வக்கீல் வாதிராஜை வெட்டி பொலி போட்டு விடுவதாகக் கூறி புறப்பட்டுக் கொண்டிருந்தனர். வீதியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. ஒருவரும் அவளிடம் சென்று என்ன பிரச்சினை.... எதனால் இந்த ஆவேசம் என்று கேட்கவில்லை. மாறாக "பிச்சை எடுத்தாராம் பெருமாளு.... அதை புடுங்கித் தின்னாராம் அனுமாரு கதையாகிப் போச்சு" என்று பழமொழிகளைச் சொல்லிச் சிரிக்க செய்தனர்.

சிந்தாமணி அரைமயக்கத்தில் இருந்தாள்.

அவளுக்கு ஓங்கி அழக்கூட தைரியம் இல்லை.

நிஜமாலுமே பாதிக்கப்பட்டவர்கள் இந்த மாதிரி தருணங்களில் தெய்வங்களிடம் முறையிடுவார்கள். "கடவுளே நான் என்ன துரோகம் செய்தேன். எனக்கு ஏன் இப்படி ஒரு சோதனை?" என்று தான் கண்ணீர் விடுவார்கள். சிந்தாமணியால் அப்படியெல்லாம் கடவுளிடம் போய் நிற்க முடியாது. அவ்வளவு ஏன்? கடவுளை நிமிர்ந்து பார்க்கக் கூட அவளது குற்றம் அவளைவிடவில்லை.

அப்போதுதான் அவளுக்குக் கூட பிரார்த்தனை செய்யக்கூட ஒரு யோக்கியதை இருக்க வேண்டும் என்பதே புரிந்தது. ஒரு பக்கம் தான் தன் கணவரைப் போன்ற உடையாருக்குச் செய்த துரோகத்துக்குத் தனக்கு இப்படி ஒரு தண்டனை தேவை தான் என்றும் தோன்றியது. ஆனால் எதையும் வாய்விட்டுப் பேச முடியவில்லை.

மாப்பிள்ளைகள் இருவருமே இப்படி எதைப் பற்றியும் சிந்திக்காமல் வக்கீலையும் அந்த பணக்காரபெரிய மனிதரையும் போட்டுத்தள்ள முடிவு செய்தவர்களாகப் போய்க் கொண்டிருந்தனர்.

முதற்காரியமாக தங்களிடம் எழுதி வாங்கிக் கொண்ட சொத்துக்களில் ஒன்றான நஞ்சை வயல் பக்கம் போய் விளைந்து நிற்கும் வயலுக்கு நடுவில் நின்று கொண்டனர்.

இடத்தை எழுதி வாங்கிக் கொண்டவன் இடத்திற்கு வந்துதானே தீரவேண்டும்?

ஆனால் தலையாரியோடு வக்கீல் ஒருவர் கோர்ட்டில் இருந்து நேராக வருவதுபோல் கோட்டும் டையுமாக வயல்வெளிமுன் காரில் வந்து இறங்கினார்.

மாப்பிள்ளைகள் சின்னராசுவும் முத்தையனும் அரிவாளைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு ஓடி வந்து நின்றனர். புதிய வக்கீலைப் பார்த்தவர்களுக்குத் திகைப்பு.

தலையாரி அவர்களிடம் பேசத் தொடங்கினார்.

"எலேய்.... என்னங்கடா இது அய்யனார் மாதிரிகைல அருவா. அதான் சொத்தை எல்லாம் எழுதிக் கொடுத்துட்டீங்கல்ல. அப்புறம் என்னடா இது ஆவேசம்?"

"தலையாரி.... என்ன கொழுப்பா? நாங்க ஏமாத்தப்பட்டது உனக்குத் தெரியாதா?"

"அதுக்கென்ன பண்ண.... உங்களுக்கும் எங்க உடையார் சொத்துக்கும் என்னடா சம்மந்தம்? நீங்க அவரை மயக்கி ஏமாத்தி எழுதி வாங்கலை'

"தலையாரி."

"பொத்துடா.... சும்மா எகிறாதே.... உன் மாமியார் அவதான் பெரிய புலின்னு நினைச்சு ஏமாத்தப் பார்த்தா. அவளுக்கு மேல புலியும் சிங்கமும் ஊருக்குள்ள திரியும் போது, அவளால இனி என்ன செய்ய முடியும்?"

"என்ன செய்ய முடியுமாவா..... இந்த அரிவாளுக்குப் பதில் சொல்ல முடியுமா முதல்ல அவங்களால?"

"இதோபார்.... உன் மாமியாருக்கு டப்பா செக் கொடுத்தவன் ஊரை அடிச்ச உலைல போட்றதையே தொழிலா வெச்சுக் கிட்டிருக்கறவன். அவனுக்கு மேல அவனோட வக்கீலு. இப்ப அந்த ஆள் இவ்வளவு சொத்தையும் முறையா சட்டப்படி இதோ இந்த வக்கீலோட வாதிக்கு எழுதிக் கொடுத்தாச்சு. இவரும் இடத்தை அளந்து பாத்து சரியா இருக்கான்னு தெரிஞ்சுக்க வந்துட்ருக்காரு. கைல கோர்ட் ஆர்டர் இருக்குது. ஊர் தலயாரி நான், இவருக்கு ஒத்தாசை பண்ண வேண்டியது என் கடமை. நீ அரிவாளைத் தூக்கிட்டு வெட்றதா இருந்தா, போய் அந்த ஆளையும், அந்த வக்கீலையும் வெட்டு. எங்களுக்கு வழிவிடு...."

தலையாரி பொளந்து கட்டினார். இருவர் முகத்திலும் ஈயாட்டமில்லை. சக்தி அவ்வளவும் ஆவியானது போல உணர்ந்தவர்கள் வக்கீலிடம், "ஐயா அந்த டுபாக்கூர் வக்கீல் இப்ப எங்கங்க இருக்கான்?" என்றுதான் கேட்டனர்.

"என் அறிவுக்கு எட்னதை வெச்சு சொல்றேன். அந்த வக்கீலையும் சரி, உங்களை ஏமாத்திட்டதா நீங்க சொல்ற பணக்காரரையும் சரி, இனி உங்களால எங்கே தேடினாலும் பிடிக்க முடியாது. அவங்க மேல கிரிமினல் வழக்கு போட்றதுன்னா கூட உங்ககிட்ட எவிடென்ஸ் பெருசா இல்லை. அந்த போலி செக்கை நான் கொடுக்கலைன்னு அந்த ஆள் சொல்லிட்டா கேஸ் நிக்காது.சுருக்கமா சொன்னா இரண்டு மலை ஆடுங்க மோதிக்கிட்டதுல ஒரு மலை ஆடு அவுட்டான மாதிரிதான் இந்த விவகாரம்.

சட்டப்படி போய் இதுல ஒரு நியாயத்தை அடையறத விட உங்க அரிவாளுக்கு சக்தி அதிகம். ஆனா அதுலயும் அவன் கில்லாடி. ஏன்னா அவுங்க கிட்ட மெஷின்கன்னே இருக்குங்கறது எனக்குத் தெரியும். பேசாம ஒதுங்கிப் போயிடுங்க. இல்லே உங்களை ஓசைப்படாம கொன்னு புதைச்சுட்டு கைய உதறிகிட்டு அவங்க போய்கிட்டே இருப்பாங்க.

ஏன்னா பேராசைலையும் தப்பு பண்றதுலையும் நீங்க கத்துக்குட்டிங்க. அவங்களோ மாஸ்டருங்க."

புதிய வக்கீல் ஒரு பிளாஸ்திரியை வாயில் ஒட்டாத குறை. இருவரும் அப்படியே ஓரமாக வரப்புமேல் உட்கார்ந்து விட்டனர். அதைப் பார்த்த தலையாரிக்கு சிரிப்புதான் வந்தது.

"எலேய் திருட்டு நாயுங்களா.... இங்க உங்களுக்கு அம்புட்டும் போச்சு. ஆனா போனா போகட்டும்னு நீங்க கொடுத்த மலட்டு நிலத்துல அந்த திரௌபதி நிமிர்ந்து நிக்கறாடா. சாமி அவபக்கம் தான்! அதனால தான் மந்திரம் போட்ட மாதிரி அவ மகன் குணமாகி இப்ப அவ்வளவு தெளிவா பேசறான். அந்தமுள்ளுக்காட்டுல ஒரு முள்ளுமரத்தைப் பேத்து எடுக்கைல ஊத்து பீறிகிட்டு வந்து தண்ணி பெருகி ஓடிகிட்டு இருக்கு. அது இனி முள்ளுக்காடு இல்ல. சோலைவனம். பத்தாக்குறைக்கு இந்த ஊருக்கே புதுசா ஒரு கோயில் வேற கிடைச்சிருக்கு. நல்ல நேரத்துல அந்தக் கோயிலுக்குப் போய் சாமி கால்லயாவது விழுந்து கும்புடுங்கடா. உங்களுக்கு இனியாச்சும் நல்ல புத்தி வரட்டும்."

தலையாரி நடு முதுகில் இழுத்து வைத்துச் சூடு போட்டது போல பேசிவிட்டுப் போனார். இருவரும் விதிர்த்துப் போய் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

# 11

ஊருக்குள் ஊர். ஊர்மரங்கள் மட்டுமல்ல ஒவ்வொரு ஊரிலும் அதன் வளத்துக்கும் நலத்துக்கும் தேர்த்திரு விழாக்களும் பெரிதும் பங்கு வகிக்கின்றன. தேர்திருவிழாவில் தான் மொத்த மக்களும் ஒன்று கூடி தேரை இழுக்கின்றனர். அத்தனைபேரும் அப்படி சேர்ந்து இழுத்தால் தான் தேரும் நகர முடியும். இதனால் ஒற்றுமை உண்டானது. அடுத்து வேற்றுமை அடியோடு நீங்கியது. எல்லாவற்றுக்கும் மேலாக ஊருக்குள் கோயில் இருக்கும் நிலையில் ஊரே கோயிலாவது தேர்த்திருவிழாவில்தான். வயதானவர்கள்,நடமாட முடியாதவர்களை தெய்வம் தானே தேடிவருவது என்பது இந்த நாளில் தான். பல அரிய காரணங்களைக் கருதியே இது போன்ற விழாக்கள் உருவாக்கப்பட்டன.

தேர் ஓடாத ஊரில் சீர் ஓடாது என்பது பழமொழி!

மோகன் சொல்லி முடித்த அவ்வளவையும் கேட்ட தீட்சதர் முகத்தில் அப்படி ஒரு பிரகாசம். அவனையே வைத்த கண் வாங்காமல் பார்த்தார்.

"சாமி.... என்ன சாமி பேசாம என்னையே பாக்கறீங்க. நான் சொன்னதை உங்களால் நம்ப முடியலையா?"

"சேச்சே.... நீ எவ்வளவு கொடுத்து வெச்சவன்னு யோசிச்சு பார்த்தேன்."

"சாமி.... என்னைவிட நீங்கதான் கொடுத்து வச்சவர். நீங்க மட்டும் அன்னிக்கு வாணிமகால் லைப்ரரில் போய் சாமிகால்ல விழுன்னு சொல்லலைன்னா, நான் என்ன சாமி செய்திருக்க முடியும்?"

"தம்பி மோகா.... நான் கூட சும்மா பொதுவா அப்படிச் சொன்னேன். என் வரைல உன்னை நான் அன்னிக்கு அழகா சமாளிச்சேன். அவ்வளவுதான். உண்மைய சொல்றேன். இத்தனை வருஷ அனுபவத்துல சுவாமியை உன்னைப் போல உருக்கமா பயபக்தியோட முழு நம்பிக்கையோட நான்

சேவிக்கவே இல்லை. அப்படிச் செய்திருந்தா இப்ப உனக்கு ஏற்பட்ட அனுபவங்கள் எனக்கும் ஏற்பட்டிருக்குமோ என்னவோ...."

"சாமி நீங்க எப்படிச் சொல்லியிருந்தாலும் சரி. இப்ப எனக்கு ஒரு உலக அதிசயம் இருக்கற இடம் தெரியும். நிஜமா சொல்றேன். அந்தக் கோயிலும் அந்த நந்தியும் கேட்டா கேட்டதைக் கொடுக்கறவங்க. அதுக்கு சாட்சி நம்ம ஊர் சிவன் கோயில் கல்வெட்டுங்க."

"வாஸ்தவம்தாம்ப்பா.... நான் இப்பவே உன் கூட வரத்தயார். என்னைக் கூட்டிண்டு போறியா?"

"அதுக்கு தானே சாமி வந்திருக்கேன்.... உடனே கிளம்புங்க" மோகன் தீட்சதரோடு கிளம்பிவிட்டான்.

திரௌபதி ஒரு மூங்கில் கூடையில் வைத்து நெய் பால் என்று அபிஷேகப் பொருட்களுடன் தன்னுடைய முள்ளுக் காட்டு சிவன் கோயிலுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள். வீட்டு வாசலுக்கு வந்து குடிசையின் கதவைத் தாழிடப் போன அவள் காதுகளில், "அக்கா" என்று குரல். கதவைக்கூட தாழிடாமல் திரும்பியவளுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

எதிரில் சிந்தாமணி!

அவள் கன்னத்தில் கண்ணீர் வரி.

அவளுக்குப் பின்னாலேயே அவளது மகள்கள் மாப்பிள்ளைகள்.

திரௌபதி மௌனமாகவும், ஆச்சர்யமாகவும் சிந்தாமணியை வெறிக்கத் தொடங்கினாள். நல்லவேளை கறந்தபாலும் கையுமாக வேலப்பனும் வந்துவிட்டான். அவனிடமும் ஆச்சரிய அதிர்வுகள்.

மௌனமாக அழுது கொண்டு அக்கா என்று குரல் கொடுத்திருந்த சிந்தாமணி சட்டென்று ஓடி வந்து திரௌபதியின் காலில் விழுந்தாள்.

திரௌபதிக்கு தர்ம சங்கடமாக இருந்தது.

அவளைத் தொட்டுத் தூக்க கூட அவளுக்கு நெருடலாக இருந்தது.

"திரௌபதி, தூக்கிவிடு ஆத்தா. அவ இப்ப பழைய குந்தாணி சிந்தாமணி இல்ல.... மனசு தெளிஞ்ச நல்ல சிந்தாமணி இவ" என்றொரு குரல் கேட்டது. நிமிர்ந்து பார்த்தாள். எதிரில் ஆறுமுக நாயக்கர்.

"என்ன ஆத்தா பாக்கறே.... சிந்தாமணி இப்ப பாடம் படிச்சுட்டா. எல்லா தப்பையும் என்கிட்ட சொல்லி வருத்தப்பட்டா, இப்ப கூட உன்னைச் சமாதானப்படுத்தல்லாம் அவ வரலை. உன்கிட்ட மன்னிப்பு கேட்கத்தான் வந்துருக்கா" நாயக்கர் அவளுக்காக எடுத்துக் கொடுத்தார்.

"போதும் நாயக்கரே போதும். அதான் எல்லா சொத்தும் போயிடிச்சே. அப்புறம் மன்னிப்பு கேட்டா என்ன? இப்ப எவனோல்ல ஏமாத்தி கொண்டுகிட்டு போய்ட்டான்." வேலப்பன் நாயக்கரிடம் தன் கோபத்தை வார்த்தைகளாக்கினான்.

"நீ சொல்றதும் நாயம் தான் வேலப்பா.... ஆனா உங்க சொத்து உங்களுக்கே திரும்ப வரப்போகுது. எப்படின்னு கேக்கறியா? சிந்தாமணி தான் உடையாரை ஏமாத்தி சொத்து வாங்கின விவரத்தை போலீசுல சொல்லப் போறா. உடையார் மனப்பூர்வமா அந்த சொத்தை இவளுக்கு எழுதித்தராததால சட்டப்படி அது உங்களுக்குத் தான் சொந்தம். தனக்கு என்ன வந்தாலும் சரி, அந்தத் திருட்டுப் பசங்க உங்கப்பா சொத்தை அனுபவிக்கக்கூடாதுங்கறது இப்ப சிந்தாமணியோட விருப்பம்."

நாயக்கர் சொல்லச் சொல்ல வேலப்பனுக்கு உடனே நந்தி எண்ணம் தான் வந்தது. அதன் முன் தான் வேண்டிக் கொண்டதும் அதன்படியே சிந்தாமணி தன் தாயின் காலடியில் விழுந்து கிடப்பதையும் பார்த்தவன் அதற்கு மேல் ஒரு வார்த்தை பேசவில்லை. அங்கிருந்து படுவேகமாக அவளையும் அழைத்துக் கொண்டு கோயிலுக்குத் தான் புறப்பட்டான்.

திரௌபதி என்ன நினைத்தாளோ தெரியவில்லை. கண்ணீரோடு நின்ற சிந்தாமணியையும் தன்னோடு கோயிலுக்கு வரும்படி கேட்டுக் கொண்டாள். சிந்தாமணி அதைக் கேட்டு சிலிர்த்துவிட்டாள்.

"அக்கா உங்களுக்கு என்மேல கோபமே இல்லையா? எவ்வளவு பெரிய மனசுக்கா உங்களுக்கு" என்றாள்.

"போதும் உனக்குத் தாண்டி பெரிய மனுசு, தப்பு பண்றதைவிட பெரிய விசயம் அந்தத் தப்பைத் திருத்திக்க முன் வர்ற தைரியம் தான். அது உன்கிட்ட இருக்குது"

"இந்த மாதிரி அசட்டுத் தைரியத்துக்கு என்கிட்ட பஞ்சமே இல்லை. எனக்கு உங்கள மாதிரி பொறுமை தாங்கா பெரிய விசயமா படுது."

"எல்லாம் இனி உனக்கு வந்துடும். என்கூட கோயிலுக்கு வா. அது நம் நிலத்துக் கோயில். அங்க போய்ட்டு வந்தாலே நல்லது நடக்குது. பாரு என் வேலப்பனை.... அவன் இப்படியா இதுக்கு முந்தி இருந்தான்."

"நெசம்தாங்கா.... நீயும் என்னைக் கூப்பிட்டது ரொம்ப சந்தோசம்.ஆனா நான் பாவிக்கா.தப்பு பண்ணனவ கோயிலுக்குப் போறத விட முக்கியமான விசயம் நான் போலீசுக்குப் போறதுதான்."

"அதெல்லாம் எதுவும் வேண்டாம். நம்ம சொத்து நல்ல சொத்துண்ணா அந்த ஏமாத்துக்காரனே திரும்பி எடுத்துக்கிட்டு வந்து தருவான். எல்லாத்தையும் சாமி பாத்துக்குவார். நீ இப்ப என்கூட கோயிலுக்குவர்றே"

திரௌபதியின் பெருந்தன்மை நாயக்கரையே சில்லிட வைத்தது.

"ஆத்தா.... நீ இப்ப அந்த கோயில்ல இருக்கற சாமிக்கு மேல போய்ட்டே" என்று பரவசப்பட்டார்.

அனைவரும் ஒன்றுபோல கோயிலுக்குக் கிளம்பினர்.

# 12

அந்த நாளில் சில ஊர்கள் வறட்சியால் வாடின. மக்கள் தண்ணீர் இன்றிச் செத்து விழுந்தனர். கால் நடைகளும் நீரின்றித் தவித்த போது அந்த ஊர்ப்பக்கமாக வந்த சில சித்தர்கள் அதற்கான காரணத்தைக் கண்டறிந்து போக்கினர். மழைபெய்வது இயற்கையின் கையில்.... அதற்கு ஒரு ஊரின் அமைப்பு என்ன செய்யும் என்று கேட்கலாம். ஆனால் சித்தர்கள மழை பொய்க்காமல் இருக்க, நுட்பமான பல வழி முறைகளைத் தெரிந்து வைத்திருந்தனர்.

அதன்படி அவர்கள் ஊரின் முக்கியமான இடங்களில் ஓங்கி வளர்ந்து நிற்கும் மரங்களையும் வெட்ட வெளியில் சில கற்களையும் நட்டு வைத்துச் சென்றனர். கொதிக்கும் வெயில் நேரங்களில் கல் மரங்களில் அக்னி அலை உருவாகும். குளிர் நிழல் மரங்களிலோ அதற்கு நேர் எதிரான அலை உருவாகும். இரண்டும் கலந்திடும் போது அது ஒரு வித ஜீவவாயுவாக மாறி மேலெழும்பும்.

அப்போது சுற்று வட்டாரத்தில் சுமாரான அளவு கார் மேகங்கள் இருந்தாலும் அவைகளை அந்த வாயுக்கள் இழுத்திட அங்கே மழை பெய்யும் ஒரு வாய்ப்பு உருவானது.

இன்று ஊரில் அப்படிப்பட்ட பல சிறப்புகளை நாம் விரிவாக்கம் என்கிற பெயரில் இழந்து விட்டோம்!

அந்த சிவாலயத்துக் கல்வெட்டுச் செய்தியை விரிந்த விழிகளோடு படித்த தீட்சதர் முகத்தில் ஒரே பரவசம். உடன் இருந்த மோகன் ஒரு கேமராவில் அந்த கல்வெட்டுக் காட்சிகளைப் படம் பிடித்துக் கொண்டிருந்தான்.

"அப்பா மோகா.... அவ்வளவும் அபூர்வமான தகவல்கள். இந்தக் கோயில் ஒரு பரிகார கோயில். இங்க இருந்து மண் எடுத்துண்டு போய் கட்டின கோயில் தான் அந்த அரசூர்கோயில்.

அந்தக் கோயில் சிறப்புக்குக் காரணத்தை அங்க போனா கண்டு பிடிச்சுடலாம். அது மட்டுமில்ல, இந்தக் கோயிலையே சிவராத்திரில 108 முறை சுத்தினா பொன் கிடைக்கும்னு போட்டிருக்கு. அதையும் சோதிச்சு பார்த்துட வேண்டியது தான்...."

தீட்சதர் பேச்சு மெல்ல திசைமாறி சோதித்துப் பார்ப்பது என்பதில் போய் நின்றது. மோகனும் அதைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. அப்படிப் பேசுவதும் சிந்திப்பதும் தவறு என்றே அவனுக்கு தெரியவில்லை.

"ஆமாம் சாமி....நான் சிவராத்திரி அன்னிக்கு 108 தடவை இல்ல.... 1008 தடவையே பிரதட்சணமா வரப்போறேன்." என்றான்.

"ரொம்ப சரி.... அப்புறம் ஒரு விஷயம்...." தீட்சதர் சுற்றும் முற்றும் யாராவது இருக்கிறார்களா என்பது போல பார்த்தார்.

"என்ன சாமி.?"

"இல்ல இந்த விஷயம் ரகசியமாவே இருக்கட்டும்"

"ஏன் சாமி?"

"பைத்தியக்காரா இந்த கோயிலைச் சுத்தினா தங்கம் கிடைக்கும்னா ஊரே இங்க தாண்டா இருக்கும். அப்புறம் கிடைக்கணும்னு இருக்கற தங்கம் எல்லாருக்கும்னு பிரிஞ்சு போய் உனக்கு ஒரு குந்துமணி கிடைச்சா என்ன பண்ணுவே?"

'ஓ நீங்க அப்படி வர்றீங்களா?"

"அது மட்டுமில்ல இது பரிகார ஸ்தலம். யாரோ பாவம் பண்ணிட்டு அதைப்போக்க இந்தக் கோயிலைக் கட்டியிருக்கா. அவாளுக்கே இந்தக் கோயிலோட சக்தி தெரியுமோ? தெரியாதோ?"

தீட்சதர் கல்வெட்டுச் செய்திகளின் மேல் இருந்து பார்வையை எடுக்காமல் பேசினார்.

"என்ன சாமி நீங்க.... தெரியாமத்தான் இப்படி கல்வெட்டாவே எழுதியே வெச்சிருக்காங்களா?"

பெருமைக்காகவும், சோதிச்சுப் பார்க்கவும் ஒருவித நம்பிக்கையோடையும் இந்த மாதிரி எழுதி வெச்சுட்றது ஒரு வழக்கம். ஏன்னா அப்பதான் கோயிலுக்கு கூட்டம் வந்தபடியே இருக்கும். கோயிலோட சான்னித்யம் கெடாதுங்கறது இதைச் செய்தவாளோட எண்ணம்."

"நான் தெரியாம தான் கேக்கறேன். இப்படி ஒரு செய்தி இருந்தும் பெருசா இங்க கூட்டம் இல்லையே ஏன்?"

"இதோ பார் மோகன். கோயில்ங்கறது ஆத்மாவுக்கான ஒரு பயிற்சிக் கூடம். இங்க நிம்மதி தேடி வரலாம். ஞானம் தேடி வரலாம். பொருள் தேடி வந்தா அதனால பின்னால சிக்கல்தான் வரும்னு இந்த அற்புதமான செய்தி வெளியே பரவாதபடி சிலர் பார்த்துண்டு இருக்கலாம்."

"என்னால இதை ஒத்துக்க முடியாது சாமி. இந்தப் பூமில நல்லவிதமா ஒருத்தர் வாழ்ந்து முடிய பொருளும் முக்கியம் தானே?" அவர்கள் இருவரிடமும் பேச்சு முற்றிக் கொண்டே போனது. அப்போது கோயில் குருக்கள் கையில் கற்பூரத் தட்டுடன் அவர்கள் அருகில் வந்தார். தீட்சதரை அவர் முன்பே அறிவார்.

"என்ன தீட்சதர்வாள்.... இங்க இந்த அம்பியோட நின்னுண்டு என்ன காரசாரமான பேச்சு?"

"எல்லாம் இந்தக் கோயில் பிரதாபத்தைப் பற்றித்தான். உண்மைல இந்தக் கோயில் எவ்வளவு சக்திவாய்ந்த கோயில் தெரியுமா?" மோகன் தன்னை மறந்து ஆரம்பித்தான்.தீட்தருக்கு அவன் அப்படிப் பேசியது பிடிக்கவில்லை.

"ஒண்ணுமில்ல குருக்களே.... அம்பிக்கு திடீர்னு இந்த சுவாமிமேல ஒரு பிரேமை. அதனா அதிகமா பேசறான்."

"நல்லதுதானே.... இந்த வயசுல யார் இப்ப கோயில் குளம்னு வரா. ஆனா பாருங்கோ.... என் சம்பளம் முப்பது வருஷமா அதே நூத்தியம்பது ரூபாய்தான்."

"கோயில் ஊழியமே அப்படித்தானே.... மாசாமாசம் நெல்மூட்டை வந்துடுமே..?"

"அட என்ன தீட்சதர்வாள் நீங்க.... நெல்ல புடைச்சு அரிசியாக்க இந்தப் பணம் போதலை தெரியுமா? எலக்ட்ரிக் பில்லே எனக்கு முன்னூறு நானூறு ரூவான்னாவரது...."

"சரிங்க குருக்களே.... அதையும் எப்படியோ கட்டிண்டு நீங்க ஊழியம் பண்ணத்தானே செய்யறேள்?"

"அட போங்கோண்ணா நீங்க வேற.... இங்க இருக்கற மனுஷாளுக்கும் கருணையில்லை. சுவாமிக்கும் கருணையில்லை" குருக்கள் பெரிதாக அலுத்துக் கொண்டார்.

"குருக்களே… நீங்க இந்த கல்வெட்டுச் செய்தியைப் படிக்கவே இல்லையா?" திரும்பவும் மோகன் அந்த விஷயத்துக்குள்ளேயே புகுந்தான்.தீட்சதர் இந்த முறையும் நெளிந்தார்.

"குருக்கள் நீங்க போங்கோ.... சன்னதில மனுஷா வந்துருக்கா பாருங்கோ...." என்று அவரைத் தள்ளிவிட்டார். அப்படியே மோகனைப் பார்த்து முறைத்தார்.

"என்ன சாமி.... நான் என்ன தப்பா பேசிட்டேன்."

"நீ ரொம்பவே அவசரப்படறே மோகா.... இதெல்லாம் பிரம்ம ரகசியம். கோயில்ல ஊழியம். பாக்கற குருக்களுக்கே இதைப்பத்தி பெரிசா தெரியல.... இதுல இருந்து உனக்கு இது பிராப்தம் உள்ளவனுக்குத்தான்னு தெரியலியா?"

"அப்படின்னா?"

"முதல்ல சிவராத்திரி அன்னிக்கு 108 பிரதட்சணம் பண்ணி முடிப்போம். நீயும் பண்ணு. நானும் பண்றேன். இரண்டு பேருக்கும் பொன் கிடைக்கறதான்னு பார்ப்போம். அப்புறமா மற்ற விஷயத்துக்கு வருவோம்.

"எனக்கு இதுல கொஞ்சம் கூட சந்தேகமே இல்லை. ஆமா அரசூர் நந்தி ரகசியம் பாக்கியிருக்கே?"

"அடுத்து நாம போகப் போறதும் அங்கதானே."

தீட்சதர் ஒரு முடிவோடு சொன்னது மோகனுக்குப் பெரிதாக புரியவில்லை. அவரிடமோ ஒரு புதையலை வசப்படுத்தி விட்ட ஒரு பாவனை!

அரசூருக்குள் நுழைந்தபோது ஊரே மாறி இருந்தது. யாரிடம் பார் ஒரு பரபரப்பு. அக்கம் பக்கத்து ஊர்களில் இருந்தெல்லாம் ஒரே கூட்டம். கிராமத்து ஜனங்களுக்கென்றே உருவாக்கப்பட்டது போன்ற பஜாஜ் எம் 80 வாகனம் தீட்சதரையும் மோகனையும் கடந்து போய்க் கொண்டிருந்தது. அதில் பின்னாலும் முன்னாலும் ஒரே கூட்டம் மோகனோடு சேர்ந்து உழவாரப் பணி செய்த ஒருவர் அவன் கண்ணில் பட்டார். அவர் கையில் சுவற்றை வெள்ளையடிக்க பயன்படுத்தும் மட்டையும் உரிக்கயிறும் இருந்தது.

"என்னங்க இது.... இது என்ன கைல மட்டை கயிறு?"

"எல்லாம் கோயில் சுவத்துக்கு வெள்ளையடிக்கத்தான்."

"அப்படியா சங்கதி. அப்ப இந்தக்கூட்டமே கோயிலுக்குப் போற கூட்டம் தானா?"

"இல்லையா பின்னே, அந்தக் கோயிலுக்குச் சொந்தக்கார பையனான வேலப்பன்கறவன் பைத்தியமா இருந்தவனாம்ல.... இப்ப புத்தி தெளிஞ்சு அவன்தான் கோயில் காரியத்தைப் பாக்கறான். அடுத்து நந்திகிட்ட எது வேண்டிக்கிட்டாலும் நடந்துடுதாம்ல" அவர் சொன்னது தீட்சதரைச் சற்றுச் சலனப்படுத்தியது.

"ஆமா.... அதுக்குள்ள அப்படி என்னவெல்லாம் நடந்துடுச்சாம்...."

"நீங்கவேற சிந்தாமணிங்கற பொம்பள பெரிய கைகாரியாம்ல.... அவளே புத்திமாறி இப்ப கோயிலே கதின்னு கிடக்கிறா. இன்னும் என்ன வேணும்" அவர் அப்படிச் சொல்லவும் மோகனுக்கு அடுத்து என்ன நடந்திருக்கும் என்பது தெரிந்து விட்டது.

"சாமி மத்த விஷயங்களை நான் சொல்றேன். வேலப்பன்கறவன் தான் என்னோட சேர்ந்து நந்தியை வலம் வந்தவன். சொல்லப்போன அவனை வெச்சுதான் நான் நந்தியோட சக்தியையே உணர்ந்தேன். என் எதிர்ல தான் அவன் அந்த சிந்தாமணி எங்கம்மா கால் விழனும்னு வேண்டிக்கிட்டான். இப்ப இவர் சொல்றபடி பார்த்தா, அது அப்படியே பலிச்சிட்டது தெரியுது. எனக்கும் என் அக்காவோட பிரச்சினை தீர்ந்தாச்சு."

அங்கேயே அப்போதே மோகன் மளமளவென்று போட்டு உடைத்துவிட்டான். தீட்சதர் முகம் பெரும் பரபரப்புக்கு மாறியது. அப்படியே நடந்து முள்ளுக் காட்டுப்பக்கம் போனபோது காடே தரைமட்டமாகி பளிச்சென்று நிலப்பரப்பு தெரிந்தது. அதில் ஒரு வழித்தடம் உருவாகி அது நேராக கோயிலில் சென்று முடிந்தது. அங்கே ஒரு ஐம்பது அறுபது பேர் பலவிதமான வேலைகளைச் செய்து கொண்டிருந்தனர்.

சிலர் நந்தியை பக்தியுடன் சுற்றி வந்தபடியே இருந்தனர். சில தினங்களுக்கு முன் கண்ணில் பட்ட அடர்ந்த முள் காட்டிற்கும் தற்போது தெரியும் தெளிவான சூழலுக்கும் இடையே மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம்.

"சாமி.... நிஜமா சொல்றேன். எனக்கு இப்ப எவ்வளவு பிரமிப்பா இருக்கு தெரியுமா?" என்று கண்களை அகட்டிவிரித்தான் மோகன்.

"எனக்கு இப்பதான் கடுங்கோபமா வருது மோகன்."

"என்ன சாமி சொல்றீங்க."

"பின்ன என்னப்பா.... இப்ப இங்க வெளிப்பட்ற மனுஷசக்தி முன்னாலையும் இருந்தது. ஆனா அதுக்குத்தான் எவ்வளவு சுயநலம்."

'வாஸ்தவம்தான்.... ஆனா இப்பவாவது திருந்தினாங்களே..... அந்த வகைல நல்லதுதானே?"

"பைத்தியக்கார இது ஆபத்து."

"ஆபத்தா?"

"பின்ன.... நந்திகிட்டவேண்டிக்கறது அப்படியே நடக்கத் தொடங்கிட்டா அப்புறம் என்னாகும் தெரியுமா?"

"என்னாகும் சாமி?"

"உனக்கு அதை எல்லாம் புரிஞ்சுக்கற சக்தி கிடையாது. மணிமேகலை கைல இருந்த அட்சய பாத்திரம், வானத்துல பறந்த மயிற்பொறி, கண்ணகியோட காற்சிலம்பு, சீதையோட கணையாழி இதெல்லாம் இப்ப எங்க இருக்குன்னு யாருக்காவது தெரியுமா?"

"இந்த நந்திக்கும் அதுக்கும் என்ன சம்பந்தம்?"

"உனக்குப் புரியாது.... எதுவுமே புரியாது. புரியாத வரை ஒருவகைல நல்லதுதான். ஜனங்களுக்கு வேகமாக அருள் கிடைக்கறது தான் நல்லது. ஆனா பொருள் கிடைக்கக் கூடாது. அது மனித வாழ்க்கையோட அடிப்படையையே மாத்திடும்."

தீட்சதர் எதனால் அப்படிப் பேசுகிறார் என்பது மோகனுக்குப் புரியாத அந்த நொடியில் வேலப்பனும் எதிர்ப்பட்டான்.

"வாங்க சார்" என்று சிரித்துக் கொண்டே அருகில் வந்தான்.

"வேலப்பன் என்ன இது மாயம்?"

"மாயம்தான் சார்.... இவ்வளவு நாளா கைல வெண்ணெயை வெச்சுகிட்டு நெய்க்கு அலையறவங்களா இருந்துட்டோம்.இப்ப என்னால இந்த விஷயம் ஊர் உலகத்துக்குத் தெரிஞ்சு, பாருங்க எவ்வளவு கூட்டம்?"

"நான் கூட கேள்விப்பட்டேன். நீங்க சாமிகிட்ட வேண்டிகிட்டது அப்படியே நடந்துடுச்சாமே."

"ஆமாம் சாமி. இன்னிக்கு இப்பதான் புதுசா ஒரு விஷயத்தை சாமிகிட்ட வேண்டிகிட்டிருக்கேன்."

"என்ன அது."

"எங்க சொத்து அவ்வளவையும் எழுதி வாங்கின அந்த போலி வக்கீலும், பணக்காரனும் தண்டிக்கப்படனும். நீயே அவங்களுக்குக் கூலி கொடுக்கணும்னு வேண்டிக்கிட்டேன்."

"அவங்க இப்ப எங்க இருக்காங்க."

"அவங்க ஊரைவிட்டே ஓடிட்டாங்க. எங்கன்னே தெரியல."

"அதான் ஓடிட்டாங்களே.... விட்டுட வேண்டியது தானே?"

"சும்மாவா ஓடினாங்க. பல லட்ச ரூபா பணத்தோடல்ல ஓடியிருக்காங்க. வேற ஒரு கோஷ்டி அவங்க கிட்ட பலமா ஏமாந்துருக்காங்க."

"அப்ப அவங்க இன்னொரு கோஷ்டியை ஏமாத்தறத்துக்குள்ள தண்டிக்கப்படறது தான் சரி"

"ஆமா இவர் யார்?"

"இவர் தீட்சதர், பெரிய சிவபக்தர்."

"நந்தி சாமி பத்தின ரகசியம் இப்படி ஊர் பூரா தெரியறது நல்லது இல்லேங்கறது இவரோட அபிப்பிராயம்."

"எதனால அப்படி?"

"இதனால நந்திசாமிக்குத்தான் ஆபத்துங்கறது இவர் அபிப்ராயம்."

"ஆச்சரியமாயிருக்கே. சாமியாலதான் தப்பு பண்றவங்களுக்கு ஆபத்து வரும். சாமிக்கே கூடவா ஆபத்து வரும்?"

"இவர் வரும்னு சொல்றாரு...."

மோகன் அழுத்தமாகச் சொன்னான். வேலப்பன் பதிலுக்கு தீட்சதரைப் பார்த்தான். தீட்சதர் நந்தியையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"இல்லீங்கநான் அடிப்படி நினைக்கல. நாங்க இனி இங்க கோயில்கிட்டதான் குடியே இருக்கப் போறோம். நந்திசாமிக்கு எந்த ஆபத்தும் வர நான் விடமாட்டேன். நம்மவரைல இந்த சாமி உலக அதிசயமில்ல...." வேலப்பன் வியப்புடன் கைகளைக் கூப்பினான்.

# 13

ஒரு நல்லது என்றால் ஒரு கெட்டது என்பதும் கூடவே இருக்கும். அதுதான் கலியுகத்தின் குணம். எவ்வளவுதான் அழகான உருவமாக இருந்தாலும் அவர் நிழல் கருப்பாகவே இருக்கும். தீயது இருந்தால் அன்றி நல்லதன் அருமை பெருமைகள் அறியப்படாது.

கைகளும் கால்களும் எவ்வளவு சக்தி கொண்டதாக இருந்தாலும் அதன் அருமை தெரிய அவைகளுக்கு ஒரு பங்கம் வர வேண்டும். ஒரு நகச் சுத்தி வந்து நீங்கிய உடன் முன்பு இருந்த அதே விரலே மிகமிக சுகமான ஒன்றாக நமக்குத் தோன்றும். ஆனால் அங்கு ஒரு புண் வருவதற்கு முன் அதை நாம் உணர்ந்தே இருக்க மாட்டோம்.

கடவுள் நெறி சார்ந்த விஷயங்களிலும் நாத்திகம் சார்ந்த விஷயங்களால் தான் ஆன்மிகம் பெரிதும் பலமும் மதிப்பும் கொள்கிறது.

அருள் எனும்போதே இருள் என்பதும் உடன் தொக்கி நிற்கிறது. அருளுக்கு எதிரான விஷயங்களும் அருளுக்கு இணையாகப் போட்டியிடும்.

மும்பை கடற்கரைப் பகுதி!

ஓரம்கட்டி நின்ற படகுக்கார் ஒன்றில் இருந்து வக்கீல் வாதிராஜும் அந்த பணக்கார பெரிய மனிதரும் இறங்கி நின்றனர். காற்று சிலுசிலுவென்று வீசிக் கொண்டிருந்தது. கடற்கரை முழுக்க மும்பையின் படித்த மக்கள் கூட்டம். அங்கங்கே மட்டக் குதிரைகளும், சில மாடுகளும் கூட திரிந்து கொண்டிருந்தன.

வாதிராஜ் ஒரு சிகரெட்டை எடுத்து பற்றவைத்துக் கொண்டார். அந்த பணக்கார மனிதர் ஒரு சுருட்டை பற்றவைத்துக் கொண்டார்.

"டெல்லில ஒரு சொத்து வழக்கு.... கிட்டத்தட்ட அரசூர் கேஸ் மாதிரியே. என் கவனத்துக்கு வந்துருக்கு. உள்ள நுழைஞ்சிடலாம்ல?" வாதிராஜ் புகை

கக்கியபடி கேட்க, அந்த மனிதரும் ஆமோதிப்பாய் சிரித்தார். அப்போது வாதிராஜ் செல்போன் சிணுங்கியது.

"யார்னு பார்" சுருட்டு புகையுடன் அவரும் கூற, வாதிராஜ் காது கொடுத்தான்.

"என்ன வாதி?"

"ஒண்ணுமில்ல பிரதாப்."

"பேரைச் சொல்லாதே. என் யார் காதுலயும் விழக் கூடாதுன்னு எத்தனை தடவை சொல்லியிருக்கேன்."

"இங்க யாருப்பா இருக்கா...."

"சரி விஷயத்துக்கு வா. எங்க இருந்து போன்?"

"அரசூர்ல இருந்துதான். அங்க நம்ம ஆள் ஒருத்தன் இருக்கான். சிந்தாமணி மேல ஒரு கண் வைக்க சொல்லியிருந்தேன். அவ நிச்சயம் போலீஸ் கிட்ட போவா... கோர்ட்டுக்கும் போவா. அப்ப அவளைச் சமாளிக்கணும்ல."

"புல்ஷிட் விஷயத்துக்கு வா. அவ என்ன போலீசுக்குப் போய்ட்டாளாமா? ஸ்டேஷன்ல எஃப். ஐ.ஆர் போட்டாங்களாமா?"

"அது எப்படி பிரதாப் சாத்யம். ஸ்டேஷனை நல்லா கவனிச்சட்டுதானே வந்திருக்கோம். அவ போலீசு கிட்டப் போகல. பதிலுக்கு ஒரு நந்திகிட்ட போயிருக்கா."

"வாட்?" பிரதாப் எங்கிற அந்தப் பெரிய மனிதனிடம் ஒரு நெற்றி சுருங்கிய வியப்பு.

"யெஸ்.. இப்ப அரசூர்ல ஒரு நந்திதான். ஃபேமஸ். அதுகிட்ட யார் என்ன வேண்டிக்கிட்டாலும் நடந்த்டுதாம். பைதபை சிந்தாமணி அந்த திரௌபதி கால்ல போய் விழுந்து எல்லாரும் ஒண்ணாயிட்டாங்க. கோவிந்தராஜ

உடையாரை மயக்கி ஏமாத்தி எழுதி வாங்கின சொத்து அதுன்னு கோர்ட்ல சிந்தாமணி சொல்லப் போறாளாம்."

"இப்படி ஒரு புது கோணத்தை நாம யோசிச்சே பார்க்கவில்லை."

"ஆமா... சிந்தாமணி நம்மள துரத்துவான்னு பாத்தா அப்படியே பல்டி அடிச்சுட்டாளே..."

"அது மட்டுமில்ல. நம்ம உயிருக்கு நந்தியால ஆபத்து வருமாம், நம்மாள் எச்சரிக்கையா இருக்க சொல்லியிருந்தான்.:

"நந்தி யூமின் காளைமாடு."

"ஆமாம்."

"என்ன பேத்தல் இது. அதோ அங்க கூட ஒரு மாடு திரியுது பார். அதுவும் காளைதானே?"

"ஆமாம்... கோயில் மாடுங்க. இப்படிதான் திரியும்."

"உன் ஆள் என்ன உளருவாயனா. நாம எந்தக் காலத்துல இருக்கோம். உங்க நந்தி சாமி என்ன சி.பி.ஐ.யா இல்ல போலீஸா...நம்மைத் தேடி வந்து தண்டிக்க?"

"பிரதாப். அவன் சொல்ல வேண்டியத சொல்லிட்டான். நாம நம்ம பாதைல போவோம். நமக்கு எப்பவும் ஒரே கொள்கைதான். ஏமாறவங்க இருக்கற வரை ஏமாத்தற நாமும் இருப்போம். நல்லா ஏமாத்துவோம்."

"சரியா சொன்னே.... இப்ப பார் வேடிக்கையை...." பிரதாப் என்கிற அந்த மனிதர் சாய்ந்து நின்ற காரை விட்டு விலகி சுருட்டு புகை உதடுகளில் பிரிய மேய்ந்தபடி இருந்த மாட்டை நோக்கிச் சென்றார். வாதிராஜிக்குப் புரிந்துவிட்டது.

"பிரதாப். அந்த மாட்டை என்ன பண்ணப்போறே.... அது நம்ம வில்லன் இல்ல?"

"நான் இப்ப இந்த மாடுக்கு என் சுருட்டுல சூடு வைக்கப் போறேன். நீ உன் செல்போனில் போட்டோ எடுத்து அதை அரசூருக்கு அவன் செல்லுக்கு டிரான்ஸ்ஃபர் பண்ணு. அங்க இருக்கற அந்த சிந்தாமணிக்குநாம எப்படின்னனு தெரியட்டும்"

அவரிடம் ஆவேசம் அலையடித்தது.

"ஏய் வேண்டாம்பா.... அவனோட உளறலை நாம இவ்வளவு சீரியஸா எடுத்துக்கக் கூடாது. அந்த மாடு உன்னாலையே மிரண்டு முட்டிட போகுது."

"நான் ஜல்லிக்கட்டில் எவ்வளவு காளைகளை அடக்கினவன் தெரியுமா?"

பிரதாப் மாட்டை நெருங்கி அதன் பின் பாகத்தில் சுருட்டுக்கனல் பாகத்தை வைக்க அது அப்படியே மிரண்டு திரும்பியது. அதன் கண்களில் அப்படி ஒரு ஆவேசம். மூச்சுதுவாரத்தில் அனல் வீச்சு, கொம்பிரண்டும் கூர்மையாக விளைந்து கிடந்தது.

"என்ன பாக்கறே.... கமான்! நந்தியாம்ல நீ.... எங்க வா பாப்போம் கமான்'" பிரதாப் ஒரு பைத்தியக்காரன் போல கையை ஆட்டி அதை அழைக்க, அது அதன் பின் ஒரு வினாடி கூட தாமதிக்கவில்லை. ஒரே பாய்ச்சல்... ஒரே குத்துதான். ஒரு சுழற்றில் அது அந்த மனிதரைத் தூக்கி வீச எறிந்துவிட்டது. பார்த்தபடி இருந்த வாதிராஜுக்குப் பகீர் என்றது. அடுத்த குறி வாதிராஜிக்குதான்!

அது கச்சிதாமாக வாதிராஜை நோக்கி ரத்தக் கொம்புகளுடன் ஓடத் தொடங்கியது.

வாதிராஜும் ஓட ஆரம்பித்தார். "நோ... நான் இல்ல."

ஓட்டமான் ஓட்டம் வாதிராஜிடம். மும்பை கடற்கரைக் கூட்டம் தன் வாழ்நாளில் காணக்கிடைக்காத காட்சியாகத்தான் அதைப் பார்த்தது.

சிறிது தூரம் வரை துரத்திச் சென்ற அந்த காளை அதன்பிறகு துரத்தவில்லை. ஒரு இடத்தில் நின்று நிமிர்ந்து வாதிராஜ் கூட்டத்துக்குள் புகுந்து ஓடுவதையே பார்த்தபடி நின்றுவிட்டது. தூரத்தில் பிரதாப் உடல் பிணமாக கடற்கரை அலைகளால் அலைக்கழிக்கப்பட்டபடி இருந்தது.

மோகன் ஓடி வந்த வேகம் தீட்சதரைத் திகைக்க வைத்தது.

"சாமி... இந்த அதிசயத்தைக் கேட்டீங்களா... அரசூர்ல நம் எதிர அந்த வேலப்பன் சொன்ன மதிரியே அடுத்த விஷயமும் நடந்துடிச்சு"

"என்னப்பா அது?"

"அவங்க சொத்தை ஏமாத்தி எழுதி வாங்கின ஒரு போலி பணக்காரனை மும்பை பீச்சுல திரிஞ்சிகிட்டிருந்த ஒரு காளைமாடு கொன்னுடிச்சு. இதைப் பார்த்த வக்கீல் அலறி அடிச்சுகிட்டு ஓடினாராம். அங்க பிடிச்ச ஓட்டம் அரசூர் கோயில்ல நம்ம நந்திகிட்டதான் முடிஞ்ச்சிருக்கு. நந்தி கால்ல விழுந்து நான் செஞ்சது தப்புதான். என்னை மன்னிச்சிடுன்னு ஒரே கதறலாம்.... அப்படியே அவனே கோர்ட்டுக்குப் போய் சொத்தை தப்பா எழுதி வாங்கினதுக்கு பரிகாரம் பண்ணிட்றேன்னும் சொல்லிட்டானாம்."

"நிஜமாவா?"

"என்ன சாமி அப்படிச் சொல்லிட்டீங்க. விஷயம் இப்ப டி.வி. பத்திரிகை வரை போயிடுச்சு. இனி அரசூர் திருப்பதி, பழனியைத் தூக்கி சாப்பிடப் போகுது பாருங்க"

மோகன் பொங்கி வழிந்தான்.

"அப்புறம் இன்னொரு விஷயம் சொல்ல மறந்துட்டேன்" என்றான்.

"என்னப்பா?"

"நேத்து சிவராத்திரி நம்ம ஊர் கோயிலை 108 முறை பிரதட்சணம் வந்தேன்."

"அப்புறம்."

"இது அடுத்த அதிசயம். ஒரு டி.வில நடக்கற தங்கவேட்டை நிகழ்ச்சியிலே கலந்துக்க வாய்ப்பு வந்திருக்கு, ஜெயிச்சா ஒரு கிலோ தங்கம் சாமி.... கோயிலை சிவராத்திரில வலம் வந்தா தங்கம் கிடைக்கும்கறதும் உறுதியாயிடிச்சு பாத்தீங்களா?" மோகன் உற்சாகமாகப் பொங்கி வழிந்துவிட்டு அந்தப் பரவசம் குறையாமல் விலகியும் சென்றான்.

ஆனால் தீட்சதரோ இனி தாமதிப்பது ஆபத்து என்கிற முடிவுக்கு வந்துவிட்டார்.

மறுநாள்!

பொழுது விடிந்த போது அரசூரே அதிர்ந்து போனது. கோயிலில் நந்தி இருந்த இடத்தில் பீடம் மட்டும்தான் இருந்தது. நந்தி சிலையைக் காணவில்லை. வேலப்பனும் திரௌபதியும் கோயிலைச் சுற்றிச் சுற்றி வந்து தேடினார்கள். எப்படித் திருட்டுப் போனது. யார் திருடியது என்றும் தெரியவில்லை. ஆனால் மோகனுக்கு மட்டும் சந்தேகம். செய்தியறிந்த அவன் நேராக தீட்சதரிடம் வந்துவிட்டான்.

"சாமி..."

"என்னப்பா?"

"அரசூர் கோயில் நந்திசிலை திருட்டுப் போயிடிச்சாம்."

"அப்படியா?"

"என்ன சாமி அப்படியா.... உங்க வேல தானே?"

அவன் ஆவேசமாகத்தான் கேட்டான். ஆனால் தீட்சதர் சிரித்தார்.

"ஆரம்பத்துல இருந்தேஉங்களுக்கு அந்தக் கோயில் புகழ் அடையறது பிடிக்கல. ஆபத்து அது இதுன்னிங்க. நிச்சயம் சொல்றேன் இது உங்க வேலைதான்."

"சரிப்பா.... இப்ப என்ன பண்ணப் போறே?"

"இப்பவே போய் உண்மையை வேலப்பன் கிட்டயும், போலீஸ் கிட்டையும் சொல்லப் போறேன்."

"அப்புறம்."

"அப்புறம் என்ன விழுப்பரம். உங்களுக்கு எதுக்கு இந்த கெட்ட புத்தி? ஜனங்களுக்கு நல்லது நடக்கக் கூடாதா. நந்திக்கும் மக்களுக்கும் நடுவுல நீங்க யார் சாமி அதைத்தடுக்க?"

"மோகன்.... முதல்ல கொஞ்சம் அமைதியா இரு. நான் சொல்றத காது கொடுத்துக் கேள். பிறகு முடிவுக்கு வா."

"என்ன பெரிய முடிவு.... நீங்க தான் எனக்கு நல்ல வழி காட்டினவர். நீங்களே இப்படி திருட்டுத்தனம் பண்ணா எப்படி?

"பைத்தியக்காரா.... தங்கம் வைரம்லாம் கருங்கல் செங்கல் மாதிரி இருக்காது. அது பெட்டிக்குள்ள பத்திரமா தான் இருக்கணும்."

"இது சாமர்த்ய பேச்சு. நந்தியை நீங்க எடுத்துகிட்டு வந்து வெச்சுகிட்டு நீங்க மட்டும் விரும்பியத அடையலாம்னு பாக்கறீங்களா?"

"பைத்தியக்காரா.... அந்தக் கல்வெட்டு, உன்னைத் தூண்டிவிட்டது எல்லாமே இடிஞ்ச கோயில் நல்லவிதமா கட்டப்படனும், ஆறுகாலமும் பூஜை நடக்கணும்கறதுக்காக...."

"எல்லாம் சரி.... நந்தியை நீங்க அபகரிக்கக் காரணம்?"

"உண்மையில நந்தி எந்தக் காரியத்தையும் செய்யல. நந்தி அருளால அந்த காரியங்களைச் செய்தவர் வேற ஒருவர்."

"இது என்ன புதுக்கதை?"

"கதை இல்ல. என் கூட வா உனக்கு உண்மையைப் புரிய வைக்கறேன்." தீட்சதர் அந்த நொடியே அவனுடன் கிளம்பிவிட்டார். அவனும் அவரைத் தொடர்ந்தான்.

அது ஒரு அடர்ந்த காட்டுப் பகுதி. கிட்டத்தட்ட மோகன் சீர்திருத்திய வேலப்பனின் முள்காட்டை விடவும் கூடுதலாக முள்ளும் மரமுமாக இருந்தது.

"இப்ப இந்தக் காட்டுக்கு எதுக்கு வந்திருக்கோம்." என்று நடந்தபடியே மோகன் கேட்டான். பதிலுக்கு தீட்சதர் ஒரு இடத்தை நோக்கிக் கை காட்டினார். அங்கே ஒரு அழகான தடாகம். தடாகத்தில் தாமரைக் கூட்டம். தடாகக்கரையில் ஒரு இடிந்த சிவாலயம். ஆலய முகப்பில் அரசூரில் அவன் பார்த்த அதே நந்தி.

"சாமி..... நந்தி!"

"நந்தியேதான். அங்க அரசூர்ல இருந்த அதே நந்தி."

"இங்க இப்படி?"

"கிட்டப்போ... தானாபுரியும்" அவனும் அருகே சென்றான். கிட்டே செல்ல செல்ல "ஓம் நமச்சிவாய.... ஓம் நமச்சிவாய....." என்கிற ஒரு முணுமுணுப்புக் குரல் காதில் கேட்டது.

நந்தி சிலைக்குக் கீழே ஒரு இரட்டைத் தலை நாகம் இருந்தது. அதுதான் உச்சரித்துக் கொண்டிருந்தது.

அதைப் பார்த்த நொடி மோகனுக்கு உடம்பெல்லாம் தந்திக் கம்பிபோல நடுங்க ஆரம்பித்து விட்டது.அவன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அந்த சர்பம் ஒரு வயதான சாமியாருக்கு மாறியது. மோகனுக்கு தான் காண்பது கனவா இல்லை, நிஜமா என்கிற சந்தேகம் கூட....

அந்தசாமியாரும் பேச ஆரம்பித்தார்.

"தம்பி நான் ஒரு சர்பயோகி.... பாழ்பட்ட சிவாலயங்களைச் சீர்படுத்த என் தவசக்தியைப் பயன்படுத்தறவன். அரசூர்ல நடந்த அவ்வளவு அற்புதங்களும் என்னாலதான் நடந்தது. ஆனா எனக்குள்ளையே அந்த ஈசனும் நந்தீஸ்வரனும் இருக்காங்க.

அஞ்சும் மூணும் கூட்டினா எட்டு வரும். யார் எங்க எப்ப கூட்டினாலும் எட்டு வரும். ஏன்னா அது மாறாத கணக்கு. மாறக்கூடாத கணக்கு. அதேமாதிரிதான் சில செயல்பாடுகளும். எதை எப்படி செய்தா வெற்றி கிடைக்கும்னு நான் பல வருடம் தவம் செய்து கண்டு புடிச்சேன். அதை யார் எங்க செய்தாலும் வெற்றி கிடைச்சே தீரும். நீயும் அப்படிச் செய்தே.... அந்த வேலப்பனோட விதி அவனும் அப்படியே செய்தான். ஆனா உங்களுடைய அந்த ரகசியம் பட்டவர்த்தனமாகி மனித சமுதாயம் பூராவும் தெரிஞ்சிடும். ஒரு ஆபத்து வந்தப்போ அதைத் தவிர்க்க நான் நந்தியோட இந்த இடிஞ்ச சிவாலயத்துக்கு வந்துட்டேன்.

உண்மைல உங்க மூலமா அரசூர் கோயில் புதிய பொலிவடையணும்கறது விதி. அது நடந்தாச்சு. மற்றவர்களுக்கு உங்க விதிப்பாடு கிடையாது. அதனால நான் அங்க இருந்து கிளம்பிட்டேன்.

இனி நந்தி ரகசியம் பற்றி மீடியாக்கள் தப்பா பேசும். உன்னையும் வேலப்பனையும் கூட தப்பா விமர்சிப்பாங்க. உங்களுக்குக் கிடைச்ச வெற்றிகளைக் கூட திட்டமிட்ட நாடகம்னு வர்ணிப்பாங்க. அது நாடகமா உண்மையான வெற்றியான்னு உனக்கு மட்டும் தெரிஞ்சா போதும். ஊர் உலகத்துக்குத் தெரிஞ்சு என்ன ஆகணும்?

எப்பவும் அற்புதங்கள் மலிவா கிடைச்சுடக் கூடாது. விதியுள்ள, நல்ல பக்தியுள்ளவர்கள் இங்க என்கிட்ட வந்து அடைய வேண்டியதை அடைவாங்க. மற்றவர்களோட கர்மத்தை அற்புதங்களால் மாற்ற நினைக்கறது இயற்கைக்கு எதிரானது. நான் சொன்னதைப் புரிஞ்சுக்க உன்னால இப்ப முடியாது. ஆனா போகப் போக உனக்குப் புரியும். இருந்தாலும் என் சந்திப்புக் கூட உன் மனசுல ஒரு கனவாவே இருக்கட்டும். அது தான் இயற்கைக்கும் நல்லது."

அவர் கைகளை உயர்த்தி ஆசீர்வதித்தார். அப்படியே திரும்பவும் சர்பமாக மாறி அங்கிருந்தும் ஊர்ந்து மறையத் தொடங்கினார்.

கண்களைக் கசக்கிக் கொண்டான் மோகன், தூக்கம் கலைந்து போனது கண் விழித்தவனுக்கு அப்போது தான் தான் கண்ட அவ்வளவும் கனவு என்பதே தெரிந்தது.

அப்பாடா! அவன் நெஞ்சு பெருமூச்சு ஏறித்தழைத்தது. எழுந்து ஹாலுக்கு வந்தான். ஹாலில் அன்றைய தினசரி பேப்பர் விழுந்து கிடந்தது. அதன் தலைப்புச் செய்தியே அவன் கண்களைக் கவ்வியது.

'அரசூர் அதிசய நந்திசிலை மாயம்!'

செய்தியைப் படித்தவனுக்குப் பகீர் என்றது.

ஒரு வேளை அந்த செய்திக்கான விடை தான் கனவா. இல்லை தான் கண்ட கனவுக்கு நிஜத்தில் நிகழ்ந்த மாயத்துக்கும் எந்தச் சம்மந்தமும் இல்லையா?

குழம்பத் தொடங்கினான். கூடவே பெரிய அளவில் வருந்தவும் செய்தான். ஒரு நல்ல வேலை கேட்டு நந்தியை வலம்வர எண்ணியிருந்தான். அதிலே மண் விழுந்து விட்டதாகத் தோன்றியது.

அதே சமயம் எல்லாவற்றையும் நந்தியைச் சுற்றியே பெற்றுவிட்டால் தன் முயற்சி, தன் செயல் என்று இல்லாமல் போய், தான் ஒரு சோம்பேறியாய், வெறும் சுகபோகியாய் மாறிவிடும் ஆபத்து இருப்பதும் அப்போது புரிந்தது.

இந்த ஆபத்தைத் தான் தீட்சதர் அன்று ஆபத்து என்றாரா?

அவனுக்குள் மேலும் குழப்பம்....

உங்களுக்கு?

சுபம்